பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

நான் ஒரு மானுடன்: நான் மதியாதனம்
மானுட வாழ்வில் இலை.

8863

II சித்திரை—1925 காசு-1

புதிய ஆண்டு

பஞ்சாமிருதம் சந்தாதார்கள்,
வாசகர், மற்ற நேசர்கட் கெல்லாம்
ஆசிரியன் அகங் கனிந்த வந்தனம்!

இன்று தொடங்கிய ஆண்டிலே, உங்கள்
உள்ளங்களிலும் இல்லங்களிலும்
உண்மை ஒளிர்க! அன்பு பொலிக!
அறிவு வளர்க! ஒற்றுமை உயர்க!
உழைப்பெலாம் உரிய பயன்களை உறுக!
உங்கள்
உதவியினாலும் உயர் மதியாலும்
உறுதியும் ஊக்கமும் ஓங்கி, என் உள்ளம்,
உவத்தல் காய்தல் ஒழி நடுநிலை நின்று,
அஞ்சுதல் அழுக்காறு ஆதி இன்றி,
உண்மையே ஓதும் திண்மையில் ஊன்றி,
இந்த நம் முயற்சி,
அரிய பெரிய பயன்களை அளிக்குக!
இனிய நம் தமிழ்மொழி கனிநலம் எய்துக!
இந்தியா நம் தாய்,
கடந்த ஆண்டினும் கதியினில் முடுகி,
நன்மைகள் சிறந்து, புன்மைகள் துறந்து,
வெற்றியின் வேராம் ஒற்றுமை கூர்ந்து,
தன்னுரிமைத் தனி நாயகம் தாங்கி,
முன்னாள் புகழினும் முன்னுறு புகழினை
இந்நாள் எய்தி இலங்குக!
மன்னுயிர் எல்லாம் மகிழ்ந்து வாழ்க வ!

சென்னை மாகாணத்தின் வருமானமும் செலவும்

ஸ்ரீ. ராவ் பகதூர் T. A. இராமலிங்கம் செட்டியார், B.A., B.L., M.L.C.,

நம்முடைய கவர்ன்மெண்டார் தங்களுடைய செலவை எப்படிச் செய்கிறார்கள் என்று தெரியவும், நம்முடைய கவர்ன்மெண்டின் தற்கால நிலைமையையும் அவர்கள் இனி மேல் செய்யக் கூடியதையும் தெரிந்து கொள்ளவும், அவர்களுடைய வருஷவாரிக் கணக்கைக் கவனித்துப் பார்க்க வேண்டியது அவசியம். நம்ம தேசத்து ஜனங்கள் கவர்ன்மெண்டார் கணக்குகளின் முக்கியத்தை உணர்ந்து பரிசோதித்துப் பார்க்கிறதில்லை. நான் கீழே எழுதும் சில விஷயங்களிலிருந்து, இப்போது நம்முடைய கவர்ன்மெண்டின் நிலைமை எப்படி யிருக்கிற தென்பதும், அவர்கள் எம்மாதிரியாக நம்முடைய காரியங்களை நடத்திவந்திருக்கிறார்களென்பதும் ஒருசிறிது தெரியும்.

1916—1917-ம் வருஷத்திலே நம்முடைய மாகாணத்தில் கவர்ன்மெண்டாரின் மொத்த வருமானம் ரூ. 1362 லக்ஷம்; செலவு ரூ. 1143 லக்ஷம்; செலவுக்குமேல் 219 லக்ஷம் ரூபா மீதியிருந்தது. 1925—1926-வருஷத்தின் பட்ஜெட்படி, நம்முடைய மாகாண கவர்ன்மெண்டுக்கு வருமானம் ரூ. 1652 லக்ஷம்; செலவு ரூ. 1720 லக்ஷம்; அதாவது, வரவுக்குமேல் செலவு 68 லக்ஷம் ஆகிறது. ... 9-வருஷங்களில் வரவு அதிகப்பட்டது 290 லக்ஷம். இதில், ஸ்டாம்பு, கோர்ட்டு பீஸ், ரிஜிஸ்திரேஷன், இவைகளுக்கு அதிக வரி போட்டதும் சேர்ந்திருக்கிறது. அதிக வரியைக் கழித்துவிட்டால், வருமானம் அதிகமா யிருக்கிறது ரூ. 2 கோடிக்குக் கொஞ்சம் கூட இருக்கலாம். ஆனால், செலவோ என்றால், ஆறு கோடிப் பக்கம் அதிகமா யிருக்கிறது. இது மாத்திரமல்ல, அனேக வழிகளில் செலவு அதிகப்பட்டுக் கொண்டு போகக்கூடிய சில உத்தரவுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. லீ கமிஷன் ரிபோர்ட்டை இந்தியா மந்திரி ஒத்துக்கொண்டிருப்பதில், பெரிய உத்தியோகஸ்தர்களின் பென்ஷன் அதிகமா யிருப்பதற்கும், அவர்கள் ...க்குப் போகும் செலவுக்குக் கொடுப்பதற்கும், அடுத்த வரு...லேயே 10 லக்ஷ ரூபா அதிகச் செலவு ஆகும். போகப் ...ந்தச் செலவு அதிகப்படக் கூடியதாய் இருக்கிறது.

8363

மாகாண ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களுக்கு வருஷந்தோறும் சம்ப
ளம் அதிகப்படுத்திக் கொடுக்கிற ஏற்பாட்டுப்படி, வருஷந்தோறும்
செலவு அதிகரித்துக் கொண்டே சில வருஷங்களுக்குப் போகும்.
குற்றவாளிகளை அந்தமான்ஸுக்கு அனுப்புவதை நிறுத்தி,
அவர்களுக்குப் புதுஜா... கட்டவும், அதன் செலவுக்கும், கிருஷ்ணை
...ல்லாவை இரண்டாகப் பிரிக்கவும், வருஷவாரிச் செலவு ரூ. 10
...ஷம் வரை ஆவதோ... கட்டடங்களுக்காகப் பெருந்தொகை
...விடவும் நேரிடும். ...ாங்கியிருக்கிற கடனைத் தீர்க்க, வருஷம்
...ஞ்சம் எடுத்துவைக்கவும், வட்டி கொடுக்கவும், தொகை
...டும். இம் மாதிரியாக அடுத்த வருஷங்களில் செலவு அதி
...க் கொண்டே போவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.
...வக் குறைத்து விட்டோம்' என்று கவர்ன்மெண்டார்
... சொல்லிக் கொள்ளுகிறார்களே, அது சரியா?

மாத்திர மல்ல; இப்போது சட்ட சபையில் ஒத்துக்
...பட்ட பட்ஜட்படி, 926-ம் வரு ஏப்ரல்மீ 1உ மாகாண
...ண்டாருக்கு இருக்கக்கூடிய கடனில், ரூ. 230 லக்ஷம்
சாதாரணச் செலவுக்குச் செலவு செய்ததாகும்; அதா
...புக்குமேல் கடன் வாங்கிச் சாதாரணச் செலவுகள் கூடச்
...க்கிறார்கள்: இது திருப்திகரமா யிருக்கிறதா?

...ங்களுக்கு ஹிதம் செய்யக்கூடியவைகளைச் செய்யும்படி
...ா தெல்லாம், இந்தியா கவர்ன்மெண்டாருக்குக் கப்பம்
...ால் ஒன்றும் செய்யக்கூட வில்லை என்றும், அது குறை
...செய்வதாகவும் சொல்லிக் கொண்டிருந்தார்களே; இந்தக்
...ந்து என்ன தெரிகிறது? மற்றக் காரியங்களுக்காக
...சய்யாம லிருந்தார்களா? இப்போது 126 லக்ஷம்
...றக்கப்பட்டிருக்கிறதே, அதை என்ன செய்யப்
...அதையும் சேர்த்துச் செலவழிக்க வல்லவோ முன்
செய்துவிட்டார்கள். இது நியாயமா?

செலவுகள் செய்யப்படு...தைக் கொஞ்சம் கவனித்
...ள் விஷயத்தில் எவ்வளவு கவனிக்கிறார்க ளென்பது
...டைசியாக நமக்குக் கிடைத்திருப்பது, 1923—1924
...ணக்கு. அந்தக் கணக்கிலிருந்து, அந்த வருஷத்திய
...ண்ட தொகையில், கல்வி விஷயத்தில் கொடுக்கப்பட்ட
... ¾ லக்ஷமும், சுகாதாரத்துக்ாகக் கொடுக்கப்பட்ட
... 10½ லக்ஷமும், கொடுபட வில்லையாம். கல்விக்கும்
...க்கும் தொகை வெகு சொற்பந்தான் கொடுத்திருக்
...கள்; அதையும் செலவிட வில்லை ...
...ன்ன நன்மை ஏற்படும்?

சென்ற வருஷத்தில் செலவாயிருக்கும் உத்தேசக கணக்கைப் பார்த்தால், போலீஸுக்கு 193½ லக்ஷமும், ஐயிலுக்கு 32 லக்ஷமும், கல்வி இலாகாமுழுதும் சேர்த்து 186 லக்ஷமும், சுகாதாரத்துக்கு 31½ லக்ஷமும், ஆஸ்பத்திரிகளுக்கு 60½ லக்ஷமும் செலவிடப்பட்டிருக்கின்றன.

நம்ம மாகாணத்தில் குடியை நிறுத்த இதுவரை யாதொ
ருமே செய்யப்படவில்லை. கல்வி விருத்திக்குச் செய்யப்பட்டிரு
கும் ஏற்பாடுகள் வெகு கொஞ்சம். சுகாதார விஷயமாக மு
செய்து கொண்டிருந்த ஏற்பாடுகள்கூட இப்போது இ
முன்னே குடிக்கத் தண்ணீர் கிடைக்காத இடங்களில் கி
வெட்டப் பணம் கொடுத்து உதவி செய்துகொண்டிருந்தா
இப்போது அதையும் நிறுத்திவிட்டார்கள். தீண்டாத
யாரும் பிற்பட்ட ஜாதியாரும் முன்னேற்றமடைய, எத்த
வேலைகள் செய்யவேண்டியிருக்கிறது. எல்லோருமே
வார்த்தைபொறுத்த மட்டில், இவர்களுக்கு நன்மைசெய்ய
மென்று சொல்லுகிறார்கள். அவர்களுக்காக இதுவரை
பட்டிருப்பதென்ன? இனிமேல் செய்யப்போவதென்ன

இப்போது இந்தியா கவர்ன்மெண்டாருக்கு நாம்
வேண்டிய கப்பம் குறைக்கப்படிருக்கிறதே; அதை
செய்யப் போகிறார்கள்? மேலே சொன்னபடி, நன் முய
குச் செலவிடப் போகிறார்களா? வருஷா வருஷம் செல
வழிகளிலும் அதிகப்படுத்திக்கொண்டிருக்கிறார்களே,
செலவுகளுக்குக் கொடுக்கப் போகிறார்களா? அல்லது
வாங்கிச் சாதாரணச் செலவுக்கு கடன் செய்திருக்கிறார்களே
கடனுக்குத்தான் கொடுக்கப் போகிறார்களா?

இப்போது நம் கைமுதலாக இருப்பது, இ
தான். இதையும் செலவழித்துவிடுவார்க ளானு
ஜனங்களின் நன்மைக்குச் செய்யவேண்டிய பல கா
பொருள் இல்லாமற் போய்விடும். அப்புறம் என்ன
புதிதாக வரிப்போட்டால்தான் முடியும் என்று செ
கள். ஆகையால், இப்போதே ஜனங்கள் கண் விழித்
அதிகச் செலவும் ஆடம்பரச் செலவும் கவர்ன்மெண்
தைக் கண்டித்து, அவைகளை உடனே குறைக்கும்ப
இந்தியா கவர்ன்மெண்டாருக்குக் கொடுக்கும் கப்பம்
யாவது நன் முயற்சிகளுக்கு உபயோகப்படும்படி செய்ய
இல்லாதவரை, நம்முடைய மாகாணம் முன்னே
முடியாது.

சுதந்திரத் தொட்டில்

ஒரு சுயேச்சை நாட்டின் வரலாறு

ஸ்ரீ. அ மாதவையர், சென்னை.

ஐரோப்பா கண்டத்தின் நடுவிலுள்ள சுவிச்சர் லாந்தைச் "சுதந்திரத் தொட்டில்" (Cradle of Liberty) என்று சொல்வதுண்டு. அது, சிறிய நாடேயாயினும், உலகத்தி லுள்ள குடியரசுகளில் ...மைய் தொன்று. அந்நாட்டு வாசிகள் எல்லோரும் போர்த் ...் பயின்ற வீரர். ஆதிகாலந் தொட்டு, மற்ற நாட்டரசர் ...பலர், தம் சொந்த நாட்டு வீரர்களின் சௌகரியத்தையும் ...த்தையும் நம்பாமல், இந்நாட்டு வீரர்களைத் தம் மெய்க் ...ராக (body-guard) நியமித்து வைத்துக் கொள்வதுண்டு.

CXVIII.

...ஸ் மலை ஏறுதல்

...ர், விகவாசத்திலும் போலவே, சரீர...ம், பலத்திலும் சிறந்தவர். 'கடந்த ...நாட்டு வீரர் கை கலந்து போராடாத ...ர்ந்த தில்லை' என்று கூறுவர். இவர்கள், ...க்காக வேண்டியபோது போராடுவ

தன்றி, பிற நாடுகள் சென்று, படை வீரர்களாகச் சம்பளத்
சேவிப்பதுமுண்டு. இதுவுந் தவிர, பிரான்ஸ், ஜெர்மனி
பெருநாடுகள், தமக்குள் நேரும் விவாதங்களை, இச் சிறு
நியாயமேத்ராவிகளின் மத்தியஸ்தத்துக் குட்படுத்தி, அவர்க
பின்படி ஒழுகுவது முண்டு. இப்படிப்பட்ட சுயேச்சை நா
தற்கால நிலைமையையும்; மகா பலசாலிகளும் பெரும்படை
களுமான ஆங்கிலேயர், பிராஞ்சியர், ஜெர்மானியர்,
இத்தாலியர்களின் நடுவே, இச்சிறு நாட்டார் தமது சுவா
தைக் காப்பாற்றிவரும் சாதுரியத்தையும்; அவர்கள் குடி
வியாபாரம், கைத்தொழில், முதலிய நாகரிக நடபடிக்கைக
பற்றி, தமிழ் மக்களுக்குச் சிறிது எடுத்துரைக்க விரும்புகி

நாடு, குடிகளின் இயல்பு :— சுவிச்சர்லாந்தின் விஸ்
15,965 சதுரமைல்தான். சென்னை மாகாணத்தின்
ணமோ, 151,810 சதுரமைல்; ஆகையால், இந்நாடு, நமது
ணத்தில் பத்தில் ஒரு பங்கே என்னலாம். இச்சிறு ந
மிகப் பெரும் பாகம், ஆல்ப்ஸ் மலைத் தொடரும், அதைச்
மலைப் பிரதேசமுமாம். இதுவே இதன் சுவாதீனத்துக்கு
காரணம் என்பர். இம் மலை நாட்டு வாசிகளை, அவர்க
களின் ஊடேசென்று பிற நாட்டாரால் போரில் வெல்ல மு
ஒரு வேளை வென்றாலும், நாட்டை கெடுநாள் தம் கைவச
துக்கொண்டு ஆளவும் முடியாது. இதை அநுபவத்தாலு
மானத்தாலும் நன்கறிந்த பிற நாட்டார்கள், தம்முள் எ
இந் நாட்டைத் தாக்குவ தில்லை என்றும், இச்சிறு நாட்டி
ராஜ்யக் குடியரசு எவ்விதத்திலும் சிதைவுறாமல் நிலைத்துத்
பதற்குத் தாங்களே பொறுப்பாளிகள் என்றும், உடன்ப
செய்துகொண் டிருக்கின்றனர். இந்நாட்டின் ஜனத்தொ
லக்ஷத்தான்; நமது சென்னை மாகாணத்தின் ஜனத் தொ
420 லக்ஷத்துக்கு மேலாகும். இந்த 37½ லக்ஷம் ஜன
நூற்றில் 70 பேர் ஜெர்மன் பாஷையும், 22
யும், 7 பேர் இத்தாலிய பாஷையும், ஒரு
யும் பேசுகின்றனர்; இதுவுமன்றி, ஒ
அதாவது மொத்தம் 4 லக்ஷம் பேருக்கு
சேர்ந்தவராவர். மதவிஷயத்திலும், இ
பரவுவதாயினும், அதன் முக்கிய உ
ப்ரோடஸ்டாண்ட் என்னும் வகுப்பு
களையும், இந்நாட்டிற் காணலாம். "உழ
என்பதுபோல, சென்னை மாகாணத்தின்
இச் சிறு நாட்டிலே, பலசாதிகளும், ப
ஙம் வழங்குகின்றன என்பது, துல

நன்குணர்ந்த ஒரு நூலாசிரியர்: 'சுவிச்சர்லாந்து
வாழ்வது, அதன் ஜனங்களின் சுவாதீன வேட
மற்ற நாட்டார், சாதியொருமைப்பாட்டினுலும்,
உறவினுலும், கூடிவாழ்கின்றனர்; பல பாஷைகளை

ஸெனிஸ் மலைப் பாதை

மதங்களை யனுசரித்துவரும் பல சாதியினராகும் இந்நாட்டு வாசிகள் ஒரு நாட்டாராய்க் கூடிவாழ்வதற்கு, சுதந்திர தாகத்தைத் விர வேறு காரணமில்லை' என்று கூறியிருக்கிறுர். இந்நாட்டாரைப் ாலவே, ஆனல் பேரளவில், சாதி மதம் பாஷைகளில் வேற்று

யராகிய நாம்; இவ்வுண்மையை ஆழ்ந்து சிந்தித்

ந்தினரின் ஜீவனோபாயங்கள்:—இந்நாடு அழகிய
ானதால், இதன் காட்சிகளைக் கண்டு களிக்கும்
நாட்டார், சருவதா இங்கு வந்து போய்க்கொண்டே
ல் தான், இந்நாட்டில் வாழும் ஜனங்களில் எண்பதி
நாட்டு வாசிகளா யிருக்கின்றனர். இப்படித் தம்
் பிரயாணிகளுக்கு வேண்டிய வசதிகளையும் சௌகரி
பொழுதுபோக்கு விளையாட்டுக்களையும் அமைத்
வர்கள் மனமகிழ்ந்து அரிதில் நீங்க, மேன்மேலும் புதிய
ாடி வந்துகொண்டிருக்கும்படி செய்வதை, ஒரு கலை
் பயின்று, அதில் இந்நாட்டார் தேர்ந்திருக்கின்றனர்.
பரைக் 'கடைக்காரர்' என்று கூறுவது போல, இந்நாட்
ஹோட்டல்காரர்' என்று கூறுவது முண்டு. ஆனால், இத்
இவர் இழிவானதாகக் கருதிலர்; மேன்மையான ஜீவனோ
ே கருதிச் செய்துவருகின்றனர். கலைகளிற் சிறந்த
வேலையினால் அமெரிக்காவிலே பெரும் பொருள் சம்பாதித்த
டார் ஒருவர், தன்னாட்டுக்கு அப்பொருளுடன் மீண்டுவந்து,
க்கொண்டு 250 அறைகளும் பற்பல சௌகரியங்களும்
ஒரு பெரிய ஹோட்டலை ஸ்தாபித்து, சித்திர மெழுதும்
லையைக் கைவிட்டு, இப்பொழுது ஹோட்டல்காரராக வாழ்ந்து
கின்றமை, இதை நன்கு விளக்கும். மனிதனுடைய யுத்தி
திகளினாலும், இயந்திரங்களின் சக்தியினாலும், சாஸ்திர சூக்ஷ்ம
ாயங்களினாலும், பனிமூடிய செங்குத்தான மலைகளின்மேல்
வளவு தூரம் ரெயில்வண்டியையும் வேறு வாகனங்களையும்,
ாண்டுசெலுத்த முடியுமோ, அவ்வளவு தூரம், பிரயாணிகளின்
சௌகரியத்தை உத்தேசித்து, இந்நாட்டவர் சென்றிருப்பதைக்
ாணலாம். ஆசார உபசாரங்களோடு வந்தவரை எதிர்கொண்
டேற்று, அவர்களுக்கு எவ்விதத் தொந்தரையுமின்றி, அவர் மீண்டு
போமளவும் தாஸாதிதாஸராய் அவர்களைத் தாங்கித் தடுக்கிட்டுச்
சம்மந்தி உபசாரஞ் செய்து, அனுப்புவர். மொத்தம் 35,000 பணி
யாட்களைக்கொண்ட 2000 ஹோட்டல்கள்வரை, இச் சிறு நாட்டிலி
ருக்கின்றன. அவற்றில் சில, சமுத்திர மட்டத்துக்கு 9000 அடி
வரை உயரமான மலைப்பிரதேசங்களில் கட்டப்பட் டிருக்கின்றன.

இரண்டாவது ஜீவனோபாயமாக, கடியாரக் கைத்தொழிலைக்
கூறலாம். 'ஸ்விஸ்' கடியாரங்கள் உலகமெங்கும் பேர்போனவை.
ஆண் பெண் இருபாலாரும், இத்தொழிலில் கைதேர்ந்தவர். இந்தக்
கைத்தொழில் இந்நாட்டில் ஏற்பட்ட விருத்தாந்தம், விந்தைய
யிருக்கும்: 1679-ம் ஆண்டிலே, லாலாக்னி என்ற ஊரிலே, டா

யல் ஜீன்–ரிச்சேர்ட் என்ற கொல்லன், தன் உலைக்கூடத்தில் வேலை செய்துகொண் டிருக்கும்பொழுது ஒருநாள், வீதிவழியே சென்ற குதிரை வியாபாரி அயலூரான் ஒருவன், தன் கடியாரம் நின்றுவிட்டதைப்பற்றி வருத்தப்பட்டான். கொல்வேலைச் சிறு

ஆல்ப்ஸ் மலையில் புயற்காற்று

வன், அதுவரை கடியாரம் என்பதை அறியான். இந்நாட்டிலே முதல் முதல் கண்ட கடியாரம், அந்தக் குதிரைவியாபாரி கொண்டு வந்ததுதான். கொல்லன் அதை வாங்கிப் பரீக்ஷித்துப் பார்த்து, தன் கைவன்மையால் கோளாற்றைத் திருத்தி, கடியாரம் ஓடும்படி செய்துவிட்டான். அது முதல், தானாகவே ஒரு கடிகை யந்

திரத்தை யுண்டுபண்ண வேண்டு மென்பதே கொல்லச் சிறுவனின் பேரவா ஆயிற்று. ஊரார் பலர் அவனைப் பரிகசித்தனர்; ஆனல், அவன்மட்டும் மனந்தளராது, கடியாரஞ் செய்தற்கு வேண்டிய கருவிகளையும் தானே ஆக்கிக்கொண்டு, பலமுறை தவறி, கடைசி



ரிகி ரேயில்வே

யில், ஒருவருஷத்தில், ஒரு கடியாரத்தைச் செய்து முடித்துவிட்டான். அதுவே இந்நாட்டிற் செய்யப்பட்ட முதல் கடியாரம்

(தொடரும்)

Note—For the blocks illustrating this article I am indeb
Secretary, C. L. S., Madras.—*Ed*.

அறுபத்துமூவர்களின் காலம்

இலக்கண விளக்க பரம்பரை
ஸ்ரீ. சோமசுந்தர தேசிகர், திருவாரூர்

இந்தத் தலைப் பெயருடன் சென்ற ஜனவரி மாதக்காசில் வெளிவந்துள்ளதைப் பார்த்தேன். அவற்றுள் சில உண்மைக்கு மாறாகக் காணப்படுவதால், உள்ளபடி வெளியிட முன்வந்தேன். திருவாரூரில் ஸ்ரீ தியாகேசப் பெருமான் கோயில் இரண்டாம் பிரகாரத்து மதிலின்மேல் புறத்திற் காணப்படும் கல் வெட்டில் அநபாயன் என்று காணப்படினும், அது இரண்டாங் குலோத்துங்க சோழ தேவனுடைய கல்வெட்டாகும். இது, அவ்வூர்க் கோயிலில் நடக்கும் திருவிழாக்காலங்களைக் குறித்துவிட்டு, அதனடியில் பின்வரும் பொருள் தருமாறு பொறிக்கப்பட்டிருக்கிறது:—

ஹேமசபாநாதரது பாதத்தில் நமஸ்கரித்து விளங்குகின்ற அநபாய அரசன், ஆரூர் ஆலயத்தில் எழுந்தருளி யிருக்கும் பிரமபுரீசர், வாக்காதிபதி, சுவஸ்வாமி மித்திரர் இம் மூவர்க்கும் நிலம், தங்கம் பொன்னாலான ஆபரணங்களும், பாத்திரங்களும் கொடுத்தான். புலியூரில் கனக சபையில் எழுந்தருளி யிருக்கும் நடேசப் பெருமானது சரணாரவிந்தத்தில் மொய்த்த வண்டாகிய அநபாயன் என்ற அடியேன், பின்னோர்கள் கமலாலயத்திற் செய்யப்பட்ட தர்மங்களைக் காப்பாற்றும்படியாக, அவர்களுக்கு நமஸ்கரிக்கின்றேன்.

இந்த அநபாயன் என்ற பட்டமானது, பலசோழ அரசர்களாலும் கொள்ளப்பட்ட ஒரு பொதுப்பெயர். இதைப்போலவே, சென்னி, குலோத்துங்கன், அபயன் என்ற பெயர்களும் பொதுப் பெயர்களாகும். இவைகளைக் கொண்டு, பெரிய புராணம் பாடிய சேக்கிழார் சுவாமிகளது காலத்தை நிர்ணயித்தால் வழுவாகு மென்பது, காரைக்குடியினின்றும் வெளிவரும் "குமரன்" பத்திரிகையின் இரண்டாமாண்டுப் புத்தகத்தைப் பார்த்தால்

குசிகர் குட்டிக் கதைகள்

மூன்று பாகங்களில் 22 கதைகள்

மொத்தம் விலை, ராப்பர் 1—8—0.

ஷை டக்ஸீன் 1—12—0.

பஞ்சாமிர்தம் ஆபீஸ்,
மயிலாப்பூர், சென்னை.

விளங்கும். அதனில் பலபல நியாயங்களைக் காட்டி, இது, முதலாங் குலோத்துங்கனுக்கு முன்னிருக்க வேண்டு மென்றும் வரைந்துள்ளேன். இப்பால் செய்துவரும் ஆராய்ச்சிகளால், இக்காலம் ராஜேந்திர சோழதேவாது என்று தெரியவருகிறது. ஆகவே, குலோத்துங்கனது கால மென்று கொள்வதற் கில்லை.

'இராஜ ராஜன் காலத்திற்கு முன்னிருந்தே ஓதுவார்கள் இருந்தன ரென்றால், நம்பி இவ்வளவு சிரமப்படுவானேன்?' என்கிறார்கள். மூவர் பாடலின் தொகை ஏராளமானது. திருநாவுக்கரசுதேவ நாயனார் ஒருவர் மட்டும் பதிகம் ஏழு எழுநூறு' பாடினார் என்று படிக்கிறோம். இதற்கு மேலாகவே ஞான சம்பந்தரும், சுந்தரரும் பாடியிருக்கின்றனர். இவற்றை யெல்லாம் ஒருசேர மனனம் பண்ணி யிருப்பாரைக் காண்பதரிது. ரிக் வேதம் முழுமையும் பாராயணமாக அத்தியயனம் பண்ணக் கூடியவர்கள், ஒருவர் இருவ ரிருக்கலாம். அதே மாதிரியாக, இத் தேவார பாராயணிகளு மிருக்கலாம். ஒன்றிரண்டு கற்றோர் பலரிருத்தல் கூடும்; அதனால்தான் அரசன் இவற்றை ஒருசேரக் காண விரும்பினன். இத்தேவாரப் பாக்கள் ஒருசேர விருக்குமிடம் தெரியாமையாலே, அரசன் அவற்றை அறிய விரும்பி, தெய்வீகத் தன்மை பெரிது முடையவராய், அக் காலத்திருந்த நம்பியாண்டார்நம்பியை வேண்டினன். அவர், அவரது தெய்வீகத் தன்மையால், அவ்வேடுகள் இருக்குமிடத்தை யுணர்ந்து, எடுத்துக் கொடுத்தனர்.

'மூவர் காலத்திருந்து நம்பி காலத்துக்குத் தேவாரம் எப்படி வந்தது?' என, ஒரு வினாவை எழுப்பி யுள்ளார்கள். அதற்கு விடை: மேலே குறித்த பகுதியிலேயே யிருக்கிறது. 'தேவாரம் எழுதி வைக்கப்பட்டிருந்ததா, அல்லது வேதத்தைப்போல் வாயால் சொல்லி வந்ததா?' என்கிறார்கள். இது அவரவர்கள் பாடுங் காலத்திலேயே அனேக அடியார்களுடன் இவர்கள் திருப்பதிகளைச் சுற்றினார்க ளென்று கேட்கப்படுவதுடன், திருநீலகண்டத்து யாழ்ப்பாணர், யாழிற் கூட்டிப் பண்களை யுடனுக்குடன் பாடினா ரென்றும், அதற்காகவே யாழிலிட்டு வாசிக்க முடியாதபடி, யாழ்முறி யென்றொரு பண்ணைப் பாடினா ரென்றும், சமணரை வாதில் வெல்ல வைகையிலே தேவாரப் பதிக மொன்று எழுதியிட்டா ரென்றும் கேட்கப்படுதலினால், அக்காலந் தொடங்கியே எழுதியும் பாடியும் வரப்பட்டதாகும்.

'மூவர் காலத்தில் தமிழெழுத்து இருந்ததா?' என்று ஒரு வினாவை யெழுப்பி விட்டார்கள். இவர்களது அபிப்பிராயம் இல்லை யென்பதென்றுகிறது. அங்ஙனமாயின், எழுத்துக்கும் ஓசைக்கும் இலக்கணம் கற்பிக்க வந்த தொல்வாசிரியரான தொல்காப்பியரும், ஆளுடைய நம்பிக்குப் பிற்பட்டவரென்று கொள்வதாகும். தமிழ் இலக்கண நூலிலே, 'தொல்லை வடிவின வெல்லாவெழுத்து மாண்டெய்து மெகர மொகரமெய் புள்ளி' என்று காணப்படுகிறது. மேலும் தொல்காப்பியத்தில் எழுத்துக்களின் வடிவம் கூறுங்கால், மகரத்திற்கு வரிவடிவு 'உட்பெறு புள்ளி உருவாகும்மே' என்றெழுதுகிறார். இவ் வெழுத்து இக் காலத்து மாறுபட்டுக் காணப்படுமாயினும், முற் காலத்தி லுள்ள எழுத்துக்கள் அவ்வாறே எழுதப்பட்டு வந்தன வென்பதற்குத் தென்னாட்டிற் காணப்படும் கல் வெட்டுக்களே போதிய சான்றாம். அக் காலத் தெழுத்துக்களை 'வட்டெழுத்து' என்று கூறினர். திருச்சிராப்பள்ளி திருவன் பி. டி. சீனிவாசய்யங்காரவர்கள் வட்டெழுத்துக்களைப்பற்றிக் கூறுகின்றனர். இவைகள் வட்டமாக எழுதும்

தன்மை யுடைமையால் இவ்வாறு கூறப்பட்டது. வெகு காலத்துக்கு முற்பட்டதாக நினைக்கப்பட்ட தென்னாட்டி லுள்ள குகைகளில் காணப்படும் எழுத்துக்கள் தமிழெழுத்துக்க ளென்று, கல்வெட் டிலாக்கா, திருவன் K. V. சுப்பிரமணிய ஐயரவர்கள், ஓரியண்டல் கூட்டத்தில் ஒரு கட்டுரை வாசித்திருக்கின்றார்கள். இவற்றை யெல்லாம் கவனித்தால், வெகு காலமாகத் தமிழெழுத்துக்கள் வழக்கத்திலிருந்து வருகின்றன வென் அறிலாம்.

சண்டேசுரரும், கண்ணப்பரும் கடைச்சங்க காலத்துக்கு முற்பட்டவர்க ளென்பது, கடைச்சங்கப் புலவரான நக்கீரதேவரது செய்யுள்களால் அறியப்படுவது,

‘மானுடனாகிய சண்டியை வானவ னாக்கியும்’

என்று கோபப் பிரசாதத்திலும்,

‘மட்டித்து — வாலுகத்தா னல்லிலிங்க மாவகுத்து மற்றதன் மேற்
பாலுகுப்பக் கண்டு பதைத்தோடி — மேலுகைத்தங்
கோட்டியவன் றாதை யிருதா ளெறிந்துயிரை
வீட்டிய சண்டிக்கு வேறாக — நாட்டின்கட்
பொற்கோயி லுள்ளிருத்திப் பூமாலை போனகமு
நற்கோல மீந்த நலம்போற்றி’ — என்று போற்றித் திருக்கலிவெண்

பாவிலும் காணப்படுவதாலும், கண்ணப்ப தேவர் பேரில் மறம் முதலியன இவராலும், கல்லாடதேவ நாயனாராலும் இயற்றப்பட் டிருப்பது கொண்டும், இவர்கள் வெகு முற்பட்டவ ரென்பது தெளிவாகும்.

சாக்கியநாயனாரும் சங்ககாலத்துக்கு முற்பட்டவ ரென்பது, ‘கற்கொண் டெறிந்த சாக்கிய னன்பு தற்கொண் டின்னரு டான்மிக வளித்தும்’ என்பதால் பெறுகின்றோம். இப்படிக்கின்றி, கோச்செங்கண்ணனே கடைச் சங்க காலத்தவ னென்று புறநானூறு, களவழிகளா லறிகிறோம். ஆகவே, இவர்களில் சாக்கியர், கண்ணப்பர், சண்டேசுவரர், மூவரும் சங்ககாலத்துக்கு முற்பட்டவர்க ளென்றும், செங்கட்சோழர் சங்ககாலத்தின ரென்பதும் பெறுகின்றோம்.

கலிக்காமனுக்கும் சுந்தரருக்கும் எப்போதும் பகை யென்றும், விறன் மிண்டருக்கும் சுந்தரரைக் கண்டால் ஆகாதா மென்றும், இருசெய்திகள் காணப்படுகின்றன. கலிக்காம நாயனார் ஆரூர் நம்பி தியாகேசப் பெருமானை ஊடற்றீர்த்துவிக்க யனுப்பின ரென்பது பற்றி, அவரிடத்தில் வெறுப்புக் கொண்டா ரென்றும், அவ் வெறுப்பை நீக்க வேண்டியும், உள்ளன்புடை யான் யாவனாயினும், எச்செய்கை யுடையானாயினும், அவன் தனக்கு உகந்த வன் என்பதும் புலப்படுத்த, அவருக்கு நோயை யுண்டாக்கிப் பின் சுந்தரர் வர, இறந்தவரைப் பிழைப்பித்தா ரென்றும், பின்னர் மீளா அன்புடையர் ஆயின ரென்றும், படிக்கிறோம். விறன்மிண்டரோ, தேவாசிரியன் என்னும் காவணத்தில் வீற்றிருக்கையில், ஆலால சுந்தரர் சிவவேடத்தோ டன்றி மணக்கோலமாகச் சென்றன ரென்றும், அடியார்களை வணங்காதுசென்றன ரென்றும், அவ்வாறு செல்பவன் யாரென விறன்மிண்டர் கோபிக்க, அவ் அவையின் கண்ணிருந்த முதியா ரொருவர், ‘இவரது பெருமை நீரறியீர்’ ரென்று சமாதானம் செய்தன ரென்றும் கூறும் பதினேழுபாக்கள், இப் பொழுது வெளியிட்டுள்ள பெரிய புராணத்துள் காணப்படுவ தில்லை. இதன் விரிவை, செந்தமிழ் பதினேழாந் தொகுதியிற் காண்க.

நீதி மாலை

1. ஊவன் செய்த தந்திரம்

சீனத்திலே ஒரு சக்கரவர்த்தி இருந்தார்: அவர் மிக நல்லவர்; பிரஜைகளின் நன்மையையே எப்பொழுதும் நாடி உழைப்பவர்; ஆனால், அவரிடத்திலே, யாவரும் வருந்தும்படி, ஒரு துர்க்குணம் இருந்தது,—அவர் குடிகாரர். இந்தக் கெட்ட வழக்கத்தை நிறுத்துமாறு, சக்கரவர்த்தியின் முக்கிய சிநேகிதரான ஊவன் என்பவர், எவ்வளவோ முயன்று பார்த்தும், பலிக்க வில்லை.

ஓர் இரவு சக்கரவர்த்தியும் ஊவனும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, நண்பர் தடுத்துச் சொன்னது ஒன்றையும் கவனியாமல், சக்கரவர்த்தி கோப்பை கோப்பையாய் மதுவைக் குடித்து, மதிமயங்கிக் கீழே விழுந்துவிட்டார். அதைக் கண்டு வருந்திய ஊவன், ஒரு தந்திரஞ் செய்ய நினைத்தார்: அரமனைப் பணியாட்கள் சிலரைக் கூப்பிட்டு: "என்னை இப்பொழுது விலங்குகளாலும் சங்கிலிகளாலும் பிணித்துக்கட்டி, சிறையில் அடைத்து விடுங்கள்; காலையில் சக்கரவர்த்தி மயக்கந் தெளிந்து எழுந்து, 'ஊவன் எங்கே?' என்று கேட்டால், 'தங்கள் கட்டளைப்படி அவரைச் சிறையில் வைத்திருக்கிறோம்; இன்று தலையை வீசி விடப் போகிறோம்' என்று கூறி, என்னை அவர் முன்பு கொண்டு நிறுத்துங்கள்" என்று, அவர் சொன்னார். சக்கரவர்த்தியின் பழைய நண்பரை அவ்வாறு செய்ய, வேலையாளர் முதலில் பயந்தனர்; பின்பு, அவர் வற்புறுத்தி ஏவியபடியே செய்தனர்.

மறு நாள் காலை சக்கரவர்த்தி எழுந்து விசாரித்தபோது, இரும்புச் சங்கிலிகளாலும் தளைகளாலும் கட்டப்பட்டிருந்த ஊவனை அவர்முன் கொண்டுவந்து விட்டனர். ஊவன், பயந்து நடுங்கி அழுபவர்போல நடித்து: "அரசரே! நேற்றிரவு கட்டளையிட்டபடி என்னை இன்று கொன்றுவிடாது, உயிர்ப் பிச்சை கொடுங்கள்! நான் மனமறிய ஒரு குற்றமும் செய்ய வில்லையே! தங்கள் பழைய நண்பனுக்கு இரங்குங்கள்!" என்று கதறினார். இதைக் கண்டால், தான் குடி வெறியில் தவறிவிட்டதாகச் சக்கரவர்த்தி நினைத்து, அதனால் குடியைப் பழித்து வெறுத்து, மதுபானஞ் செய்வதை விட்டுவிடுவாரென்று ஊவன் எண்ணி, இந்த யுக்தி செய்தார்.

சக்கரவர்த்தியும் அப்படியே நினைத்தார்; மிதமிஞ்சிக் குடித்ததைத் தவிர, மற்றொன்றும் அவருக்கு ஞாபக மில்லை. பணியாளரும் ஊவனும் சொன்ன சொற்களிலிருந்து, ஊவன் செய்த ஏதோ ஒரு செயலுக்காக, அவரைச் சிறையிலடைத்து, மறுநாள் கொன்று

விடும்படி, குடிவெறியில் தான் ஆஜ்ஞாபித்திருக்க வேண்டுமென்று, அவர் ஊகித்துக்கொண்டார். இப்பொழுதோ, அதையெண்ணி இரங்கிப் பரிதபித்துக் குடியை வெறுத்தார்; ஆயினும், ஒருதரம் தான் இட்ட கட்டளையைத் தானே மாற்றினால், ஜனங்கள் தன்னை இகழ்வார்கள், தனக்குப் பயப்படார்கள் என்று, அவர் ஆலோசித்தார். அதனால், பணியாளரும் ஊவனுமே கூறிய தன் கட்டளைப்படி, ஊவனைக் கொலைக்களத்துக்கு அனுப்பிவிட்டார். தன் வலையில் இவ்வாறு தானே சிக்கிக்கொண்ட ஊவன், தன்னை விடுவித்துக்கொள்ள வேறு வழியின்றி, உயிரை யிழந்தார்.

அன்று முதல், சக்கரவர்த்தி மதுபான வழக்கத்தை நிறுத்திவிட்டார். நன்மையை நாடியே கூறும் சிறு பொய்யும் தீங்கை விளையா நிற்கும். "பொய்ம்மையும் வாய்மை யிடத்த, புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்" என்று நாயனார் கூறியுள்ளாராயினும், குற்றமற்ற நலம் பொய்யினால் விளைவது அரிதினும் அரிது என்பதை, அவர் அறிவர்.

—மா.

1. இங்கிலாந்திலே கிருஸ்மஸ் பண்டிகை.

ஸ்ரீமதி M. லக்ஷ்மி அம்மாள்,
(B. A. Hons.) லண்டன்.

இந்த 'லீவு' முழுவதும் நான் லண்டனிலே தான் இருக்க நேர்ந்ததனால், 'கிருஸ்மஸ்' வேடிக்கைகளைப் பார்க்க அநுகூலமா யிருந்தது. பண்டிகைக்கு ஒரு மாதத்திற்கு முன்பே, எங்கும் 'கிருஸ்மஸ்' கோலாகலம் ஆரம்பித்துவிட்டது. கடை வீதிகள் எல்லாம் புதுக்கோலம் பூண்டு விளங்கின. எங்கும் புது தினுசு சாமான்கள் காணப்பட்டன. நட்பின் அருமையையும், சுற்றத்தாரைப் பேணும் கடமையையும், குழந்தைகள் சிரிப்பின் இனிமையையும், காலத்தில் செய்யும் நன்றியின் பெருமையையும், காலதாமதம் செய்வதால் வரும் கேட்டையும் எடுத்துக் காட்டும் கட்டுரைகள் பல, கடை-

ஜன்னல்களில் விளம்பரங்களாகத் தொங்கவிட்டிருந்தன; அவற்றின் கீழ், பொடி எழுத்தில், ஒவ்வொருவரும் தனக்கு வேண்டிய ஜனங்களுக்குக் கிருஸ்மஸ் வெகுமதிகளாக இன்ன இன்ன கடை சாமான்கள் வாங்கத் தகும் என்று, அந்த ஹிதோபதேச வசனங்களுக்கு வியாக்கியானம் எழுதியிருந்தது. கடை 'பீரோ'க்களில் 'கிருஸ்மஸ் கார்டு'களும் காகித வெடிகளும் குவிந்து கிடந்தன. நூதனமான விளையாட்டுச் சாமான்களும் அலங்காரச் சாமான்களும் ஏராளமாய்க் காணப்பட்டன. அவற்றுள் அநேகம், கண்கொண்டு பார்க்கவேண்டாத விகாரமான ரூபமுள்ளவை;யாரேனும் அவற்றை விலைகொடுத்து வாங்குவார்களோ வென்று ஆச்சரியமாயிருந்தது. கருத்தும் கைத்திறனும் சேர்ந்து நிருமிக்கும் அழகு அழகே யன்றி, பொம்மை அழகு ஓர் அழகில்லை யென்றும்; அதைக் காட்டிலும், இவ்விதச் சாமான்கள விகாரமாயிருந்தால், அதில் ஒரு விநோதமுண்டென்றும், என் சிநேகிதி சொன்னாள்.

பண்டிகை கொண்டாடுவதற்கு முக்கியமான பதார்த்தங்கள், 'ப்ளம்' பழப் பணியாரமும், வான்கோழிக் கறியுமாம்! மிட்டாய்க் கடைகளில் கிருஸ்மஸ் பணியாரங்கள் செய்துவைத்திருந்தன; கசாப்புக் கடைகளில் மட்டுமின்றி, பலசரக்குக் கடைகளிலும், தலையை மட்டும் திருகிவிட்டு, இறக்கைகளுடன் நூற்றுக்கணக்கான பக்ஷிகள் வரிசையாய்த் தொங்கவிட்டிருந்தன. அந்தக் கோரமான காட்சியைவிட்டுப் பூக்கடைகளிற் புகுந்தால்,மரங்களில் இலையுதிர்ந்து, பூப்பாத்திகளில் அரும்பற்று, தோட்டங்கள் வெறிச்சென்று காணப்படும் அந்த நாளில், அங்கே, 'ஹாலி' முதலிய வாடாத இலைகளையும், அந்நிய நாடுகளிலிருந்து வருவித்த பலவர்ணப் புஷ்பங்களையும் கொண்டு, அறைகளை நிரப்பி அலங்காரம் செய்து வைத்திருப்பது, பார்க்கச் சந்தோஷகரமா யிருந்தது. பண்டிகை நெருங்கவே, கடைகளில் ஜனக்கூட்டம் அதிகரித்தது. ஆறு பெனி கடைகளில்தான் இரைச்சல் அதிகம். அந்தக் கடைகளில் துணிமணிகள், பாத்திரங்கள், பொம்மைகள், நகைகள், கிட்டத்தட்ட சகல சாமான்களையும் வாங்கலாம்; ஒரு சாமானுக்காவது ஆறு பெனிக்கு மேற்பட்ட விலை கிடையாது; விலைக்குத் தக்கபடியே யிருக்கும், சாமான் யோக்கியதையும். கிருஸ்மஸ் வாரத்தில், அங்கே குழந்தைகள்வந்து, தமக்குள்ள 'பாகெட் மணி'யைக் கொண்டு, வீட்டில் உள்ளவர்களெல்லாருக்கும் வெகுமதிகள் வாங்கவேண்டி, வாய்விட்டுக் கணக்குப் பார்ப்பதும், ஆலோசிப்பதும், கேட்க வேடிக்கையாயிருந்தது.

பண்டிகை வரவைக் கொண்டாடும் 'அட்வென்ட்' ஞாயிற்றுக்கிழமை யன்று, சில சிநேகிதிகளுடன் நான் வெஸ்ட்மின்ஸடர் சர்ச்சுக்குப் போயிருந்தேன். சர்ச்சின் உட்புறம், ஹாலி இலைத்

தோரணங்கள் கட்டி அலங்காரம் செய்திருந்தது. அன்று உபந்நியாசம் செய்தவர், கிருஸ்மஸ் வழக்கங்களின் பூர்வாந்தரத்தை எடுத்துச் சொல்லி, சூதாடியும், கள் குடித்தும் கிருஸ்மஸைப் போக்குபவர்களைக் கண்டித்துப் பேசினர். அப்படிப்பட்டவர்கள், அன்று அவர் உபந்நியாசத்தைக் கேட்க, சர்ச்சுக்கு வந்திருந்தார்களோ, இல்லையோ, அறியேன். கிருஸ்மஸ் தினத்துக்கு முந்திய இரவு, நடுநிசிக்குமேல், நான் குடியிருந்த வீட்டுத் தெருவிலே ஜனங்கள் குடித்து விட்டுக் கும்மாளமடித்த போது, அவர் பேச்சு எனக்கு நினைவு வந்தது. நமக்குள் வடக்கத்தியார் போகி பண்டிகையை முக்கியமாகக் கொண்டாடுவது போல, இங்கே பல ஜனங்களும், கிருஸ்மஸுக்கு முதல் நாளைத்தான் முக்கியமாய்க் கொண்டாடுவது வழக்கமாம். முதல் நாள் சாயந்தரம்தான் பண்டிகையாரம்பம்; அன்றிராத்திரிதான், கிருஸ்மஸ் தினத்தைக் காட்டிலும் பெரிய விருந்து. எல்லாப் பக்ஷணங்களையும் அப்பொழுது ருசி பார்த்தாய்விடும். பாட்டும், கேளிக்கையும், குடியும், வாண வேடிக்கைகளும், விடியச் சாமம் வரை நடனமாடுவதும்; எல்லாம் அன்றிரவுதான்; அந்த உற்சாகத்துக்குப் பிறகு, மறுநாள் சர்ச்சுக்குப்போய்த் திரும்பிவந்து, மறுபடியும் விருந்துச் சாப்பாட்டுக் குட்காரும் ஜனங்களைப் பார்த்தால், சோர்ந்தவர்கள்போல் தோன்றுவார்கள்.

'கிருஸ்மஸ்' வாரம் முழுவதும், ஏழைகளுக்கு விருந்துகள் அநேக இடங்களில் நடந்தன. லண்டனிலுள்ள இந்தியர்கள் ஹாஸ்டலில் வருஷா வருஷம் நடக்கும் 'கிருஸ்மஸ் பார்டி'க்கு நான் போயிருந்தேன். அன்று அங்கு முப்பது ஏழைக் குழந்தைகளைத் தருவித்து, அவர்களுக்கு விருந்து செய்து, பாட்டுக் கச்சேரி வைத்து, கிருஸ்மஸ் பரிசுகள் கொடுத்தார்கள். விளையாட்டுச் சாமான்களைக் கண்டு குழந்தைகள் பட்ட சந்தோஷத்தைப் பார்த்தவுடன், பெரியவர்களும் தம்மை மறந்து சந்தோஷங்கொண்டு, அக்குழந்தைகளைத் தூக்கியெடுத்துக் கொஞ்சி விளையாடினர்கள். 'தான் கிருஸ்தவச்சி, சாதிபேதம் பாராட்டப்பட்டவளில்லையெனினும், இத்தேசத்துக்கு வரும்வரை, கீழ்ச் சாதி ஏழைக் குழந்தைகளுடன் தான் பழகினதே யில்லையென்றும்; அக்குழந்தைகளை அழைத்து விளையாட்டுக் காட்டாத 'கிருஸ்மஸ்' இனித் தனக்கு ஒரு பண்டிகையாகத் தோன்றாதென்றும்,' ஓர் இந்தியப் பெண் என்னிடம் சொன்னள்.

பண்டிகை முழுவதும் எல்லா நாடக சாலைகளிலும் ஒரே கூட்டமாயிருந்தது. அன்றன்றைக்கு விற்கப்படும் சாதாரண வகுப்பு 'டிகெட்' ஆபீசுகளின் எதிரில், கதவு திறப்பதற்கு இரண்டு, மூன்று மணி நேரத்துக்கு முன்பே, நாற்றுக்கணக்கான

ஜனங்கள் வரிசையாய் நிற்கத் தொடங்கினார்கள். அவர்களில் முக்கால் வாசிப்பேர் பெண்கள்தான். சிலவேளை, குளிரில் அசையாமல் நின்று கால் மரத்துப்போனால், அவர்கள் நின்ற இடத்திலேயே மாறி மாறிக் காலடி வைத்து 'ட்ரில்' செய்வார்கள்; பலர் தினசரிப் பத்திரிகையோ, கதைப் புத்தகமோ வாசித்துக்கொண்டு நிற்பார்கள். தெருவிலே வாத்தியங்கள் வாசித்துப் பிச்சை கேட்பவர்களையும், மிட்டாய் விற்பவர்களையும், இந்தக் கூட்டங்களுக்கருகில் தவறாது காணலாம். எப்பொழுதும் உள்ள நாடகங்களைத் தவிர, கிருஸ்மஸ் சமயத்தில்தான் பார்க்கக் கூடிய ஆட்டங்கள், 'பான்டமைமு'ம், கிருஸ்துஜயந்திக் கதைகளுமாம். கூத்தும், பாட்டும், கோமாளித்தனமும், தளுக்கான வேஷங்களும், ஏதாவது ஒரு பழங்கதையும் சேர்ந்த நாடகந்தான், 'பாண்டமைம்' என்பது. அலிபாபா கதையைப் 'பாண்டமைம்' ஆடினபோது, நாற்பது பெண்கள் நாற்பது திருடர்கள் வேஷம்போட்டுக்கொண்டு, நிர்த்தனங்கள் செய்தார்கள்; 'பிகெடெலி' வீதியில் உள்ள ஜன நெருக்கத்தைப் பற்றி விகடம் செய்யவும், கேலிப் பாட்டுகள் பாடவும்தான், அலிபாபாவுக்குப் பொழுது சரியாயிருந்தது. கிருஸ்துஜயந்திக் கதை யொன்றையும் நான் பார்க்கப் போயிருந்தேன். மலைச்சாரலில் தமது மந்தைகளை மேய்த்துக்கொண்டிருந்த ஆட்டிடையர், ஆகாயத்தில் தேவதூதர் பாடிய கீதங்களைக் கேட்டு, அவர் சொற்படி பெதலத்துக்குப் போய், பால கிருஸ்துவையும், அவர் தாயாரையும் சேவித்தார்களென்று, ஐந்நூறு வருஷங்களுக்கு முன், நாடகவியல் இன்னதென்று இங்கிலீஷில் ஏற்படுமுன், எழுதிய பழைய நாளை நாடகத்தை, ஒருவித ஆடம்பரமுமின்றி, எளிதாய் நடித்துக் காட்டினார்கள். கதை ஸாரமாயும் உருக்கமாயுமிருந்தது.

இந்தக் கிருஸ்மஸின் போது பனிச்சென்று வெயிலடித்தது; அதற்கு முந்திய டிசம்பர் மாதம் அடிக்கடி பனிமழை பெய்ததை நினைத்து, இந்தக் குளிர் காலத்தை நாங்கள் ஏளனமாய்ப் புகழ்ந்து பேசினோம்! 'உருட்சிக்கு நீட்சி, புளிப்புக்குள் அப்பன்' என்பதை ருசுப்படுத்துவது போல, அது முதல், பனிக்குப் பதிலாக அடிக்கடி மூடுபனியும், நீடித்த குளிருமாயிருக்கிறது. இந்தப் புது வருஷ ஆரம்பத்தில், இரண்டு நாள் விடாது லண்டனைப் போர்த்த அந்தகாரமான மப்புக்குச் சமமான மப்பு, ஏழு வருஷங்களாகக் கண்டதில்லையாம். அந்த மப்பு, பார்க்க வேடிக்கையாய்த் தானிருந்தது; மேகங்கள் பூமியில் படிந்துவிட்டது போல, திரளாய், அலை அலையாய், அங்குமிங்கும் மப்பு மோதுவதைக் கண்டு, ராக்ஷஸர்கள் செயல்களைப்பற்றிய வர்ணனைகள் நினைவுக்கு வந்தன. கைத்தூரத்துக்கப்பால் உள்ளது ஒன்றுமே தெரியவில்லை; தெருவாந்

தர்களின் வெளிச்சம்கூடப் பத்தடிக்குமேல் தெரியவில்லை. பஸ் வண்டிகள் நின்றுவிட்டன; வழக்கமாய் வீதிகளில் நிற்கும் 'மோடார்'களைக் காணவில்லை; தரைக் கீழ் ரயில்கள் மட்டும், எப்போதும் போல ஓடிக்கொண்டிருந்தன. ரயில் வண்டிகளில், பிரயாணிகள், வழக்கம்போல மௌனம் சாதிப்பதை விட்டு, மூடுபனியின் இருட்டையும் குளிரையும்பற்றி, ஆத்திரமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் முகமெல்லாம் இலேசாய்க் கரி பூசி, கண்கள் சிவந்திருந்தன. ரயில் ஸ்டேஷன் வாசல்களில், கைலாந்தர்களுடன் வழி காட்டிகள் நின்றார்கள். மப்பு வந்து மூடி இருட்டுவதற்கு முன் ஒரு சிநேகிதி வீட்டுக்குப் புறப்பட்டுப் போன நான், அவளிருந்த தெருவையே கண்டுபிடிக்கமுடியாமல், போன வழியே திரும்பி, லாந்தர்க்காரன் வழிகாட்ட, வீடு வந்து சேர வேண்டியதாயிற்று.

இன்று காலை வீசிய காற்றில் வஸந்தகால மணம் தெரிந்ததென்று, என் சிநேகிதி ஒருத்தி, காலைப் போசனத்தின்போது சொன்னாள். உடனே நாங்கள் தோட்டத்துக்குப் போய்ச் சிறிது நேரம் உலாவிப் பார்த்தோம்; குளிர்ந்த வாடை வீசுவதைத் தவிர, வேறொன்றும் தெரியவில்லை. வஸந்த காலம் தானே வரும்; இனி வெகு நாள் தாழ்க்காதென்று தோன்றுகிறது.

வெளிவந்துவிட்டது!! வெளிவந்துவிட்டது!!

நீண்டகாலமாய் பிரசித்தி அடைந்த தஞ்சாவூர் அரமனை ஸரஸ்வதிமகால் என்னும் புஸ்தகாலயத்திலுள்ள தமிழ் ஏட்டுச்சுவடிகளின் முழு விவரங்களடங்கிய ஜாப்தா. முதல் வாலிம். டெமி 8 vo. 531 பக்கங்கள். விலை ரூபா 2. தபாற் கூலி 0–7–0.

கௌரவ காரியதரிசி

T. M. S. S. M. லைப்ரரி,

தஞ்சாவூர்.

வெற்றியும் மன நிலையும்

ஸ்ரீ. பா. ஆதிமூர்த்தி, கா.

கட்டளைக் கலிப்பா

(1.) தோற்றதாக மனங்கொளில், தோல்வியே ;
'துணிவிலேன்' எனல், தோல்வியின் தோற்றமே ;
ஏற்ற வெற்றிவந் தெய்தினும், எய்தொணா
தென்று கூறுதி, ஈதிழி வெண்ணமே ;
சாற்றல், 'நான் இழப்பேன்' என, தாழ்த்துமே ;
சாதமே, இவ் உலகினில் பார்ப்பன ;
ஆற்றல் "வெற்றி" மனத்திட மாகுமால்,
அமையு மீதறிவின்னிலை என்பவே,

(2.) ஏக ஓரடி எய்துமுன், எத்தனை
எண்ணிலார்கள் விழுவர் இழிதா !
வேக வேலை தொடங்குமுன், எத்தனை
வீணர் தோற்று விடுவர் வெறுப்புடன் !
ஆகநீ பெரிதே நினை, ஆம் அது ;
அற்ப எண்ணம் அழுத்தும் இழிவினில் ;
நீ கடைப்பிடி யாவதையே கொடு ;
நினையு மீதறிவின்னிலை யாகுமால்.

(3.) 'இழிவுளேன்' எனில் எய்துவை அந்நிலை;
ஏற்றம் எண்ணில் இலங்கி உயர்தியால் ;
மொழியும் வெற்றி வருவதன் முன்னரே,
முந்த உன்வலி கொண்டு முயலுதி ;
வழுவில் வேகமும், வன்மையும் வென்றிடா ;
'வாழ்க்கை யாஞ்சமர்' நாளு மதித்திடின்,
பழுதில் "வெற்றி" எக்காலும் அவனதே,
" பார்! இயற்றுவன் !" என்பவன் பாலினே.

தனிப்பாடல்.

" கடம் சுழிக்கும் கரிமருப்பு முத்தும் பொன்னும்
கார் அகிலும் சந்தனமும் கலந்து, பொன்னி
இடம்சுழிக்கும் வலஞ்சுழிக்குள் இருப்பீர்! ஐயம்
இடுவது உமக்கு எப்படியோ? இரண்டுபோலும்
விடம் சுழிக்கும் அரவத்தை அணிவீர் ; முன்னே
விழிசுழிக்கும் பூதத்தை விடுவீர் ; காகம்
உடன்சுழிக்கும் தலையோட்டில் இரப்பீர் ; மாதர்
உயிர் சுழிக்கும்படி மறுகில் உலாவுவீரே "— அநாமி.

தமிழ் மொழி ஆராய்ச்சி

தமிழ் மொழியின் பழமைக்கும் சிறப்புக்கும் சான்றாகும் அகராதியேனும்; தமிழ்ச் சொற்களின் அருமை பெருமைகளையும், அடிப்பொருள் மாறுபாடு வரலாறுகளையும், ஆராய்ந்து கூறும் நூல்களேனும், இன்னும் இயற்றப்படவில்லை. ஆங்கிலத்திலோ, இத்தகைய அகராதிகளும் ஆராய்ச்சி நூல்களும் மிகப்பல வுள. சொல்லாராய்ச்சி (On the Study of Words) என்ற பெயரால் டிரெஞ்ச் புலவர் இயற்றிய ஆங்கில நூல், முப்பது பதிப்புக்கள் வரை செலவாகி, பல்லாயிரம் பிரதிகள் ஆங்கிலம் பயில்வோரால் போற்றிப் படிக்கப்பட்டன. யான் கல்வி பயின்ற காலத்திலே, இந்திய மாணவரும் அதை உகந்து படிப்பதுண்டு. அந்நூலில் அடங்கிய அத்தியாயங்களின் தலைப்பெயர்கள், அவர் செல்லும் வழியை ஒருவாறு விளக்கும். அவையாவன;—(1) பீடிகை (2) சொற்களில் காவிய (கற்பனை) ரஸம் (3) சொற்களில் தரும போதனை (4) சொற்களில் சரித்திர வரலாறுகள் (5) புதுச் சொற்களின் உற்பத்தி (6) சொற்களின் அர்த்த பேதங்கள் (7) சொற்களின் பிரயோக முறை, என ஏழாம். இத்தகைய ஆராய்ச்சி, தமிழ்ப் புலமை சிறந்தவருக் கன்றி, என் போலியர்க்கு, எட்டாத கொம்பிலிருக்கும் கிட்டாத தேனாகும்; ஆயினும், இதை வாசிக்கும் புலவர்பெருமக்கள், பேருக்குமட்டும் தேரிலே உத்தரானை வைத்துக்கொண்டு போரை வென்று முடித்த பார்த்தனைப்போல, இந்த என் சிற்றுரையை முன்னிட்டு, அரிய இனிய ஆராய்ச்சியுரைகள் எழுதி உதவுவர் என்று கருதி, ஆங்கிலப் புலவர் வழியை ஒருவாறு கீழே குறிப்பிட முயலுவேன்.

(2) கற்பு (கல்+பு)—'கல்வி, மகளிர்நிறை, மதிலுண் மேடை, மதில், முல்லைக்கொடி,' என்பன அகராதி கூறும் பொருள்கள்; ஆயினும், இலக்கியங்களிலும் பேச்சு வழக்கிலும், 'மகளிர் நிறை'யையே இது பெரும்பாலும் குறிக்கின்றது. "கற்பெனப்படுவது சொல் திறம்பாமை" என்பது, மகளிர் நிறையையும் மற்ற வாக்குறுதிகளையும் குறிக்குமாயினும், "கற்பென்னும் திண்மை" என்ற குறள் வாக்கையும், "கற்பு என்னும் கலங்கா நிலைமை" என்ற உரையையும், ஒருங்கே விளக்கும். நீர்போல் கலங்காத, மரம்போல் அசையாத, மிகச் சிறிதாயினும் தனக்குரிய திண்மையினால் தன்னிலை பெயராத, நெகிழ்ந்து குழம்பி மற்றெதற்கும் இடங்கொடாத குணங்களை இயற்கையில் உடையதொன்றாய்,

யாவரும் காண எங்கும் கிடக்கும் ஒரு வஸ்துவாகும் கல். ஆகையால், ஆண்களைக் காட்டிலும் மன நெகிழ்ச்சியும் புரட்சியும் மிக்காராக மதிக்கப்படும் பெண்கள், தமது பெண்மையின் மானத்தை ஒட்டிய இந்தத் துறையில் மாத்திரம், ஓர் இம்மியும் கலங்காது அசையாது இடங்கொடாது நிலைபெயராது தமது மனத்தை நிறுத்திய தன்மையாம் நிறையை, கல்வியின் பண்புக்கு உவமித்துக் கூறுதல், எவ்வளவு பொருத்தமாயும் அழகாயும் இருக்கின்றது !

(3) அறம்(அறு+அம்)—பொதுப்பட, நீதி யொழுக்கத்தையும், 'இல்லறம்' 'துறவறம்' 'மனையறம்' என்னும் தொடர்களில் ஆசிரம தருமங்களையும் குறிக்கும். அறுக்கப்பட்டதே அறம் ஆகும்: அஃதாவது, மனம் போனபடி வரம்பின்றிச் செல்லாது, பெரியோர் வரம்புகோலி வரையறுத்த சுவட்டிலே, விதித்த விதிகளை அநுசரித்து ஒழுகும் ஒழுக்கமே அறம். வரைவு என்னும்சொல் விவாகத்தைச் சுட்டுவதும்; மறம்(மறு+அம்) என்னும் சொல், மறுக்கப்பட்ட விலக்குக்களைக் குறித்து, அறத்துக்கு எதிரிடையா யிருப்பதும், இவ்வாறே. இம்மூன்று சொற்களும், நாகரிகமும் முன்னேற்றமும் பிறவிப்பேறும் அடைய விரும்பும் மக்கள், மேற் பார்வைக்கு இன்பமாய்த் தோன்றும் பலவற்றைக் கைவிட்டு, துன்பமாய்த் தோன்றும் பலவற்றைக் கைக் கொண்டு, தமது மனங்களையும் இந்திரியங்களையும் அடக்கி ஒடுக்கி ஒழுக வேண்டிய கடமையை நன்கு கற்பிக்கின்றன.

(4) கரையேற விட்ட குப்பம், ஆணிப் பொன்காரன் சத்திரம், சென்னை, முதலிய ஊர்ப்பெயர்கள், சரித்திர வரலாறுகளைச் சுட்டி நிற்பது வெளிப்படை. குறும்பு, விருந்து, வம்பு, போன்ற சொற்களின் முதற் பொருள்களையும், இக் காலத்தில் வழங்கும் பொருள்களையும் ஆராயின், தமிழ் மக்களின் நாகரிக வரலாற்றில் சில விஷயங்கள் துலங்கும்.

(5) படக்கூத்து—இரங்கோன் முதலிய இடங்களில்,ஸினிமாவுக்கு இப்புதுப் பெயர் வழங்குகின்றதாம்; பலவகையிலும் பொருந்தியதே இது. திமிர்வரி—Punitive Tax—என்பதுமற்றொரு பொருத்தமான புதுச்சொல். தமிழிலே நூற்றுக்கணக்கான புதுச் சொற்கள் புகுந்துள்ளன; அவற்றை யெல்லாம் ஆராய்தல் அவசியம்.

(6) அலட்டு—ஒருவரிடத்தில் யாதானும் ஒன்றை வேண்டி, அடிக்கடி தொந்தரை செய்தல் (Importune) என்னும் பொருளிலே வழங்கும் இச் சொல், 'பிதற்றுதல்' என்னும் அர்த்தத்திலும் சில விடங்களில் வழங்குகின்றதாம். இப்படிப்பட்ட

அர்த்த பேதங்களை ஆராய்ந்து, சொற்களைத் தேர்ந்து தெளிந்து பிரயோகித்தலே சிறப்பாகும்.

(7) பிரயோக பேதங்களும் முறைகளும் தக்க மேற்கோள்களால் விளக்கப்படல் வேண்டும்.

இவ்வாறாகத் தமிழ்ச் சொற்களையும் சொற்றொடர்களையும் ஆராய்ந்து, இப் பகுதிக்குச் சிறிய இனிய கட்டுரைகள் வரைந்து உதவ, தமிழறிவாளரை வேண்டுகிறேன். —மா.

டக்கா மஸ்லின்

(“மாடர்ன் ரிவ்யூ” பத்திரிகையில் ஸ்ரீ T. C. லின்ஹா M. A., எழுதிய வியாசத்தை, மா. அனந்தநாராயணன் தமிழிற் சுருக்கி எழுதியது.)

பதினேழாம் நூற்றாண்டின் முன் பாகத்தில், டக்கா நகரம் வங்காள மாகாணத்திற்குத் தலைநகரான பொழுது, இந்தக் கைத்தொழில் அங்கே செழிக்க ஆரம்பித்தது. ஆனால் கீழ வங்காளம் ஆதி காலத்திலேயே நெசவு வேலைக்குப் பெயர்போன தென்பதை, கௌடிலயரின் அர்த்த சாஸ்திரத்தினால் தெரிந்துகொள்ளலாம். மொகலாய சம்ஸ்தானப் பிரபுக்களும், ஆங்கிலேய வர்த்தகர்களும், மெல்லிய வஸ்திரங்களை விரும்பிய காரணத்தால், இந்தக் கைத்தொழில் லோகப் பிரசித்தி அடைந்தது. 1666-இல் இருந்து ஆங்கிலேயர் இந்த மஸ்லினைத் தம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யத் தொடங்கினர். ஆக்ரா, மான்வா, புரோச் முதலிய விடங்களில் சன்னமான துணி செய்யப்பட்டபோதிலும், மஸ்லின் வியாபாரத்தில் டக்கா இணையற்று விளங்கிற்று.

மென்மையிலும் அழகிலும் இவ்வாறு சிறந்த டக்கா மஸ்லினைப் பற்றிப் பல அதி ஆச்சரியமான கதைகள் சொல்வதுண்டு. டக்கா மஸ்லின் வகைகளுக்கு மொகலாயர் இட்டபெயர்களே இதை விளக்கும். அவையாவன— (1) அபிரவன் (ஓடும் நீர்) இந்தத் துணியைக் கால்வாயில் போட்டால், அது கண்ணுக்குத் தெரியாதாம்.) (2) பவ்ட் ஹவா (நெய்தகாற்று) இந்தத் துணியைக் காற்றில் பறக்க விட்டால், மேகம்போல் மிதக்குமாம். (3) ஷாப் நம் (மாலைப்பனி) இந்தத் துணியை புல் தரையில் விரித்தால், பனியினின்றும் வித்தியாசப்படுத்த முடியாதாம். ஒரு மாடு புல் மேயும்பொழுது, அறியாமல் மஸ்லினையும் தின்றுவிட்டதென்று, ஒரு கதை உண்டு. மொகலாய சக்கிரவர்த்தி ஔரங்கஜேப், ஒருநாள், மேனியைச்சரியானபடி மறையாமல் உடையுடுத்தியதற்காகத் தன் மகளைக் கண்டிக்க, அவள், டக்கா மஸ்லினால் ஆகிய ஏழு உடைகள் தான் தரித்திருப்பதாகப் பதில் கூறினளாம்!

இத்தகைய பெருஞ்சிறப்பிற்குக் காரணம் யாது? டக்கா பருத்திச் செடியின் மேன்மை யென்று சிலர் கூறுவர். இந்தப் பருத்தி, மற்ற இந்தியப் பருத்திகளைக்காட்டிலும் உயர்ந்தது தான். இது டக்கா ஜில்லாவின் வட பாக

த்தில் விளைந்து வந்தது. இப்பொழுதோ, கவர்ன்மெண்ட் பொடானிகல் தோட்டத்தில் உள்ள இரண்டு செடிகளைத்தவிர, வேறு கிடையாது: இவைகளைக் கொண்டு இந்த வகைப் பருத்திச் செடிகளை விருத்திசெய்ய, கவர்ன்மெண்டார் முயல்கிறார்கள். இதற்குப் "போடி" என்பது சுதேசிப்பெயர். அமெரிக்கன் பருத்தி இதை விட வளமுடையது; ஆகையால், டக்கா மஸ்லின் சிறப்புக்குப் பருத்தியின் மேன்மை மாத்திரம் காரணமாகாது. உண்மையில், நூற்போர் நெய்வோரின் சாமர்த்தியம்தான் முக்கியகாரணம். சாதாரண நூல், இப்பொழுதுபோல் சர்க்காவில் நூற்கப்பட்டது. உயர்ந்த நூல், "டுவா" என்ற கைத்தறியில் நூற்கப்பட்டது. பின்சொன்ன தொழில் நடை பெறும்பொழுது உஷ்ணம் கூடாதாகையால், நூற்போர், பாத்திரம் நிறையத் தண்ணீரை அடியே வைத்துக்கொண்டு, அதன் மேல் நூற்பார்கள். நூற்பவர் அநேகமாய் ஸ்திரீகள்: இவர்களிலும் முப்பது வயதிற்கு உட்பட்டவர்தான் உயர்ந்த வேலை செய்வார்கள். ஏனெனில், இந்தக் கைத்தொழிலுக்கு மெல்லிய ஸ்பரிசமும், பார்வைக் கூர்மையும் வேண்டும். மூக்குக்கண்ணாடி தரித்த தற்காலச் சீமாட்டியர் மஸ்லின் நூல் நூற்கத் தகுதியற்றவர் போலும்! இப்பொழுது முன்போல் சாமர்த்தியம் உள்ளவர் டக்காவில் ஒருவருமே இல்லை.

டக்கா மஸ்லினது மேன்மையைப்பற்றியும் விலையைப்பற்றியும் ஒரு வார்த்தை சொல்லவேண்டும். இப்பொழுது சர்க்காவில் நூற்கப்படும் நூல், 200-ம் நம்பருக்கு மேற்படுவது துர்லபம். சாதாரண மில்துணி, 25 நம்பர் நூலால் ஆகியது. அந்தக்காலத்திலோ, டக்காவில் 550 நம்பர் நூலை நூற்று, உபயோகித்தார்கள். இங்கிலாந்தில், 'மெஷீனு'ல் நூற்கப்பட்ட 700 நம்பர் நூல். காட்சிச்சாலையில் காண்பிக்கப்பட்டது; ஆனால், அந்த நூலைக்கொண்டு உறுதியான துணி நெய்தல் அசாத்தியம். டக்கா மஸ்லின், 10 கஜம் 'பீஸ்' ஒன்றை ஒரு மோதிரத்துக்குள் நுழைக்கமுடியுமாம்! டக்கா மஸ்லின் சாதாரண ஜனங்கள் வாங்கக்கூடியது இல்லை. 10 கஜம் 'பீஸ்' ஒன்று, ஒருவனே வேலைசெய்தால், நெய்வதற்கு $2\frac{1}{2}$ வருஷங்கள் பிடிக்கும்! ஆகையால், 20 கஜம் 'பீஸின்' விலை, 400 அல்லது 450 ரூபாவாகவிருந்தது; அக்காலத்தில் ஒரு ரூபா இப்பொழுதைக்காட்டிலும் பல மடங்கு மதிப்புள்ளதென்பதும் ஞாபகமிருக்கட்டும்.

இந்தக் கைத்தொழில் ஏன் ஒழிந்துப்போயிற்று? ஈஸ்டிந்தியா கம்பெனியார், டக்காவின் வியாபாரப் போராட்டத்திற்கு அஞ்சி, அங்குள்ள நெசவுக்காரரின் கட்டைவிரல்களை வெட்டிவிட்டனரென்று, பலர் நம்புகின்றனர். இதற்கு ஆதாரம் இருப்பதாகக் காணவில்லை. தாம் விரும்பிய மஸ்லினைத் தயாரித்தவர்களை, கம்பெனியார் வீணில் வதைத்தார் என்று சொல்வது பொருந்தாது. பொன் முட்டையிடும் வாத்தை யாரேனும் கொல்வாரா?

ஆனால், ஈஸ்டிந்தியா கம்பெனியார், வேறு விதங்களில் தொந்தரை செய்தனர். நெசவுகாரர் தங்களுக்கே வேலை செய்யவேண்டுமென்றும், மிகத் தாழ்ந்த விலைக்குத் தங்களுக்கு விற்கவேண்டுமென்றும் நிர்ப்பந்தித்தனர். அதற்கு இணங்காதவரைச் சவுக்கால் அடித்துத் தண்டித்தனர். இதனால், நெசவுகாரர் மிகவும் வறியராய்ப் போயினர். தவிர யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பப்பட்டன; இங்கிலாந்தில் இறக்குமதி வரிகள் ஏற்படுத்தப்பட்டன, முக்கியமாய், மொகலாயர் ஆட்சி அழிந்து போனதினால், முன்

னிருந்த சம்ஸ்தான ஆதரவு இல்லை. இக்காரணங்கள் ஒன்று கூடியதால், இந்தச் சிறந்த தொழில் முற்றிலும் அழிந்து போயிற்று. இப்பொழுது சிரமப்பட்டால், மீண்டும் இத்தொழிலை உயிர்ப்பிக்கலாம்; ஆனால், இந்நாளிலே, அவ்வளவு விலையுயர்ந்த மஸ்லின் துணியை வாங்குவாரில்லை; ஆதலால், தொழில் கட்டிவராது; அப்படிப்பட்ட துணி அனாவசியமென்பதும் பலர் கொள்கை.

இந்திய தேசியக் கல்வி*

ஸ்ரீஜத் லாலா லஜபதிராய்

முதலாவது அதிகாரம்

தேசியக் கல்விப்பயிற்சி-முன்னுரை

இந்தியாவின் சுவாதீனத்தை நாடி உழைத்து வரும் தேசபக்த சிகாமணிகள் 'தேசியக் கல்வி'யைப் பற்றியும் பல ஆலோசனைகள் செய்து முயன்று வருகின்றனர். நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே இந்த இயக்கத்தைப் பஞ்சாபில் தொடங்கியவர்களில் நான் ஒருவன் என்று, இதையொட்டி என் பெயரை பெஸண்ட் அம்மையார் பரிந்து கூறியிருத்தல் பொருந்தும். 1883-ம் ஆண்டில் 'தேசியக் கல்வி' கூக்குரலை வட இந்தியாவிலே எழுப்பி, அதற்காகப் பாடுபட்டவர்களில் நானும் ஒருவன். அந்தக் காலத்தில் நாங்கள் போதனைசெய்த தேசப்பற்று, ஜாதி மத அபிமானங்களால் இடுங்கிக் குறுகிய இலக்ஷியத்தையுடையதென்பதும் வெளிப்படை.

கிறைஸ்தவப் பாதிரிமாரின் வழியைப் பின்பற்றி, ஸர் ஸையிது ஆமத்கான், வட இந்தியாவிலே சமயச்சார்பான கல்விப்பயிற்சிக்கு முதன்முதல் முனைப்பிடித்தார். முஸ்லிம்களுக்குள் அப்பொழுது புதிதாய்க் கிளம்பிய சாதி யுணர்ச்சியைக் கல்விப்பயிற்சி மூலமாய்ப் பேணி வளர்த்து, அதற்கேற்ற அநுகூலங்களைத் தேடும்

* இது, லாலாஜியின் *The Problem of National Education in India* என்ற ஆங்கில நூலைத் தமிழில் மொழிபெயர்த்தமைத்தெழுதியது-பஞ்சாமிர்தம் முதன்மாலையில், 1021-1023-ம் பக்கங்களைப் பார்க்க.—காபிரைட்—ப-ம் ப-ர்.

முயற்சிக்கு, அலிகர் நகரத்திலே அவர் ஸ்தாபித்த முகம்மதிய-ஆங்கில-ஓரியண்டல் கலாசாலை, ஓர் அறிகுறியும் கொள்கொம்புமாயிற்று. ஹிந்துக்களுக்குள் புதிதாய்த் தோன்றிய சாதியுணர்ச்சியைத் தழுவி, அதேமாதிரியாக, ஆரிய ஸமாஜத்தார், லாகூரிலே, தயானந்த-ஆங்கில-வைதிக கலாசாலையை ஸ்தாபித்த

CXXII

லாலா லஜிபதிராய்

னர். இப்பொழுதுள்ள ஹிந்து சர்வகலா சங்கத்தின் அடிப்படையான மத்திய ஹிந்து கலாசாலை (Central Hindu College) அப்பால் காசியில் ஸ்தாபிக்கப்பட்டது. இம் மூன்று கல்லூரிகளுக்கும், அதன் அதன் மூலஸ்தாபகர்களின் சாதி மத அபிமானங்களால் வரையறுக்கப்பட்டுக் குறுகிய 'தேசிய' லக்ஷியங்களே அஸ்தியாரங்களாயின. இவற்றில் சாதி மத பேதமின்றி எல்லா மாணவரும் சேர்ந்து கல்வி பயிலலாகும்; இவை மூன்றும் தேச பக்தியைப் பேணி வளர்க்க ஒருவாறு முயன்றுவந்தன; ஆயினும், இவற்றுள் ஒவ்வொன்றும் தனக்குச் சிறப்பான சமயப் பற்றுக்களைத் தழுவியே கல்வி புகட்டி வந்தது; அலிகரில் இஸ்லாம் வாசனையும், லாகூரில் ஆரிய வாடையும், காசியில் ஹிந்து மதக் காற்றுமே மேலிட்டு வீசின. துரைத்தனத்தார் நடத்திவந்த சாதாரணப் பள்ளிக்கூடங்கள் கலாசாலைகளுக்கும், இம்மூன்று 'தேசிய' வித்தியாபீடங்களுக்கும், இந்த ஒரு வித்தியாசந்தா-

ளுண்டு: இந்நாட்டு மொழிகளேயும், அரபி, ஸம்ஸ்கிருதம் போன்ற மதமூல பாஷைகளேயும், இம் மூன்று கல்லூரிகளும் அதிகம் கவனித்துப் பேணலாயின; இந்தியாவின் பூர்வ சரித்திரத்தையும் கலைகளேயும் தமது மாணவர் ஆராயும்படி, இவை துணை நின்று தூண்டிவந்தன; ஆயினும், மற்றெல்லா அம்சங்களிலும், துரைத் தனச் சர்வகலா சங்கத்தாரின் போதனை முறைகளேயும் பாடப் புஸ்தகங்களேயுமே இவை முழுதும் அங்கீகரித்து, அவற்றின் படியே கல்வி பயிற்றி, ஐரோப்பியர் பலரைத் தம் ஆசிரியராகக் கொண்டது மன்றி, யூனிவெர்ஸிடி பரீக்ஷைகளில் தமது மாணவர்கள் தேர்ந்து பட்டம் பெறுதலேயே, தமது காரியசித்திக்கும் வெற்றிக் கும் அளவுகோலாய்க் கொண்டிருந்தன. தயானந்த-ஆங்கில-வைதிக வித்தியாபீடத்தின் பொதுக் காரியதரிசியாயும், நிருவாக சபையின் உபதலைவனாயு மிருந்து, பொருளேயும் பொழுதையும் பாராட்டாமல், கால் நூற்றாண்டு வரை நான் உழைத்துவந்தேன்; அதன் ஆசிரியர் மாணவர்களோடு நான் நெருங்கிப் பழகியிருக்கி றேன்; இவ்வண்ணம் நான் நன்கு தெரிந்துள்ள அந்தக் கலாசாலை யைப் பற்றியே முக்கியமாய்க் கூறுகிறேன். 'தேசிய'க்கல்வி பயில் வோரின் ஜீவனோபாய விஷயத்தை மறந்துவிடாது, கல்விப் பயிற்சி யுடன் 'ஸ்வதேசிய'த்தையும் முதலில் கலந்தது, அந்தக் கலாசாலை யில்தான். அதைத் தொடங்கும்போது, மூன்று விஷயங்கள் முக்கியமாய்க் கருதப்பட்டன:—(1) படிப்புள்ள மேல் வருக்கத் தினருக்கும் படியாத பாமர ஜனங்களுக்கும் அந்நியோந்நியத்தை யும் அநுதாப வுணர்ச்சியையும் உண்டாக்குதல் (2) கல்விபயிலும் மாணவர்கள், பின் காலத்தில் நாட்டுப் பிரமுகர்களாவார் ஆத லால், ஸர்க்கார் சேவையையும் உதவியையும் எதிர்பாராமல் வாழும் படி, ஜீவனோபாயத் தொழில்களேயும் கலைகளேயும் அவர்களுக்குக் கற்பித்தல் (3) ஸர்க்காரின் போஷணை உதவி மேற்பார்வை எதுவு மின்றி, முழுசுவாதீனத்தோடு தேசியக் கல்வி போதித்தல்.

லாகூர் வித்தியாசாலை, முப்பத்திரண்டு ஆண்டுகளாக நடந்து வந்து, அரும்பெரும் தேசத்தொண்டு புரிந்திருக்கிறது; அதை ஏற்படுத்தியவர்களும், அதன் உழைப்பாளிகளும், சுய நலத்தைச் சிறிதும் கருதாமல், மேம்பட்ட தியாகபுத்தியில் ஈடுபட்டுச் செய் துள்ள நன்மைகளே, எந்நாளும் மறக்க முடியாது. ஆயினும், அவர் களுடைய ஆதிநோக்கங்களேயும் இலக்ஷியங்களேயும், 'தேசியக் கல்வி' நடைபெற வேண்டிய உத்தம முறையையும், சீர்தூக்கி ஆலோசனை செய்து பார்த்தால், அந்தக் கலாசாலை, தன் உத் தேசத்தை இனிது நிறைவேற்றி, சங்கற்பப்படி ஸாபல்யம் அடைந்ததாகக் கூறமுடியாது. லாகூர்க் கல்லூரியைப் போலன்றி, நாட்டுப் பிரமுகர்கள் ஸர்க்கார் உத்தியோகஸ்தர் முதலியோரின்

பூர்ண கடாக்ஷத்தோடும் தயவோடும் ஸ்தாபிக்கப்பட்ட அலிகர் முகம்மதிய கலாசாலையேனும், காசி ஹிந்து கலாசாலையேனும், உண்மையான தேசியக் கல்வியைப் புகட்டுவதில் சித்திபெற்று விட்டது என்று கூறவும் ஒண்ணாது; புனு பெர்கூஸன் கலாசாலையும் இத்தன்மையதே.

ஹரித்வாரத்திலே முனுஷிராம் ஸ்தாபித்த குருகுலமும் சமயக்கல்வி புகட்டுவதே ஆயினும், இதுகாறும் கூறிய 'தேசிய'க் கலாசாலைகளினும் மேலாக, அதைச் சொல்லலாம். இந்தியர் பணத்தையும் இந்திய ஆசிரியரையும் கொண்டு, இந்தியரே ஏற்படுத்தி நடத்திவருவது அந்தக் குருகுலம்; அதன் போதனு முறையில், இந்திய பாஷைகளுக்கே முதன்மை கொடுக்கப்பட்டிருக்கிறது; லாகூரிலும் காசியிலுமுள்ள கல்லூரிகளைவிட அதிகமாக, ஹிந்து மதத்தை அநுசரித்தே அது நடத்தப்படுகிறது; ஸர்க்கார் யூனிவெர்ஸிடி பாடங்கள் பரீக்ஷைகளை, அது கவனிப்பதில்லை; குருகுலவாசத்திலே மாணவர் அநுஷ்டிக்கும் விதிவிலக்குக்கள், நமது புராதன முறைகளைத் தழுவியனவாய், வைராக்கியமும் தியாகபுத்தியும் மேலிட்டு விளங்குவதை அங்கே காணலாம். ஆயினுமே, 'தேசிய' அம்சத்திலே, இதுவும் பிறவற்றைப் போன்றதே யன்றி மேலான தில்லை என்று, நான் அஞ்சுகிறேன். போல்பூரிலே தாகூர் ஸ்தாபித்து நடத்திவரும் பள்ளிக்கூடமும், வேறு சிலவும், தேசியக் கல்விபுகட்ட முயன்றுவருகின்றன.

ஸ்வதேசிக் கிளர்ச்சி முதலில் உண்டான காலத்திலே, வங்காளத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தேசியக் கல்விச் சங்கத்தின் (National Council of Education) முயற்சி ஒன்றுதான், என் அபிப்பிராயத்தில், உண்மையான தேசியக் கல்வியைப் போதிக்க முன் வந்தது. வட இந்திய கலாசாலைகளை ஸ்தாபித்து நடத்தியவர்களைப் போல, அந்தச் சங்கத்தார், ஜாதி மத ராகத் துவேஷங்களால் பாதிக்கப்பட வில்லை; நாட்டுக் கெல்லாம் பொதுவான பொருளாதார அவசியங்களை, அவர்கள் தீர ஆராய்ந்து கவனித்தனர்; துரைத்தனத்தார் ஆதரவில் ஏற்பட்டுள்ள சர்வகலா சங்கங்களின் போதனு முறைகளையும் ஸர்க்கார் உதவியையும் மதித்து நாடிலர்; இந்தியாவின் சுயாதினத்தையும், இந்தியர் அனைவரையும் ஒன்று சேர்த்து, ஐக்கிய தேசிய உணர்ச்சியை அவர்களுக்குள் பேணி வளர்ப்பதையுமே குறிக்கொண்டு ஒழுகினர். அதனுல், அவர் முயற்சி துரைத்தனத்தாரின் நோக்கங்களுக்கும் முயற்சிகளுக்கும் எதிரிடையாகி, ஸர்க்காரின் விரோதத்தை அடைந்து, பயன்படாது சிதைந்து போயிற்று. இன்னும் அச்சங்கம் இருக்கிறது; ஆனுல் அது பேருக்கு மட்டுந்தான். சுயநலம் கருதாது, பொருளை மதியாது, அச் சங்கத்தின் ஆதரவில் சொற்ப ஊதியம் பெற்று உழைக்க

வந்த மேதையர்கள், இப்பொழுது, இராசாங்க உத்தியோகத்தையும் வேறு வேலைகளையும் தேடி அலைகின்றனர். இந் நாட்டின் கல்விப்பயிற்சிச் சரித்திரத்திலே, அச் சங்கம், தனது பழைய மேம்பாட்டைக் குறிக்கும் ஒரு குட்டிச்சுவர் போன்றே, இன்று காண்கிற தென்னலாம்.

சமயக்கல்வி புகட்டி வரும் லாகூர் ஆரிய ஸமாஜக் கல்லூரியும், அலிகார் முகம்மதியக் கல்லூரியும், துரைத்தனத்தாரின் அவநம்பிக்கை நீங்கி, ஆதரவைப் பெற்று, ஸர்க்கார் மேற்பார்வையில் இன்று செழித்து வாழுகின்றன. காசிக் கல்லூரியோ, ஹிந்து யூனிவெர்ஸிடி யாகி, ஸர்க்காரின் நிழலிலே தழைத்தோங்குகின்றது. இந்த வித்தியாசாலைகளெல்லாம், கல்விப்பயிற்சி விஷயத்தில், நாட்டுக்கு நன்மை பயக்க வில்லை என்றேனும், இவற்றை ஸ்தாபித்து நடத்திவருவோரின் இலக்ஷியங்கள் சிறந்தன அல்ல என்றேனும், அவர்கள் தேச பக்தியை அவமதித்தேனும், நான் ஒன்றும் கூற வில்லை. அவையாவும், அவற்றை நடத்துவோரின் தேச பக்திக்கும் பொதுநல உழைப்பிற்கும் சிறந்த அத்தாக்ஷிகளாய் விளங்குகின்றன. ஆயினும், இந்திய தேசியக் கல்வி அபிவிருத்தி விஷயத்திலே, அவைகள் சாதிக்க முடியாமல் தவறவிட்ட அம்சங்கள், நாம் செய்யும் மேல் ஆலோசனையில் உதவியாகும் அளவேயன்றி, உண்மையான தேசியக் கல்வியை இக் கலாசாலைகள் போதித்துவருகின்றன என்று, சொல்லமுடியாது. வீணை, தவறான எண்ணங்களை எண்ணிக்கொண்டு, போலி மொழிகளால் மயங்கி, பனப்பால் குடிப்பதில் பயனில்லை; இதை நாட்டுத் தலைவர்கள் நன்கு கவனித்து, தேசியக் கல்வியைப் பேணிவளர்க்கும் ஆலோசனையில் இவ்வுண்மையை மறந்துவிடாது, ஒழுகுவாராக. நாம் கொண்டுள்ள தப்பெண்ணங்களை ஒழித்து, 'தேசியக் கல்வி' உண்மையில் எத்தன்மையது என்பதைத் தெளிவாய் அறிந்து கொள்வதே, நமது முதற் கடமையாகும்.

தேசியக் கல்வி.—இவ் விஷயத்தையும், நமது தேசியக் கல்வி எப்படியிருக்கவேண்டும் என்பதையும் பற்றி, பெஸண்ட் அம்மையார் கூறியிருப்பது, பொருள் செறிந்து காண்கின்றது. பின்வருவது அவர் கூற்றாகும்:—

"நமது வாலிபர்களின் கல்விப் பயிற்சி, அந்நிய நாட்டாரின் ஆதிக்கத்துள்ளாகி, அந்நியர் வாழ்க்கைக் குறிக்கோள்களை அநுசரித்து நடக்கும்படி விட்டு விடுவதைக் காட்டிலும், தேசிய வாழ்க்கையின் வீரியத்தை விரைவிற் கெடுப்பது, மற்றொன் றில்லை. இந்திய மக்களுக்குப் புகட்டப்படும் கல்விப் பயிற்சி, அவர்களுடைய ஆன்ம பலத்தைச் சிதைத்துத் தேசிய உணர்ச்சியைக் குலைத்துவருகிற தென்று, 1896-ம் ஆண்டு முதல், நான் இந்திய ஜனங்களுக்கு இடித்துச் சொல்லிக்கொண்டே வருகிறேன், அந்நியர் பழக்க வழக்கங்களும், அந்நியர் நடை உடை பாவனைகளும், அந்நியர் வழி

முறைகளும், அந்நியர் பாஷை மூலமாக வற்புறுத்தப்பட்டு; பாதிரிகள் பள்ளிக்கூடங்களிலே அந்நியர் மதமும் கூடப் போதிக்கப்படுவதால், இந்திய மாணவர் மனம் பாழ்பட்டு வறண்டு, அவர் மனப்பான்மையே இயற்கை மாறிச் சிதைந்து, ஆன்ம லாபத்தை மதியாத வழிகளில் திரும்பிவிடுகின்றது. இந்திய வாலிபர் கல்வி பயிலுவது இவ்வாறாக, நாட்டிலே தேசிய உணர்ச்சி குன்றி யழிந்தது வியப்பன்றே...''

(1) இந்திய தேசியக்கல்வி, இந்தியர் ஆதிக்கத்தில், இந்தியரே அமைத்து நடத்தி வருவதாய் இருக்கவேண்டும். இந்தியரின் வாழ்க்கைக் குறிக்கோள்களை அநுசரித்த பக்தி, ஞானம், சிலங்களைக் கைக்கொண்டு, இந்திய மதநூல்களின் கேவலம் அக்ஷரப் பிரமாணங்களையே பின்பற்றியொழுகாமல், இந்திய மதங்களுக்குப் பொதுவான விரிந்த நோக்கத்தால் வியாபிக்கப் பட்டு, நடைபெறவேண்டும். அந்த நோக்கம் விசாலமானது; பொறாமையற்றது; சகல சமயங்களையும் தழுவிக் கொண்டிருப்பது; மனிதன் பல வழிகளால் கடவுளை அடைகிறான், எல்லா மதாசாரியர்களும் ஈசுவரனிடமிருந்து வந்தவர் தான் என்பதை அறிந்து, அதற்கேற்ப ஒழுகுவது* * *

(2) பெருமை நிறைந்த மகத்தான தேச பக்தியின் நடுவே தேசியக் கல்வி வளர்ந்தேற வேண்டும். இந்திய இலக்கியங்கள்; இந்திய சரித்திரங்கள்; விஞ்ஞான சாஸ்திரங்களிலும், கலை ஞானங்களிலும், இராஜநீதி யுத்தம் குடியேற்றம் கைத்தொழில் வியாபாரம் வாணிகம் முதலிய துறைகளிலும், இந்தியருற்ற வெற்றிகளை எடுத்துரைக்கும் வரலாறுகள்; இவற்றை இடைவிடாது பயிலுவதால், தேசியக்கல்வி வளரும் மனோநிலை, எப்பொழுதும் இனியதாய், புதியதாய், சக்தி யளிப்பதாய் விளங்கவேண்டும். தர்ம சாஸ்திரத்தைப் போலவே அர்த்த சாஸ்திரத்தையும், சமய நூல்களைப்போலவே அரசியல் நூல்களையும் பௌதிக சாஸ்திர நூல்களையும் பாராட்டிப் பயில வேண்டும்.

(3) குடும்ப வாழ்க்கையே தேசியக் கல்வியின் அடிப்படையா யிருக்க வேண்டும். இலக்ஷியங்கள், விருத்திகள், கோட்பாடுகள், இராகத்துவேஷ உணர்ச்சிகள் முதலியன, இரண்டிற்கும் ஒரே மாதிரி யிருக்கவேண்டும்; ஏனெனில் குடும்பங்களால் ஆகியதே நாடு; வீட்டிற்கும் பள்ளிக்கூடத்துக்கும் இப்பொழு துள்ள எதிர் நோக்கம் ஒழியவேண்டும். பள்ளிகள் கல்லூரிகளி லுள்ள ஆசான்கள் வீட்டிலுள்ள குரவர்களுடன் ஒத்துழைக்கவேண்டும்.

(4) தேசியக்கல்வி, தேசத்தாரின் சுபாவத்தை ஒவ்வொரு முகத்திலும் ஒத்து நிகழ்ந்து, தேசிய குணத்தைப் போற்றி விருத்தி செய்யவேண்டும். இந்தியாதேசம், ஒரு சிறிய இங்கிலாந்தென்னும்படி, அல்லது, பெரிய இங்கிலாந்தே என்னும்படி, ஆக வேண்டாம்; இப்பொழுதினும் மகத்தான இந்தியா ஆகவே விருத்தி யடையவேண்டும். ஆங்கிலக் குறிக்கோள்கள் இங்கிலாந்துக்கு நல்லன, இந்தியக் குறிக்கோள்களே இந்தியாவுக்கு நன்மை பயப்பன. உலகத்திலே, கேவலம் எதிரொலிகளையும், எகாகங்களையும் நாம் வேண்டிலேம்; இயற்கையின், கடவுளின், பல்வகைப்பட்ட குண விசேஷங்களை யெல்லாம் பிரதிபலித்து, பல்வேறு நாட்டினரும், பல்வேறு வாச்சியங்களில், எகோபித்து வாசிக்கும் ஸங்கீத ஸம்மேளனமே, நாம் வேண்டுவது. இயற்கையில் ஒரு வருணத்தையே காண்கின்றோமா? மாங்களும் மலர்களும் மலைகளும் வானமும் ஒரே நிற ஆடையை உடுக்கின்ற

னவா? ஒன்றோடொன்று ஒத்திலகும் வேற்றுமைச் சேர்க்கையே சம்பூரணத்தின் இயல்பு; ஒரே தனிமை அன்று.

இந்தியாவின் குற்றங் குறைகளுக்காக மன்னிப்பு வேண்டி, இந்தியரின் ஆசார அநுஷ்டானங்கள், பாரம்பரை சம்பிரதாயங்களுக்காகப் பரிந்து பேசியதெல்லாம் போதும், நிறுத்தும். இந்தியா, இந்தியாதான்; இந்தியாவுக்காக வேண்டிப் பேசி நியாய நிரூபணஞ் செய்து சமாளிக்கும் அவசியமேயில்லை. ஏனெனில், கடவுளின் சம்பூரண சௌந்தரியத்தை ஒருவாறு சின்ன பின்னமாய்ப் பிரதிபலித்துக் காட்டும் ஜனசமூகங்களிலே, இந்தியாவினும் சிரேஷ்டமான தொன்றை, அற்புதமான தொன்றை, கடவுள் இன்னும் கற்பித்தலர் என்பது நிச்சயம்.''

இதை வாசிக்கும் இந்தியன் எவன்தான் மனம் பூரித்து மகிழ்வெய்த மாட்டான்? இந்த மாதிரி இந்தியாவைப் புகழ்ந்து நானும் சில சமயங்களில் பேசிய துண்டு; இன்னும், பேச நேரலாம். ''தியோசாபிக்கல்'' சங்கத்தை ஒட்டியும், காசி மத்திய ஹிந்து கலாசாலை சம்பந்தமாயும், பெஸண்ட் அம்மையாரின் உழைப்புக்கு, இந்தியர் எல்லோரும் பெரிதும் கடன்பட்டிருக்கிறோம்; ''ஹோம் ரூல்'' இயக்க சம்பந்தமாய், அவருக்குரிய நம் கடன், பின்னும் எவ்வளவோ பெருகிவிட்டது. ஆதலால், அவர் கூறுவனயாவும், நாம் கவனத்தோடும் பணிவோடும் கேட்டுச் சிந்தித்தற்குரியன; ஆயினும், இக்காரணங்களினாலேயே, நாம் அவ்வாறு கேட்டுச் சிந்தித்த பின்னர், அவர் கூற்றுக்களை ஒப்புக்கொண்டு ஏற்கமுடியாவிடில், அதையும் தெளிவாய்க் கூறிவிடுவது, நமது கடமையாகின்றது. குருட்டுத்தனமாய் நாம் அவரைப் பின்பற்றவேண்டுமென்று அவர் விரும்பவில்லை; தான் கூறுவனவற்றில் தவறேயிரா தென்றும் அவர் கூறிலர்.

இந்தியா புத்துயிர் பெற்று மாறிக் கொண்டுவரும் காலம் இது. இந்தத் தருணத்திலே இந்தியப் பிரமுகர்களின் கடமை சிறிதன்று; எல்லாம் கல்விப்பயிற்சியைப் பொறுத்திருக்கிறது; அதுதான் நமக்கு உயிர் நிலையான விஷயம்; நம்முடைய பிரசினைகளி லெல்லாம் அதுவே முக்கியமானது; அதுவே; மற்றெல்லா விஷயங்களுக்கும் அடிவேர் என்னலாம். ஆதலால், கல்விப் பயிற்சி விஷயத்தில் குழம்பிய தெளிவில்லாத திரவமான அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் நாம் கொண்டிருத்தல் பொருந்தாது. நமது வருங்கால வாழ்க்கை முழுதும் அதைப் பொறுத்திருக்கிறது. ஆதலால், நமது முழு மனத்தையும் சக்தி புத்திகளையும் உபயோகித்து, அந்த விஷயத்தில் தெளிவான தீர்மானத்துக்கு வருவது நமது கடமை. அவரவர் விருப்பு வெறுப்புகளுக்கும் போலி உணர்ச்சிகளுக்கும் இடங்கொடுக்க லாகாது. ஆழ்ந்து அமர்ந்து ஆராய்ந்து, கவலையோடும் விழிப்போடும் தீர்க்காலோசனை செய்த பிறகே, தீர்மானஞ் செய்யவேண்டும்.

அவசரப்பட்டோ, அபிமானத்தினாலோ செய்யும் தீர்மானம், நமது முன்னேற்றத்துக்குத் தடையாகிவிடலாம்.

இந்தியரின் மனோநிலை இப்பொழுது இளகிய பருவத்திலிருக்கிறது. ஜன மதிப்பையும் பிரியத்தையும் நம்பிக்கையையும் பெற்றுள்ள தலைவர்கள் எவ்வழி திருப்பினும், அது திரும்பலாகும்; இந்தப் பருவத்திலே விதைக்கும் வித்துக்கள், ஆழ்ந்து பதிந்து வேரூன்றிக் கிளர்ந்தோங்கி வளரும்; அப்பால், அவற்றைப் பிடுங்கி யெறிவது சுலப மன்று; வேண்டிய வண்ணம் பிற்பாடு திருப்பிக்கொள்ளலா மென்றெண்ணி, தேசியப் போக்குகளையும், ராகத்துவேஷங்களையும், உணர்ச்சிகளையும், மனோபாவங்களையும் அவசரத்தில் உண்டாக்கி மூட்டிவிடுதல், பெருந்தவறு. விவேகமும் பொறுப்புணர்ச்சியு முள்ள தலைவர் எவரும், அப்படிச் செய்யார்; அப்படிச் செய்வதால், பலவித இடையூறுகளும் நஷ்டங்களும் விளையும்.

(தொடரும்)

"தாருல் இஸ்லாம்"

சித்திரப்படத்துடன் கூடிய சிறந்த செந்தமிழ்ச் சஞ்சிகை.

இதன் மேன்மையையும் அழகையும் அறியாதவர் இத்தமிழுலகிலும் உண்டோ? இது வரையில் 5000-த்துக்கு மேற்பட்ட அறிஞர்கள் இதனால் பெரும்பயன் அடைந்து வருகின்றனர். இஸ்லாத்துக்கும் இதர மதங்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும், மேன்மை தாழ்மைகளையும் நன்குணர்வதற்கு இஃதொன்றே சிறந்த பத்திரிகையாயிருக்கிறது. மத சீர்திருத்தத்துக்கும், ஆசார சீர்திருத்தத்துக்கும் கல்வியின் முன்னேற்றத்துக்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் இப்பத்திரிகையே கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இதன் அருமையையும் பெருமையும் ஆழ்ந்து நோக்குங்கால் இதன் சந்தா மிகக் குறைவானதாகவே காணப்படும்.

வருஷசந்தா ரூ. 3. தான். வெளிநாடுகளுக்கு ரூ. 4.

ஹிந்து சகோதரர்களுக்கும் சொதுஸ்தாபனங்களுக்கும் எல்லா மாணவர்களுக்கும்.

வருஷசந்தா ரூ. 2. வெளிநாடுகளுக்கு ரூ. 3.

ஒவ்வோர் ஆண் பெண் கையிலும் இப்புஸ்தகம் ஹஸ்த பூஷணமாய் விளங்கத் தக்கது. உடனே எழுதுங்கள்.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்
தபாற்பெட்டி நெ. 15, சென்னை.

சரித்திரக் கதைகள்

ஸ்ரீ. அ. மாதவையர், B. A., சென்னை

முகவுரை

உலகத்திலே பல ஆறுகள் விழுந்து பெருகும் அலைகடலிலே அழுந்தி முழுகி முத்துக்குளித்து, விலைமதிப்பில்லாத வெள்ளிய பெரிய முத்துக்களை எடுத்து வந்து, நிலையில் செல்வத்தை நிறையப் பெற்றவர் உள்ளம் உகந்து பூணும்படி உதவுவர்; பல பல மக்களின் வரலாறுகள் குலவிப் பெருகும் சரித்திர சாகரத்தில் திளைத்தாடும் இன்ப முயற்சி யாம் சலாபத்திலே, எமக்கும் பிறர்க்கும் கிடைத்த அலகில் புகழ் இலகு முத்துக்களையும், நமது வாசகர்கள் மதிமுதிர்ந்து மனமகிழ்ந்து அநுபவிக்கும்படி, இந்தத் தலைப்பின்கீழ் உதவிவருவோம்.

1. பலபத்திர சிங்கன்

நேபாளம்! பாரிலே அறவாழி அர்ச்சனாய் அவதரித்து வந்த புத்தபகவான் பாதம்படிந்த புண்ணிய பூமி; போரிலே புலிகளே போலும் குருக்கர்களின் அருமைத் தாய்நாடு; ஊரிலே வைதிகர் வணங்கும் சாளிக்கிராமங்கள் அகப்படும் தேசம்; ஆரிய நாரீமணிகளிலே, சுபாதீனத்தை முற்றும் துறந்துவிடாது வாழும் உயர்தனிப் பெண்மணி; வீரர்க்குள் வீரனும் பலபத்திர சிங்கன் சூட்டிய வெற்றிமாலையோடும் விளங்கும் கண்மணி!

1814வது நவம்பர் முதல் தேதி யன்று நேபாள யுத்தம் தொடங்கிற்று. அதற்குச் சில நாள்களுக்கு முன்பே, நான்கு பெரிய படைகளுடன் நான்கு புறங்களிலிருந்தும் நெருங்கிவந்து, குருக்கர்களை அச்சமுறுத்த முயன்றனர் ஆங்கிலேயர். நாற்படைகளுக்கும் சேனாதிபதியான ஜெனரல் கில்லஸ்பியின் சைநியம், கர்னல் மாபியின் தலைமையின் கீழ், அக்டோபர் 24வ டீராடூனை வந்தடைந்தது. ஆங்கிலேயரின் படைவீட்டு நகரங்களில் தலையான தொன்று டீராடூன். குருக்கருக்குச் சொந்தமான குலுங்கக்

கோட்டை; செங்குத்தான பாறைகளும் நெருங்கியடர்ந்து வளர்ந்த மரங்களுமே இயற்கையில் அமைந்த மதிற்சுவராக, ஓர் இரும்புக் கதவினால் காப்புண்ட சிற்றரண், டீராடேனுக்கப்பால் மூன்றரை மைல் தூரத்தி லிருந்தது. இளஞ்சிங்கம் போன்ற குருக்கவீரன் பலபத்திரசிங், நிகழப்போகும் யுத்தத்தை முன்னிட்டு,300 படையாட்களோடு, அந்தச் சிறிய மலைக்கோட்டையைக் காத்திருந்தான்; பெண்பாலார், குழந்தைகள் சிலரும் அவனுடனிருந்தனர். டீராடேனை அடைந்த நாள் இரவே, உடனே கீழ்ப்படிந்து கோட்டையை விட்டுவிடும்படி, மாபி கடிதம் அனுப்பினர். "போர் முகத்தில் காணுவோம்" என்று கம்பீரமாய்ப் பதில் அனுப்பினன், பலபத்திரன். கோபாவேசங்கொண்ட மாபி, மறுநாட்காலையே புறப்பட்டுப் போய், குலுங்கக் கோட்டையைப் பீரங்கிகளினால் தாக்கினர்; ஒன்றும் பலிக்க வில்லை உடனே சேனாதிபதிக்குச் செய்தியனுப்ப, மறுநாள் (26உ) கில்லஸ்பியே நேரில்வந்து சுற்றிப்பார்த்து, அவசரப்படாமல் இரண்டு மூன்று தினங்களாகப் பலமான ஏற்பாடுகளை வேண்டியபடி செய்துகொண்டு, நான்கு தளபதிகளின் கீழுள்ள நான்கு சைநியங்களால் கோட்டையை வளைந்து சூழ்ந்து, முற்றிக்கை தொடங்கினர். இருவரும் சுட்ட குண்டுகளால், இருகட்சியிலும் பெருஞ் சேதம் விளைந்தது; ஆங்கிலேயர் ஆயிரக்கணக்கினர், குருக்கரோ முந்நூற்றுவரே; ஆயினும் பலபத்திரன் தணிவதா யில்லை. சண்டெலி மிருகேந்திரனை எதிர்த்துப் போராடுவதுபோல, அவன் பொருவதைக் கண்ணுற்ற ஆங்கில சேனாதிபதி, தளகர்த்தர்களின் உள்ளங்களில், கோபாவேசமும் வீராவேசமும் ஆச்சரியமும் கிலேசமும் மாறிமாறிக் கொந்தளித்துக் கொதித்தோங்கின. "என் உயிர் போயினும் சரி, இச் சிறு கோட்டையைப் பிடித்தே தீருவேன்!" என்று பகிரங்கமாய்ச் சபதம் செய்துகொண்டு, ஜெனரல் கில்லஸ்பி, மீண்டும் சென்று கோட்டையைத் தாக்கினர்: அவருடன் சென்ற படைகள் பின்னிட்டு விட்டன; அந்தோ! சேனாதிபதி உயிரையே இழந்தார், வேறு சில தளபதிகளும் நூற்றுக்கணக்கான படைவீரர்களும் மாண்டொழிந்தனர்; குலுங்கக் கோட்டை கலங்காது நின்றது. கோட்டைக்குள் அடைபட்டிருந்த பெண்களுமே, ஆங்கிலப் படைகள்மீது கற்களை யெறிந்து போராடினர் என்றால், இது வியப்பாய்த் தோன்றுது. கில்லஸ்பி உயிர்நீங்கவே, அடுத்தபடியி லுள்ள தளபதி மாபி, சேனாதிபதியாயினர்.

> "இன்றுபோர் முனைவிட்டு ஓடிப் பிழைத்தவன்
> பின்றும் ஒருநாள் போர்செயல் ஆகும்"

என்னும் ஆங்கில வசனத்தை உட்கொண்டு போர் ஒழிந்து, அவர் டீராடேன் மீண்டார். அப்பால், மலை கெல்லி ஏலி பிடிப்பது

போல, குலுங்கச் சிற்றரணைப் பிடிக்க, டில்லியிலிருந்து பீரங்கிகளையும் பெரும் படைக் கருவிகளையும் தருவித்தார். அவை நவம்பர் 24உ தான் வந்து சேர்ந்தன. அதுவரை, ஒரு மாதக் காலமாக, ஆங்கிலேயரின் சைநியங்கள் நேபாளத்துக்குள் புகமுடியாமல், பலபத்திரன் வீரச் செயல் தடுத்துவிட்டது. மார்ச், 2-ம் தேதியே மீண்டுஞ்சென்று, புதிய படைகள் கருவிகளுடன் கோட்டையைத் தாக்கினர்; மீண்டும் தோல்வியுற்றனர்.

இதற்குள், குலுங்கக் கோட்டையில் குடிதண்ணீரின்றிப் போயிற்று. கோட்டைக்கு வெளியே, ஆங்கிலேயர் பாசறையின் சமீபத்திலுள்ள நாலாபாணி மலையருவிதான், அதன் ஜலாதாரம்; அருவி நீர் கோட்டைக்குள் செல்வதை எதிரிகள் மறித்து விலக்கி விட்டதால், கோட்டையைக் காத்திருந்த குருக்க வீரர்கள், மரண காயங்களாலும், நோய்களாலும், ஓய்வொழிவின்றிச் செய்யும் போராட்டத்தாலும், நாளுக்கு நாள் வாடி மெலிந்து வருந்தியதுமன்றி, குடிதண்ணீருமின்றித் தவிக்கலாயினர். "தாகம்! தாகம்!" என்று ஸ்திரீகளும் குழந்தைகளும் ஓலமிடும் கதறுதல்கள், ஆங்கிலேயர் சுட்ட குண்டுகளினும் கடுமையாக, குருக்க வீரர்களின் நெஞ்சங்களை ஊடுருவிப் பாய்ந்து பிளந்தன; இதற்குள், ஆதியிலிருந்த 300 வீரர்களில் 230 பேர் மாண்டுபோக, எழுபது வீரர்தாம் மீந்திருந்தனர்; இவ்வாறிருந்தும், பலபத்திரன் கீழ்ப்படியும் பேச்சே யில்லை.

நவம்பர் கடைசி நாளன்று, அதிமும்முரமான போரின் நடுவிலே, பலபத்திர சிங்கத்தின் கர்ச்சனை திடீரென நின்றது; அடுத்த நிமிஷத்தில், கோட்டையின் இருப்புக் கதவு, படீரெனத் திறந்தது. கையில் உருவிய வாளும், தோளில் துப்பாக்கியும், அரைக்கச்சில் குக்குரிக் கத்தியும், தலைச்சாத்தில் சக்கிரச் சின்னமும் இலங்க, அழிவிலாப் புகழ்கொள் எழுபது * வீரர்களும், மலர்ந்த முகமும் நிமிர்ந்த நடையுமாய் அதி கம்பீர கதியில் வெளிப்போந்த தங்கள் தலைவன் பலபத்திர சிங்கன்பின் வந்தனர். இன்னது நடக்கப் போகிறதென்று தெரியாமல், ஆச்சரியத்திலே ஆழ்ந்து, கண்ணிமையாது நின்ற ஆங்கில தளபதிகள், சைநியங்களை ஊடறுத்துச் சென்று, மலையருவியை அடைந்து, அவர்கள் பிரமை நீங்கு முன்னரே, வாயார வயிறார நீருண்டு விட்டு, அவர்கள் கையில் அகப்படாமல், மாயமாய்ப் பறந்தோடி விட்டனர், குருக்கவீரர். என்ன நெஞ்சழுத்தம்! என்ன துணிவு! என்ன வீரம்! அம்மம்ம! அந்த அற்புதக் காட்சியை மனக்கண்ணால் உருப்படுத்தி நினைத்துப்

* குருக்கர் மொத்தம் 600 பேரென்றும், அவர்களில் 90 பேரே மீந்திருந்தனரென்றும், ஆங்கிலேயர்களில், சேனாபதி உட்பட 31 தளபதிகளும், 718 போர் வீரரும் மாண்டொழிந்தனரென்றும், கூறுவதுமுண்டு.

பார்க்கப் பார்க்க, பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் நெஞ்சில் குடிகொண்டு ததும்பி வழிகின்றனவே. பட்டவன் தலையை வெட்டுவது போல், குளுங்கக்கோட்டையை அப்பால் தட்டி நிரத்தினர், ஆங்கிலேயர். அக்கோட்டை இருந்த விடத்திலே, ஆங்கிலேய வீரர்கள் கட்டிய ஒரு சிறு ஞாபகச் சின்னத்தை இன்றும் காணலாம்.

" அதிசூரனான நமது விரோதி பலபத்திர சிங்கனது வீரசாகசத்தை வியந்து கவுரவம் செய்து, அவனுக்கு நாம் செலுத்தும் இறைக்குறி இது "

என்று, அதன்மேல் பொறித்திருக்கிறது. உலகத்திலே இது வரை நிகழ்ந்துள்ள வீரச் செயல்களிலே, எதுதான் இதற்கு மேம்பட்ட சிறப்பினதாகும்?

The "Hindu Nesan"

(THE LEADING TAMIL WEEKLY.)

Commands a decent circulation-Stands as a best medium for advertising.

News of varied interest a special feature.

" இந்து நேசன் "

வாரப்பதிப்பு-சந்தா விவரம்.

1-வருஷத்திற்கு	...	ரூ.	6	0	0
6-மாதத்திற்கு	...	,,	3	8	0
3-மாதத்திற்கு	...	,,	1	12	0

மலாய், மோரிஸ், நேட்டால், முதலிய வெளிநாடுகளுக்கு.

1-வருஷத்திற்கு	...	,,	10	0	0
தனிப்பிரதி	...	,,	0	0	0

For particulars apply to:

THE MANAGER, THE "HINDU NESAN"

65, Armenian MADRAS. Street,

தன் நெஞ்சை அறிவுறுத்தல்

(1) பூமண்டலத்தில் உடன்பிறந்து, பொருளும் புகழும் பொலிந்தொளிர,
தாமும் மகிழ்ந்து, மற்றவரும் தம்மை மதிக்க, 'நல்லவர்' ஆம்
நாமம் சிறந்து, நலங்கள்பல நாளும் பெருகி, நாடறியச்
சேமம் குலவித் திகழ் மாந்தர் சிலரோ, செகத்தில், பலப்பலரே!
(2) நீறு திருமண் நெற்றிகளில் நிலவ, நிதமும் நெடுமலைகள்
ஏறி இறங்கி இறையவனை ஏத்துவார், தம் இதயமகிழ்
பேறு பெறச்செய் வினைகளின் மெய்ப் பெற்றி காணில், அவர்போற்றிக்
கூறு கடவுள், 'பித்தன்' 'மால்' என்னும் கொள்கை குறித்திடுமே!
(3) 'எல்லாம் காணும் இறைவனையே ஏமாற்றினம்' என்று உளமகிழ
வல்லார், தம்போல் மனிசர்களை மதிப்பரோ காண்! மாநிலத்தில்
நல்லார் பொல்லார் என் வகுக்க நாணும் உள்ளம; 'ஒரு நாதன்
இல்லாக் குறை ஈது' என்று துணிந்து, இரங்குவாரும் ஈங்குளரால்.
(4) அவர்போல் நீயும் அகமகிழ்ந்து வாழ்ந்து கழிய அறிகிலை; மண்
சுவர்போல் சுரணை ஒழிகிலை; வெந்துயரோ, சுகமோ, வினைவிளைவைத்
தவர் போல் சமனுய்த் தாங்குகிலை; தனி என் நெஞ்சே! தாரணியில்
எவர் போல் உன்னை எண்ணிடுவேன்? என்னே, என்னே, உன்மதியே!
(4) மண்ணைப் பொன்னை மாதர்களை மதியேன் என்பை: மண்ணுலகீம்
எண்ணிற் பொருள்இல் லார்க்கில்லை என்ப தறிவை; இது ஒன்றே:
கண்ணிற் செல்வர் போக்கியங்கள் காணக் கருத்திற் கருகிடுவை;
வண்ணப் பொருள்கள் யாவும் உனை மயக்கி வதைக்க மறுகுவையே!
(6) எனினும், உன்சொல் பொய்யில்லை என்ப தறிவேன்; என் நெஞ்சே!
இனி என் செய்வது? எத்தனைநாள், இவ்வாறு உனக்கும் பிறர்க்கும் ஒரு
கனிவும் இன்றி, கருத்தொத்த சுகமும் இன்றிக் கழிவது? வீண்
நினைவில், நினையே நீ நொந்து, சிந்தித்து உலகை, நிகழ்வதுவே.
(7) ஆதலால், ஒன்று ஓதுவல் கேள்: அதையும், நெஞ்சே, இகழுவையோ,
போதம் எனநீ போற்றுவையோ, அறியேன்: பூமண் டலந்தனிலே
நீதந் தடுதன எதுவும்இலை; நிசம், பொய், இதுவே நிச்சயம் என்று
ஓது வாரும் இலை; உலக இருளில் அறிவாம் ஒளி கொண்டே
(8) தெரிந்து தெளிந்த சிலவாம்; அச் சிலவும் ஐயம் திரிபுளவாம்!
புரிந்த வரையில் புகலுவல் கேள்: புவியில் மக்கள் புகுவகையும்,
எரிந்து கரிந்த பின் ஏகும் இலக்கும், அறியேம்; எனினும், இவண்
திரிந்து குலவும் சில நாளில் தீமை இன்றிச் செயற்பாலது,
(9) அன்பே ஆகும்; உயிர் நிலைகள் அன்பின் வழிய; உயிர்த்தேட்டம்
இன்பே; இன்பம் சிறக்கும் இடம், இதயத்து அன்பால் தனை உதவி,
மன்பே ருலகில் பிறர்துன்பு துடைக்கும் வழியாம்; மானிடர், தம்
துன்பே தொலையத் தூயதனி இன்பம் துய்க்கும் சூழ்ச்சி, இதே.
(10) அதனால், நெஞ்சே! அனுதினமும், உன்னின் அயர்வார், அழிவாருக்கு
உதவாய்; உலகம் பலவிதமால், உனக்கேன் கவலை பிறர் செயல்கள்?
கதவோ சுவரோ, கடைநாள்தான், இன்றோ என்றோ, கருதாமல்,
இதமே எவர்க்கும் இயன்றவரை இயற்றுய்; இன்பவழியிதுவே.

—அழகதகவி.

சிசுமரணம்

அதன் காரணங்களும் பரிகாரங்களும்

ஸ்ரீமதி டாக்டர் S. முத்துலக்ஷ்மியம்மாள், M. B. & C. M,
சென்னை

(I-1060-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

I-(2) இந்த வகுப்பைச் சேர்ந்தவர், பட்டணங்களில் வசிக்கும் பிராமணர், பிராமணரல்லாத ஹிந்துக்கள், முகம்மதியர், முதலியோராவர். இவர் குழந்தைகள், வேலையாளிகள் குழந்தைகளைவிட, மிக ஈனஸ்திதியி லிருக்கின்றனர்; ஏனெனில், கூலி வேலை செய்யும் ஏழைத் தாய்மார், பெரும்பாலும் திறந்த வெளிகளில் காலத்தைக் கழிப்பதால், ஆரோக்கியமும் பலமும் உள்ளவர்களாயும், தங்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் வேண்டிய அளவு உள்ளவர்களாயு மிருக்கிறார்கள்; பட்டணங்களில் வாழும் தாய்மாரோ, சுத்தமான வாயுவும் சூரிய வெளிச்சமும் இல்லாத இடங்களில் வசிப்பதால், இரக்த புஷ்டியும் பலமும் மிகக் குறைந்து, எப்பொழுதும் அரைப்பட்டினி யென்னும் நிலைமையி லிருக்கிறார்கள். பட்டண வாசிகளின் மாத வருமானம், ரூபா 15 முதல் ரூபா 50 வரையும் தானிருக்கும்; ஆகையால், குடிக்கூலி குறைந்து, வீடுகள் நெருங்கியடர்ந்த ஸ்தலங்களிலும், சந்துகள் முடுக்குகளிலுமே, இவர்கள் வசிக்கின்றனர். இந்த வீடுகள் பலவற்றுக்குப் பிரத்தியேகமான கொல்லை யிராது; கக்கூஸ் பொதுவாயிருக்கும்; ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு சிறு அறையும் வராந்தாவுமே யிருக்கும்; பல வீடுகளுக்குப் பொதுவான முற்றத்தி லுள்ள தண்ணீர்க்குழாயில் தான், எல்லோரும் குளிப்பதும் துணி துவைப்பதும், சமையல் பாத்திரங்களைக் கழுவுவதும். இந்த வீடுகள் சிலவற்றில் சாக்கடை செவ்வையாய்க் கட்டப்படாமல், அடிக்கடி அடைபட்டுத் தண்ணீர் தேங்கி, வீடு முழுதும் துர்நாற்றம் வீசும்.

இந்த ஏழைகளுக்குள் பிராமணர் மட்டும் தினந்தோறும் குளிப்பர்; மற்றவர், வாரத்தில் இரண்டு மூன்று நாள்களில், அல்லது வாரக் கடைசியில் தான், குளிப்பது வழக்கம். இப்படிப்பட்ட சுகக் குறைவான நிலைமையில் குடியிருப்பதால், இந்தத் தாய்மார் பலருக்குள் தாய்ப்பால் சீக்கிரம் குன்றி வற்றிப்போகும்; அப்பால், பசுவின் பால் வாங்கப் பணமில்லாமல், அரிசிக் கூழ் கஞ்சிகளைக் குழந்தைகளுக்குப் போட்டுவார்கள். குழந்தைகளுக்கு

ஆகாரங் கொடுப்பது ஒழுங்கா யிராது; சுத்தமாயும் நடவாது. இப்படிப்பட்ட குழந்தைகளில் பலர், போதிய ஆகாரமும் இரத்த புஷ்டியு மின்றி வெளுத்துக் கை கால் சூம்பிக் கணை நோயால் வருந்துகின்றன. பிராமணக் குழந்தைகளில் பல, சோகையினால் மரிக்கின்றன.

சென்னை நகரிலுள்ள சந்துகளிலும் சிறுதெருக்களிலும் காண லாகும் கொசு முட்டைகள் நிரம்பித் தீநாற்றம் வீசும் சாக்கடை களையும், கோடிக்கணக்கான ஈக்கள் மொய்க்கும் குப்பைக் குவியல் களையும், குழந்தைகளும் பெரியோர்களுமே வழி யோரங்களில் அசங்கியம் செய்வதையும் கவனித்துள்ளவர்கள், இவைகளின் மத் தியிலே தவழ்ந்தும் ஓடி யாடியும் வாழும் ஏழைக் குழந்தைகளின் சரீர ஆரோக்கிய நிலைமை எப்படி யிருக்குமென்று, எளிதில் ஊகித் துக் கொள்வர்.

இவை போதாமல், குழந்தைகளைக் கையூண் கொடுத்து வளர்க் கும் வழிகளையும் சுகாதார முறைகளையும் சிறிதும் அறியாத மூடத் தாய்மார், தங்கள் மனம் போனபடி குழந்தைகளுக்குக் கண்ட கண்ட ஆகாரங்களைக் கண்டபொழுது கண்டபடி கொடுத்து வளர்ப்பதால் விளையலாகும் அபாயங்களையும், நீங்களே சேர்த்து எண்ணிப் பாருங்கள். இப்படிப்பட்ட இடங்களில், கொடிய, ஓயாத, மலே ஜுரத்தாலும், வயிற்றளைச்சல் வயிற்றுப் போக்குக்களாலும், வேறு பல தொற்று வியாதிகளாலும், பல குழந்தைகள் மடிவது ஆச்சரிய மன்று.

அப்பால் நமது பட்டணங்களிலுள்ள முகம்மதிய ஏழைகளை எடுத்துக் கொள்வோம்: சுகாதார முறைகளை அறிந்து கவனி யாமலும், பரம்பரையாய் வரும் சுகக்கேடான வழக்கங்களால் உண்டாகும் தீங்குகளாலும், இவரினும் அதிகம் வருந்துவோர், மற் றெவருமே இல்லை காற்றோட்ட மில்லாத, சரியான சாக்கடைகள் இல்லாத, வீடுகளிலே இவர்கள் குடியிருக்கின்றனர்: வீட்டு மண் தரையைக், கழுவ முடியாது, பாயால் மூடுவது மில்லை, மண் சுவர் களை வெள்ளை யடிப்பது துர்லபம். ஹிந்துக்கள் மூக்கைச் சிந்தி மூக்குச்சளியைக் கண்டபடி எறிவதுபோல, முகம்மதியர்கள் வீட்டுக்குள்ளும் சுவர்களிலும் கண்டபடி காறியுமிழும் கெட்ட வழக்கத்தினால், இவர்கள் ஸ்திரீகள் குழந்தைகளுக்குள் க்ஷயரோ கம் எளிதில் பரவுகிறது. முஸ்லீம் ஸ்திரீகள் வீட்டைவிட்டு வெளி யேறுவது அரிது; அவர்களும் அவர் குழந்தைகளும், 24 மணி நேரமும், வீட்டுக்குள்ளுள்ள தூசி படிந்த கெட்ட வாயுவையே சுவாசிக்கின்றனர். இந்த ஸ்திரீகள், குழந்தைகளின் கதி, நமது பறைய ஸ்திரீகளின் கதியைவிட நூறு மடங்கு பரிதபிக்கத் தக்க தாயிருக்கின்றது; ஏனெனில், பஞ்சம ஸ்திரீகளும் குழந்தைகளும்

தங்கள் குடிசையின் நாற்புறச் சுவர்களுக்குள் அடைத்துக் கிடப்பதில்லை; பாரபக்ஷமின்றி எல்லார்க்கும் பொதுவாய் இலவசமாய்க் கடவுள் அருளியுள்ள வெளிச்சமும் காற்றும் அவர்களுக்கு மறுக்கப்படுவதுமில்லை. முகம்மதிய ஸ்திரீகளின் சரீர சுத்தத்தைக் கவனிக்குமிடத்து, அவர்கள் சமயாசாரப்படி, வாரத்தில் ஒரு நாள் தான் குளிப்பது; வேர்வை அழுக்குக்களின் துர்க்கந்தத்தை, அதி கவனமாய் வாசனை திரவியங்களால் மறைத்து விடுகின்றனர். இந்தச் சமூகத்தார் இன்னும் முன்னேற்ற மடையாமலிருப்பதால், இவர்களுக்குள் செல்வம் படைத்தவர்கள் கூட, நல்ல வீடுகளிலே வாழ்வதன்றி, மற்ற அம்சங்களில், மேற் கூறிய ஏழைகளின் பழக்க வழக்கங்களையே அநுசரித்து வருகின்றனர். இவர்கள் ஸ்திரீகளின் அறியாமை எவ்வளவு ஆழ்ந்து வேரூன்றியதெனின், ஜலதோஷம் பிடித்துவிடும் என்று பயந்து, அவர்கள் தங்கள் படுக்கையறைச் சன்னல்களையெல்லாம், பத்திரமாய் அடைத்து விடுகின்றனர்; அதே பயத்தினால்தான், தினந்தோறும் குளிப்பதுமில்லை. இப்படிப்பட்ட வீடுகளிலுமே, தாய்ப் பால் குடித்து வளரும் குழந்தைகள், கை வலயாய் வளர்க்கப்படும் குழந்தைகளைப் போல் கெட்டிருப்பதில்லை; ஏழை முகம்மதிய வீடுகளில், ஈக்களும் தூசியும் படியும்படி, திறந்த மண் பாண்டங்களில் குழந்தைகளுக்குக் கொடுக்கும் பாலை வைத்திருப்பதை, நான் பார்த்திருக்கிறேன். பால் ஆறிவிட்டதா என்று, தங்கள் விரலை முக்கிப் பார்க்கின்றனர்; குழந்தைகளுக்குப் பாலைக் கொடுக்கும் பொழுது, ஒரு விரலைப் பால் பாத்திரத்தில் வைத்திருக்கின்றனர். குழந்தைகளுக்கு ஆகாரங் கொடுக்குமுன், தங்கள் கைகளையும் பாத்திரத்தையும் சுத்தமாய்க் கழுவுவதைப்பற்றி, நினைப்பதுமில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளில், குழந்தைகள் வயிற்றுக்கழிச்சல் முதலிய நோய்களுற்று மாளுதல் ஆச்சரியமில்லை. தரித்திரத்தைவிட அறியாமையே இந்த வீடுகளில் பெரும்பாடு படுத்துகின்றது. சிறு சிசுக்களுக்குக் கூட வாழைப்பழம், மிட்டாய், ஹல்வா முதலிய உணவுகள் கொடுக்கப்படுகின்றன. மனிதனது அறியாமையும் மூடபக்தியுமே காரணமான இப்படிப்பட்ட அபாயங்களையும் சோதனைகளையும், மனிதக் குழந்தைகள் தப்பிப் பிழைத்திருப்பதை எண்ணிப் பார்த்தால், அத்தியாச்சரிய முண்டாகும். இந்த முகம்மதியத் தாய்மார்கள், நியூமோனியா, வயிற்றுப் போக்கு, ஜன்னி வலிப்பு, இன்னும் பல கொடிய தொற்று வியாதிகள் முதலியவற்றால் சிசுப் பருவத்திலும் சிறிது வளர்ந்த பின்னருங்கூட, மரணமடைந்த தங்கள் குழந்தைகளைப்பற்றி, எத்தனையோ விசனகரமான கதைகள் சொல்வார்கள்.

(தொடரும்.)

எங்கள்
அயர்லாந்து வாழ்க்கை ஞாபகங்கள்

ஸ்ரீ. T. ஆதிநாராயண செட்டியார், பாரிஸ்டர், M.L.C., சேலம்
(அவர் மனைவியாரின் உதவிபெற்று எழுதியது)

முன்னுரை.

அயர்லாந்திலே, 1914 முதல் 1918 வரையில், குடும்பமாக நாங்கள் வாழ்ந்த நாலு வருஷங்களையும், எங்கள் வாழ்நாளில் சந்தோஷகரமான நாட்களாக, நாங்கள் கருதுகிறோம். அந்தத் தேசத்திலே நாங்கள் அடிவைத்த நிமிஷம் முதல், ஏதோ ஒரு சாதாரண பூமியில் அடிவைத்ததாக நாங்கள் எண்ணவில்லை. அந்த நாட்டு ஜனங்கள், உடுப்பு வெளித் தோற்றத்தில் ஐரோப்பாவிலுள்ள மற்ற ஜனங்களைப் போலவே இருந்தபோதிலும், இதர விஷயங்களில் இவர்களைப் போலவில்லை. அவர்கள் நாகரிகமும் மனப் பான்மையும் ஆத்மலாப லக்ஷியத்தைக் கொண்டனவாயும், கீழ் நாட்டாராகும் நம்முடைய நாகரிக மனோபாவங்களை ஒத்தனவாயும், எங்களுக்குத் தோன்றின.

"மரகத தீபம்" என்று விளங்கும் அயர்லாந்தை நாங்கள் முதல்முதல் அடைந்த காலமும், சாதாரண காலமல்ல. அப்போது தான் மகா யுத்தம் ஆரம்பமாயிருந்தது. அந்தத் தேசத்துத் தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜான் ரெட்மண்ட் முதலிய பிரமுகர்கள், ஆங்கிலேயப் பட்டாளங்களுக்குத் தங்கள் நாட்டில் ஆட் சேர்ப்பதில், அதிகக் கவலையுடனிருந்தார்கள். அதே காலத்தில், நம்ம காந்தி மஹாத்மாஜி, லண்டன் நகரத்திலிருந்துகொண்டு, காயமடைந்த போர்வீரர்களைச் சுவஸ்தப்படுத்த, நெட்லி ஆசுபத்திரியில் இந்தியர்களைச் சேர்த்து வந்தார் என்பதையும், இங்கே குறிக்கவேண்டும். பட்டாளத்துக்கு ஆட் சேர்க்க அநுகூலமான சித்திரப் படங்கள் சுவர்களெங்கும் ஒட்டப்பட்டிருந்தன. தேச பக்தியுள்ள ஒவ்வொரு சீமாட்டியும், அவ்வமயம், படைவீரர்களுக்காகக் கையுறைகள் (gloves) தைத்துக்கொண்டிருப்பது, சாதாரண காட்சியாயிருந்தது.

காரியங்கள் ஒருபுறம் இவ்வாறிருக்க, இவைகளுக்குச் சமீபத்திலேயே, அயர்லாந்தில் "சின்பேன்" என்று சொல்லப்பட்ட

மற்றொரு கூட்டத்தார், வேறு வழிகளில் சுறுசுறுப்பாயிருந்தனர். அவர்கள் முக்கிய ஆலோசனை ஒன்றேதான் :—'இங்கிலாந்து கஷ்டப்படும் இந்தத் தருவாயிலே, நெடுநாளாக நாம் கோரியிருந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும்' என்பதே. சின் பேனர்கள், 'ட்ரில்' முதலிய யுத்தப் பயிற்சி முறைகளைத் தீவிரமாகக் கைப்பிடித்தார்கள். சின்பேன் கட்சியாரின் கூட்டங்களுக்கு லக்ஷக்கணக்கான ஜனங்கள் வந்து குவிந்தார்கள். அவர்கள் கட்சியின் சார்பாகப் பிரசுரிக்கப்பட்டுவந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது; பத்திரிகைகளில் வியாசங்களும் காரமாகவே எழுதப்பட்டுவந்தன.

டப்ளின் நகரத்தின் முக்கிய உத்தியானவனமான 1760 ஏகரா விஸ்தீரணமுள்ள "பீனிக்ஸ் பார்க்கில்" பொதுக் கூட்டங்கள் அடிக்கடி நடைபெற ஆரம்பித்தன. தவிர, தேசிய நாடக சாலையாகிய "அபீ தியேட்டரில்" இரவு தோறும் தேசபக்தியை ஊட்டக்கூடிய பல நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன. அக்காலத்தில் அயர்லாந்தில் நடந்துவந்த சில கிளர்ச்சிகளை மாத்திரம் தான் இங்கே எடுத்துரைக்க அவகாசமிருந்த தென்றாலும், காரியங்களின் போக்கு எவ்வாறு இருந்ததென்பதை ஊகிக்கக் கூடுமாறு சொல்லியாய்விட்டது.

நாம் மேலே விவரித்தவை சின்பேன் கட்சியாரின் அலுவல்களை மாத்திரம் காட்டுவதாகும். அவர்களுடன் சருவதா எதிர்ப்போர் செய்துவந்த "ஆரஞ்சுமென்" என்னும் கட்சியாரும் சும்மா விருந்தவர்களல்லர். அவர்கள் போர்க்குரல் அக்காலத்தில் என்ன வென்றால்—"நாங்கள் அயர்லாந்தின் தெற்குப் பாகத்தி லுள்ளவர்களுடன் (சின்பேனர்களுடன்) சேர்ந்திருக்க முடியாது. நாங்கள் அந்த விஷயமாகச் சண்டை போடத்தான் போடுவோம்"—என்பதே. ஆனால், இவர்கள் வாய்வார்த்தையில் மாத்திரம் நிற்காமல், தீர புருஷனாகிய "ஸர் எட்வர்டு கர்ஸன்" என்பவரைத் தலைவராகக் கொண்டு, யுத்தத்திற்கு வேண்டிய துப்பாக்கிகளை, இரகசியமாக இறக்குமதியும் செய்தார்கள்.

ஆகையால், கட்சி யாதாயிருந்தபோதிலும், அயர்லாந்தில் அவ்வமயம் முதன்மை வஹித்திருந்தவர்கள் சாதாரண மனிதர்களல்ல என்பது நிச்சயம். தேசிய கட்சித் தலைவர் ஜான் ரெட்மண்டைப் பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டோம். பாவம்! இம்மஹான் நினைத்திருந்தபடி, அயர்லாந்து அவர் காலத்திலேயே சுய ஆட்சி (Home Rule) யை யடைந்த பாக்கியத்தைப் பார்த்து ஆனந்திக்காமலே அவர் இறந்துவிட்டார். அவர் அந்திய காலத்தில், நிமிஷத்திற்கு நிமிஷம் தொகையிலும் வீரத்திலும் வலுத்துவந்த சின்

பேனர்கள் அவரைப் பரிகசித்து, "இங்கிலாந்தின் சைநியத்திற்கு ஆட் சேர்க்கும் ஸர்தார்" என்னும் பெயரிட்டழைத்தார்கள்.

சின்பேன் கட்சியில், அயர்லாந்து தேசத்தின் பிந்திய சரித்திரத்தில் பெயர்பெற்ற அநேகர்கள் இருந்தார்கள். அவர்களெல்லோரையும் இங்கே குறிப்பிட இடமில்லாவிட்டாலும், சிலரைப் பற்றியாவது குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. முதல் முதல் ஞாபகத்துக்கு வருபவர் பாரிஸ்டர் பியர்ஸ். இவருடைய அபார தேச பக்தியையும், அன்புபாராட்டக் கூடிய பல குணநிசயங்களையும் குறித்து எழுத அவகாச மில்லை. இது சமயமு மல்ல. பின்னிட்டு விஸ்தாரமாக எழுதவேண்டிய சமயமும் ஏற்படும். இவருக்கடுத்தபடி, "கனோலி" என்பவரைச் சொல்லலாம். இவர் இவர் தொழிலாளர்களின் தலைவர். படிப்பில் தேர்ந்தவரல்லர் என்றாலும், இவர் இருதயம் ஒரு குழந்தையின் இருதயத்திற்கு ஒப்பிடத்தக்கது. அயர்லாந்தில் உதித்த சிரேஷ்டர்களில் இவர் ஒருவர் என்பதில் ஐயமில்லை. டிவலீராவைப்பற்றி நான் எழுதவும் வேண்டுமோ? அவரை அறியாதவர்கள் இவ்வுலகில் யாராவது உண்டோ? பிரிட்டிஷ் சிறைச்சாலைகளிலிருந்து அவர் எத்தனை தடவை தப்பித்து வந்தாரென்பதை எழுதினாலே, ஒரு பெரிய சரித்திரமாகிவிடும். "ஐரிஷ் ப்ரீடம்" (Irish Freedom) என்னும் பத்திரிகையை முதல் முதல் ஏற்படுத்தி, அதில் அதிகம்பீரமாகவும் ஆண்மைத் தனமாகவும் விஷயங்களை எழுதிவந்து, பிறகு எத்தனையோ பத்திரிகைகளை ஏற்படுத்தி, அவைகளை இங்கிலீஷ் இராஜாங்கத்தார் நிறுத்த நிறுத்த மறுநாளே புதுப்பெயர்களைக்கொண்டு வேறு பத்திரிகைகளை ஏற்படுத்தி வந்தவர், இவரே யாவர்.

இன்னும் சிலரை மாத்திரமாவது குறிப்பிட வேண்டியதாயிருக்கிறது—T. J. க்ளார்க், தாமஸ் மாக்டோனு, ஜோஸப் ப்ளன்கெட் என்பவரைப்பற்றிச் சில வார்த்தைகள் பிரத்யேகமாகச் சொல்வது அவசியமாக இருக்கிறது. இவரை ராஜத்ரோகத்திற்காக இங்கிலீஷ்காரர்கள் சுடுவதற்கு மூன்று மணி நேரத்திற்கு முந்தி, இவர் மணம்புரிய எண்ணியிருந்த காதலியை மணம் புரிந்ததும், அந்தப் பதிவிரதை, அவர் இறந்தபின் விதவையாயிருந்து வருவதையும், சற்று ஆலோசித்துப் பார்த்தால், இதற்கு உபமானம் மேல் நாட்டுச் சரித்திரங்களி லல்ல; ராஜஸ்தான தேசத்துப் பூர்வகாலத்திலிருந்த உத்தமிகளின் சரித்திரங்களில் தான் தேடவேண்டுமென்பது தெளிவாகும். இவர்கள் மாத்திரமல்ல; கவுண்டஸ் மார்க்குவிஸ் சிமாட்டியினுடைய பிரதாபமும் சாதாரணமானதல்ல. ஆயிரமாக வர்ணிப்பதில் பிரயோசனம் என்ன? சுருக்கமாகச் சொல்லுமிடத்து, அயர்லாந்து தேசத்திலிருந்து சிறுவர்கள் சிறுமிகள் மனதைக் கவர்ந்து தேசத்திற்காக உயிரை

யும் எல்லா வற்றையும் தியாகம்செய்யும்படி சித்தமாக்கத் தகுந்த அனேக தலைவர்கள், அக்காலத்தில் அயர்லாந்தில், இருந்தார்கள்.

தேசபக்தியிலும் வீரத்திலும் சிறந்த அயர்லாந்தில், இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், என்னைப்போல் இந்திய மாணவர்களுடைய சிறு கூட்டம் ஒன்று, 1914ம்வருத்தில் வந்து சேர்ந்தது. அங்கிருந்த சந்தர்ப்பங்களைக் கவனித்துப் பார்க்கையில், இந்த இந்திய மாணாக்கர்களின் கவனம் ராஜரீக விஷயங்களில் செலுத்தப்பட்டது, ஒரு விந்தையாகுமா? 800 வருஷங்களாக ஆங்கிலேயருடைய ஆட்சியை ஒழித்துச் சுய ஆட்சியை ஏற்படுத்தப் பிரயத்தனப்பட்டு, சீக்கிரம் கைகூடலாகுமென்று எல்லோரும் எதிர்பார்த்திருந்த இந்தச் சமயத்திலே, உணர்ச்சியுள்ள எந்த மனிதன், எந்தஸ்திரீதான், மனம் கோணமல், "உலகம் எப்படிப் போனாலும் சரி, நமக்கென்ன இதில்?" என்று இருக்கமுடியும்? அதிலும் இந்தப் பிரயத்தனம் கூடிய சீக்கிரம் ஏதோ ஒரு முடிவுக்கு வரும் தருணமாயிருந்ததன்றோ?

இங்கிலாந்திலிருந்து சற்றேறக்குறை 60-மைல் தூரத்தில் தான் அயர்லாந்து இருந்தும், இந்த இரண்டு தேசங்களின் ஜனங்கள் இவ்வளவு வேறுபட்டிருப்பதைக் கண்டு, இந்த தேசத்தினரின் பூர்வீக சரித்திரத்தையும், அவர்கள் நாகரிகம் எப்படிப் பட்டதென்பதையும் ஆராய்ந்து அறியவேண்டுமென்ற அவா, எனக்கு அதிகம் ஏற்பட்டது. அதற்கு அனுகூலமாக, எனக்கு வழிகாட்டிகளாக அனேக மேதாவிகளும், தேசபக்தர்களும் கிடைத்தபடியால், என் கோரிக்கை நன்கு நிறைவேறிற்றென்றே எண்ண வேண்டும்.

இவ்விஷயத்தில் எனக்குப் பேருதவி செய்த சிலரையாவது நான் இச்சமயம் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. இந்தியாவிற்கு ஸதா நன்மை கோரியவரும், பார்லிமெண்டு சபைகளின் சரித்திரத்திலும் அவைகளின் நடவடிக்கை முறைகளின் ஞானத்திலும் நிகரற்ற நிபுணருமான J. G. ஸ்விப்ட் மாக்னீல் என்பவரும், தேசிய கலாசாலையில் பெரும்பதவிகளை வகித்த க்ளீரி கனவானும், ரெவெரெண்டு பாதர் பின்லேயும், இன்னும் என்னுடன் கலாசாலையில் சகாக்களாயிருந்த அயர்லாந்து தேசத்தினர்களான சில மாணாக்கர்களும், எனக்கு அளவிலா ஒத்தாசையைச் செய்தார்கள். தவிர, அயர்லாந்து தேசத்தை முற்றிலும் பல தபாக்களில் சுற்றிப் பார்த்து, அந்த ஜனங்களுடைய யாத்திரை ஸ்தானங்களுக்கு பக்தியுடன் சென்று, அவர்கள் சந்தோஷத்தில் நாங்கள் சந்தோஷமடைந்தும், அவர்கள் விசனத்தில் நாங்கள் விசனமடைந்தும், அதிக சகோதர பாவத்துடன் நாங்கள் அந்த தேசத்தினருடன் நான்கு வருஷங்கள் குடித்தனம் செய்து வந்தோம்.

இவ்விதமாக எங்களுக்குக் கிடைத்த அனுபவங்களை, 'பஞ்சாமிருதம்'! பத்திராதிபர் கருணைபால்? (ப-ம் ப-ர்), அடுத்த ஸஞ்சிகைகளில் வெளியிட உத்தேசிக்கிறோம்.

(தொடரும்)

ஏணி யேற்ற நிலையம்

ஒரு குட்டிக் கதை

ஸ்ரீ. அ. மாதவையர், சென்னை

த்துழையாமை, கட்கடை மறியல், சத்தியாக்கிரகம், காராக்கிரகம், கத்தர் உடுத்தல், கடற்கரைப் பிரசங்கம், இந்த நாளிலே இவற்றால் முதன்மை பெற்றவர் எத்தனையோ பேர். மோக்ஷத்துக்குப் பல மார்க்கங்கள் இருப்பதுபோல, கீர்த்திக்கும் பல வழிகளுண்டு; கீர்த்தி வீட்டைச் சேர்ப்பிக்கும் மற்ற உபாயங்களை ஞான மார்க்கம், கரும மார்க்கம், யோக மார்க்கம் என்றால், இவற்றை பக்தி மார்க்கம் என்னலாம்.

இந்த அறுதொழில்களிலும் கை தேர்ந்து முன்னுக்கு வந்தவர் இராமலிங்கம். ஜெயில் வாசல்களிலும் ரெயில் வண்டிகளிலும் அவர் சூடப்பெற்ற கத்தர் மாலைகளுக்குக் கணக்கில்லை; ஆனால், 'கேவலம் கீர்த்தியை நாடி அவர் இவ்வழியில் திரும்பினர்' என்பது, படாப்பழியாம். ஆற்றோரத்திலே கிடக்கும் கட்டை, வெள்ளத்தால் இழுப்புண்டு, சமுத்திரத்தை அடைந்து, மலையிலிருந்து வந்த அகில சந்தனம் தங்களோடு சேர்ந்து திகழ்வதுபோல, ஆழ்ந்த ஆலோசனை, ஊன்றிய உறுதியான கோட்பாடு, நீண்ட பரந்த நோக்கங்கள் முதலிய தொந்தரைகள் இல்லாமலே, தான் அறியாமலே, தேசத்தொண்டர் திருக்கூட்டத்தின் நடுவே இலங்கலானார் இராமலிங்கம். பூர்வாசிரமத்தில் அவர் வைத்திருந்த காப்பி

கிளப்பு, சிலரே அறிந்த பழங்கதை யாகிவிட்டது. துவராடை பூணத தேசியத் துறவியாகவே தன்னை மதித்து, அவர் இப்பொழுது நடந்து வந்தார். தன் சொந்த ஊர் போவதும், குடும்பத்தோடு வாழ்வதும், அரிதாகிவிட்டன; ஜீவனத்துக்குப் போதுமான சொத்தும் இருந்து, அவர் மகனும் பெரியவனுகி விட்டபடியால், அவர்களும் இவரைத் தொந்தரை செய்ய வில்லை; முதலில் கொஞ்சம் சொல்லிப்பார்த்து, அப்பால் 'விதிவசம்', 'சித்தப்பிரமை' என்று, விட்டுவிட்டனர்.

ஜாமீன் கொடுக்க மறுத்து, நாலாவது முறை ஜெயிலிலிருந்து திரும்பி, வெற்றி மாலைகள் அணிந்து, சொற்பொழிவுகள் சொரிந்து, ஒருவாறு ஆடிப்பாடி அமர்ந்த பிறகு, கத்தரையும் தீண்டாமையையும் தவிர, மற்றத் தேசியப் பிரவர்த்திகளெல்லாம் தீண்டுவாரற்றுக் கிடப்பதை, இராமலிங்கம் உணர்ந்தார். என் செய்வதென்று தெரியாமல், சில நாள் பயனின்றிக் கழிந்தபின்பு, வைக்கோற் புரியினும் சன்னமான நூலைத் தன்னுல் நூற்க முடியாது என்பதை அநுபவத்தில் அறிந்தவ ராதலின், சாதி பேதங்களை வேரோடு களைந்து, தமிழர்கள் எல்லோரையுமேனும் ஒன்று படுத்தும் கடமையைக் கைக்கொள்ள நினைத்தார். தேச சேவையிலே இவ்வளவு ஊறி உறைத்தவர், தன் சாப்பாடு விஷயத்தில் திருஷ்டிதோஷம், சாதி வித்தியாசம் பாராட்டுவ தில்லை என்று, கூறுதல் அனுவசியமே. எவர் சமைத்தாலும், எவரோடிருந்தும், தாராளமாய் உண்பார்; 'சமைப்பவர் சுத்தியா யிருக்க வேண்டும்' என்று சிலர் கூறும் நிபந்தனையைக்கூட, அவர் வற்புறுத்துவ தில்லை; ஆளும் நல்ல போகி; இடம் எதாயினும், சகாக்கள் யாராயினும், விருந்துச் சாப்பாடு என்றால், ஒரு கை பார்க்க எப்பொழுதும் தயார். இப்படிப்பட்டவர் நான்கு முறை தானுகச் சிறைப் புகுந்ததே, அவர் தீவிர தேச பக்தியை விளக்கும்.

தான் செய்தற்குரிய தேசத்தொண்டு இன்ன தென்று துணிந்த பிறகு, தன்னிடமிருந்த சிறு பொருளையும் பிறர் உதவியையும் கொண்டு, இராமலிங்கம், "ஏணியேற்ற நிலய"த்தை ஸ்தாபித்தார். அதன் திறப்புவிழாக் கொண்டாட்டத் தன்று, ஜனநாயகர்கள் பலர் விஜயஞ்செய்து, சிற்றுண்டி அருந்தி, பிரசங்க மாரி பொழிந்தனர்; இராமலிங்கம், சாதி யேணியிலே கீழ்ப்படிகளில் இருப்பவர்களை மேலேற்றிவிடும் தன்மையினுல், அந்த நிலயத்துக்குத் தான் சூட்டிய விசித்திர நாமத்தைப்பற்றி, ஓர் அரிய சொற்பொழிவு சொரிந்தார்.

இராமலிங்கம் அந்த நிலயத்தை நடத்திவந்த விதமும், விந்தையானது: நடுநிலை யுக்தியை அநுசரித்து, 'மேல்' சாதியாரைச் சற்றுக் கீழே இறக்கி, 'கீழ்'சாதியாரை மேலே உயர்த்திவிட்டால், எல்

லோரும் ஒரு பொது மேடையில் சாதிபேத மின்றி வாழலாம் என்று எண்ணினர். முதலில், மாமிசம் உண்ணும் விஷயம், ஒரு பெருந்தடையா யிருந்தது. இப்பொழுது ஊன் உண்ணும் சாதியர்கள் அதை நீக்கிவிட்டால், இந்தியாவுக்குள்ள அரைகுறையான சரீர பலமும் அறவே ஒழிந்துபோம் என்று, சிலர் அஞ்சினர்; ஊன் உண்பது கடவுள் ஆக்ஞைப்படி ஒழுதவதே என்று, சிலர் வாதாடினர்; முடிவில், தன் ஆசிரமம் சம்மந்தப்பட்ட வரையில் இராமலிங்கம் புலாலை மறுத்துவிட்டார். அவர், முதலில் ஒரு பிராமணச் சமையற்காரனைத் திட்டஞ்செய்தார்; அவன் சமைத்துப் பரிமாறியதை எல்லோரும் சாப்பிட்டுவந்தனர். அப்பால், அவன் சமைப்பது நடுநிலை நியாயத்துக்குப் பொருந்தாது என்றெண்ணி, 'ஒரு சைவ வேளாளத் தவசிப்பிள்ளை'யைத் திட்டம் செய்தார். அவன் சமையல் சிலக்குப் பிடிபாததும் தவிர, தான் சமைத்ததையே அவன் அங்கே சாப்பிடுவதில்லை. தீண்டாச் சாதியர், கீழ்ச்சாதியர், உண்ட மிச்சத்தை அவன் உண்ண இசையாமல், வேலை முடிந்த பின், தான் சாப்பிடத் தன் வீட்டுக்குப் போய் விடுவான்.

தவசிப்பிள்ளை சங்கரலிங்கம் நீங்க, ஏணியேற்ற நிலையத்திலே மொத்தம் பதினைந்துபேர் இருந்தனர். இவர்கள் எல்லோருக்கும் சாப்பாடு இலவசம்; சாதாரணப் படிப்பும், தோத்திரப் பாக்களும், பாரதியார் பாடல்களும், சில கைத்தொழில்களும், கற்பிக்கப் பட்டன.

இந்த 15 பேரும் 13 சாதிப் பிரிவுகளைச் சேர்ந்தவர்.

(1)	பிராமணர் — (ஸ்மார்த்தர் — வைஷ்ணவர்) ...	2
(2)	க்ஷத்திரியர் — (வன்னியர், நாடார்) ...	2
(3)	முதலியார் — (தொண்டமண்டலத்தார் — கைக்கோளர்) ...	2
(4)	பிள்ளைமார் — (சைவர் — அசைவர்) ...	2
(5)	மறவர், அகம்படியர், கள்ளர் ...	3
(6)	தீண்டாச் சாதியார ...	4
	ஆக மொத்தம்	15

(1)	சாதி பேதங்கள் ஒழிந்தால்தான் நாடு முன்னேற்றம் அடையும் என நம்பி வந்தவர் ...	2
(2	இலவசச் சோற்றுக்காக வந்தவரும், தமக்கு மேற்சாதியினரோடு சேர்ந்து வாழும்பொருட்டு வந்தவரும் ...	10
(3)	தம்மைப் பிறர், தேச பக்தர்களாகவும் தைரியசாலிகளாகவும் மதித்துப் புகழவேண்டு மென்று கருதி வந்தவர் ...	2
(4)	நிலைய ஸ்தாபகர் இராமலிங்கம் ...	1
	ஆக மொத்தம்	15

"ஏணியேற்ற நிலையம்" தொடங்கிய காலத்தில், இவர்கள் 'சமபந்தி' போஜனம் செய்த முறையைப் பார்த்தால், நவக்கிரக தேவதைகள் பதினோவராய் அவதரித்துவந்து வீற்றிருக்கின்றனரோ என்று தோன்றும். முதல் மாதத்துக்குப் பின், ஆசிரமத்தின் பொருட்டு யாசகமெடுக்க, இராமலிங்கம், தினந்தோறும் வீடு விடாய்ப் "பெரிய மனுஷர்" தயவை நாடிச் செல்லவேண்டியதாயிற்று; அந்தக் காலங்களிலே, ஆசிரமத்தி லிருந்த க்ஷத்திரியர்களுக்குள், "நீ பள்ளி" "நீ சாணான்" என்று கிளம்பிய கூக்குரலும்; தொண்டமண்டல முதலியாரும் கைக்களவ முதலியாரும் செய்த சண்டைகளும்; "திண்டாதவர்"களுக்குளேயே, 'நீ மேல்' 'நான் மேல்' "நான் சாம்பானில்லையா" என்று நிகழ்ந்த சச்சரவுகளும், வீதி வழியே செல்வோரின் காதுகளைத் தொளைக்கும். சில வேளைகளில், பிராமணர்கள் மத்தியஸ்தம் செய்ய முயலுவர். அப்பொழுது, "உனக்கென்னடா, பார்ப்பான், நாங்கள் எல்லோருமே ஒன்றுதான் உனக்கு; பார்ப்பான் கெட்டால் பறையனிலும் கேடாவான்; தலைக்குமேலே போகும் வெள்ளம், சாணானும், முழுமாலுனும், உனக்கு ஒன்றுதான்; எங்கள் ஏற்றத்தாழ்வுகளும் பூர்வ சரித்திரங்களும் உனக்கென்ன தெரியும்?" என்று கூறி, எல்லோருமே அவர்மேல் பாய, ஆட்டுக்கிடாய்ச் சண்டையில் அகப்பட்டுக்கொண்ட நரிபோல, பிராமணர் விழிப்பர்.

நிலையத்தில் நடக்கும் உட்கலகங்களும், நிலைய வாசிகளுக்குள் உள்ள 'சகோதர வாஞ்சை'யின் மெய்ம்மையும், இராமலிங்கத்துக்குத் தெரியும்; நிலையச் செலவுக்கு வேண்டிய பொருள் கிடைப்பதும், நாளுக்கு நாள் அரிதாயிற்று. அவர் ஹோட்டலில் வாதுமை ஹல்வாவும் காப்பியும் அருந்திப் பழகின பழைய நண்பர் சிலர்; 'இதென்ன, பைத்தியமா உமக்கு? ஹிந்துக்கள் என்று சொல்லிக்கொண்டு திரியும் ஒரு மதத்தார், 15 பேருக்குள்ளே இவ்வளவு சங்கடமானால், நீர் நாட்டைத் திருத்துவது எந்த யுகத்தில்? முகம்மதியரும் கிறிஸ்தவரும் வந்து சேர்ந்துவிட்டால், இன்னும் எவ்வாறாகுமோ?" என்றும்; "திண்ணைப் பள்ளியில் படித்த கணக்கு ஞாபகமிருக்கிறதா உமக்கு? 'இன்னும் ஓராண்டுக்குள் இவர்கள் எல்லோரும் உண்மையில் ஒன்று சேர்ந்து விடுவார்கள். பொறுமை தான் வேண்டும்' என்கிறீரே; 15 பேருக்கு ஒரு வருஷமானால், 33 கோடி ஜனங்களுக்கு எவ்வளவு நாளாகும்!" என்றும் கூறிக் கேலி செய்து, அவருக்கு அதைரியத்தை உண்டாக்கி வந்தனர். இக் காரணங்களினால், சில வேளைகளில் அவர் மனந்தியங்கிச் சோர்வடைந்தார்.

இராமலிங்கத்துக்கு உற்ற துணையாகி, நிலையத்துக்கு ஒரு கொள்கொம்பு போல உடனிருந்து உழைத்துவந்தவர், ஒத்துழை

யாண்மையைக் கைக்கொள்ளுமுன் பள்ளி ஆசிரியரா யிருந்த ஒரு பிராமணர். அவர் உதவியும் உபதேசங்களும் நிலயத்தை அப்போதைக்கப்போது வந்து மேலாகப் பார்த்துச் சென்ற மகான்கள் நிலையத்து "விஸிட்டர்ஸ் புக்"கில் எழுதிவைத்த புகழுரைகளுமே, இராமலிங்கத்துக்கு ஊக்க மளித்து வந்தன. அந்தப் பிராமணருங்கூட, "மகாத்மா காந்தியே வர்ணாசிரம தர்மம் நல்லது என்கிறாரே! 'சாதி' என்று ஏற்படுத்திவிட்டால், 'சாதிக்குப் புறம்பானது' 'சாதி கெட்டது' என்பது இல்லாமற்போகுமோ? இதென்ன விபரீதம்! பிராமணன் கூட இருந்து சாப்பிட விரும்பும் வேளாளன், பறையன்கூடத் தான் இருந்து சாப்பிடக் கூசுகிறானே. சணப்பன் வீட்டுக் கோழியின் பாடுபோலச் சிக்கலாயல்லவோ இருக்கிறதிது!" என்று மலைப்ப துண்டு.

ஒருநாள் அவரும் இராமலிங்கமும் இவ்வாறு நிலயத்தைப்பற்றி அந்தரங்கமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, பிராமணருக்கு ஒரு தந்தி வந்தது: அவர் மகனைப் போலீசார் கைதி செய்திருப்பதால், உடனே புறப்பட்டுவரும்படி, அவர் மனைவி அனுப்பிய தந்தி அது. ரெயிலுக்குமே கையில் பண மில்லை; பாவம்! என் செய்வார் தேசபக்தர்? கடன் வாங்கி, "என்ன விசேஷம்?" என்று விசாரித்துப் பதில் தந்தி கொடுத்தார். பதில் வருமுன், மறுநாள் தினசரிப் பத்திரிகைகளுக்கு வந்த தந்தியிலிருந்து, உண்மை துலங்கிவிட்டது: அவர் ஊரில் அக்கிரகாரத்துக்குள்ளிருந்த போஸ்டாபீசுக்கு ஆதித்திராவிடர் நேரில் வந்த நிமித்தம் நடந்த கலகம் நிலே,இவர் மகன் சம்மந்தப்பட்டுக் கைதி செய்யப்பட்ட செய்தி, தெரியவந்தது. ஒரே மகன் கைதியானதைவிட, அதன் காரணமே பிராமணர் மனத்தை அதிகம் புண்படுத்தியது. "இதென்ன தர்ம சங்கடம், ஈசா!!" என்று, விதியை நொந்து தலையில் புடைத்துக் கொண்டு, அவர், மறுநாள் புறப்பட்டு ஊர் போய்ச் சேர்ந்தார்.

மகாத்மா காந்தி ஏணியேற்ற நிலயத்துக்கு விஜயஞ் செய்த அன்று, திருவிழாக்கோலமாய் இலங்கிற்று நிலயம். இராமலிங்கத்தின் தேச சேவையைப் புகழ்ந்து மகாத்மா அவரிடம் பேசிய போது, அவர் புளகாங்கிதமாகி மனம் பூரித்தார்; இரண்டொரு முஸ்லீம்கள் கிறிஸ்தவர்களையேனும் கூடச் சேர்த்துக் கொள்ளுவதென்று, தன் மனத்துக்குள் தீர்மானித்துக் கொண்டார். ஆனால், அன்றிரவே, அவர் மனம் உடையும்படி, ஒரு சங்கதி நடந்துவிட்டது: அவரவர் சாப்பிடும் இலைகள் பாத்திரங்களை அவரவரே சுத்தஞ் செய்வது நிலயத்து வழக்கம். பழனி முதலி என்பவன் அன்று ஜுரப்பட்டிருந்ததால், அவன் கஞ்சி குடித்த பாத்திரத்தைக் கழுவும்படி தவசிப்பிள்ளை சங்கரலிங்கத்தினிடம் சொன்னான்.

"நான் என்ன கார்காத்த வேளாம் பிள்ளை என்பது தெரியாதோ? கைக்களவப் பயலுக்கு இவ்வளவு கொழுத்துப் போய் விட்டதோ? என்னைப் பார்த்து, நாக்குக் கூசாமல், உன் எச்சிற் கிண்ணியைக் கழுவச் சொல்லுகிறாயா?" என்று கர்ச்சித்தான் தவசிப்பிள்ளை.

அதைக் கேட்டுக்கொண்டுவந்த இராமலிங்கம்: "நீ கழுவ வேண்டாம் சங்கரலிங்கம்; நானே கழுவுகிறேன். உன்னை இங்கே வேலைக்கு வைத்ததே தவறு" என்று கூறிவிட்டு, தானே பாத்திரத்தைக் கழுவினார்.

"நான் இன்னும் சாதி கெட்டுப் போக வில்லை பள்ளனுக்கும் பறையனுக்கும் சாதிகெட்ட பயல்களுக்கெல்லாம் பொங்கிப் போடுகிற வேலை, பொல்லாத உத்தியோகம் இது! நமக்கிது வேண்டவே வேண்டாம். நம்ம கணக்கைத் தீர்த்துப் போடுங்கள். நாளைக் காலை நம்மால் வர முடியாது" என்று, சங்கரலிங்கம் பதில் கூறவே, அப்படியே சம்பளக்கணக்கைத்தீர்த்து, அவனை அனுப்பி விட்டார்.

மறுநாள் வேறு சமையற்காரன் அமையாததால், ஒரு பட்லர் மகனை சிவபூஷணம் என்ற பறைப்பையனையும், மற்றொரு 'கீழ் சாதி'ச் சிறுவனையும் தனக்கு உதவியாய்க் கொண்டு, தானே சமையல் செய்தார், இராமலிங்கம். ஆனால், அந்தோ! நிலைபத்தி னுள்ள 14 பேரில் 9 பேர், அந்தச் சோற்றைத் தாம் சாப்பிட மாட்டோமென்று மறுத்துவிட்டதுமன்றி, சத்தியாக்கிரகப் புலிகளானதால், பட்டினியும் தொடங்கிவிட்டனர்; ஜுரத்தால் வருந்திய பழனி முதலியுமே, கஞ்சி குடிக்கமாட்டேனென்று மறுத்து விட்டான்.

வணியேற்ற நிலையமாகச் சில மாதங்களுக்கு இலங்கிய வீடு, இப்பொழுது ஒரு கடையாகி, பழைய கோணிச் சாக்குகளும், கிரோஸீன் டின்களும், பீப்பாய் பிதிலிகளும், அதில் விற்கப்படுகின்றன. மூட பக்தி மூட்டைகள், சாதிக் கொழுப்புப் பிதிலிகள், வீண் டம்பட் டின்கள், சத்திழந்த ஆசாரக் கழிசடைகள் போன்ற பழைய பண்டங்கள் மட்டும், அங்கே விலையாவதில்லை.

பலதுறைப் பொறுக்குமணிகள்

பத்திரிகை ஆராய்ச்சி

I. மதவிஷயக் குறிப்புக்கள்.

1. ஹிந்து மதத் திருத்தம்:—" இந்தியன் ஸோஷியல் ரிபார்மர்' பத்திரிகை எழுதுகிறது :—"** ஹிந்து மகா சபைக் கூட்டத்தில், 'ஹிந்துக்கள் உருவழிந்து போகின்றனர், அதை யுடனே தடுக்க வேண்டும்' என்று, ஸ்ரீஜத் லாலா லஜபதிராயே பேசியிருப்பது, நமக்கு விசனத்தையும் வியப்பையும் தருகிறது. தீண்டாமை, பாலிய விவாகம், அறியாமை, மூடபக்தி, முதலியவற்றில் இப்பொழுது ஜனங்கள் ஆழ்ந்து முழுகிக் கிடக்கும் நிலைமை, உருக்குலையாமல், எப்பொழுதும் ஹிந்துக்கள் இப்படியேதான் இருக்க வேண்டுமென்று, ஆலோசனையுள்ள ஹிந்து, எவனுவது விரும்பக் கூடுமா? எப்பாடுபட்டேனும், என்ன நேரினும், ஹிந்து மதத்தில் குலைந்துவிடாமல் நாம் காப்பாற்றுதற்குரிய விசேஷ குணம் யாது? அதுதான், பிரபஞ்சத்திலே காணும் தோற்றங்கள் யாவும், அடிவேரில், கடைமுடிவில், ஒன்றுதான்; ஒரே பரமாத்மசக்தியின் விகற்பங்கள் தான்' என்னும் அத்வைத பீஜக் கருத்தா, வேறென்று? மற்ற மதங்கள் எல்லாம், மனிதனைச் சிருஷ்டிப் பொருள்களினின்றும் வேறுபடுத்தித் தனிப்பிக்க, ஹிந்து மதம் ஒன்றுதான், ஈசுவரன் மூலமாக, மனிதனும் பிரபஞ்சத்தி லுள்ள மற்றெல்லாவற்றோடும் ஜீவ சம்பந்த முள்ளவன் என்பதை, வற்புறுத்துகின்றது. ** ஐரோப்பிய தத்துவ ஞானிகள் பலர் இதை ஒப்பியிருக்கின்றனர். ஜீவகோடிகளின் ஐக்கிய யுணர்ச்சியைக் கடைப்பிடித்துக் கைவிடாது ஒழுகும்வரை, ஹிந்து மதமும் ஹிந்து சமூகமும், என்றும் உருக்குலைய முடியாது. ஹிந்து மதத்தின் ஆணிவேரான இந்த உண்மையை, ஹிந்துக்கள் தம் வாழ்க்கையில் எவ்வளவு அநுஷ்டித்து மெய்ப்பிக்கின்றனரோ, அவ்வளவுக்கு ஹிந்து மதம் விளக்கமுற்று நிலைநிற்கும்."

2. சென்னை ஹிந்து தேவஸ்தான பரிபாலனச் சட்டம்—இதன்படி நியமித்துள்ள பிரஸிடெண்டுக்கும் (ரூ. 1200 மாதம்), கமிஷனர்களுக்கும்(ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 700-50-800) ஏற்படுத்தியிருக்கும் சம்பளம், மிக அதிகமாய்த் தோன்றுகிறது; கமிஷனர்

கள் சிலரைப் பற்றியும், பொதுஜன அதிருப்தி யுண்டு. தமது உழைப்பினாலும், சத்திய விரதத்தினாலும், வேலைத்திறமையினாலும், இந்த அதிருப்தியை ஒருவாறு நீக்கிக்கொள்ளலாம்; வர வரத் துலங்கும்.

II. கல்வி விஷயக் குறிப்புக்கள்.

1. எஸ். எஸ். எல். ஸி - S. S. L. C. - இது சம்பந்தமான கல்வி முறையும் பரீக்ஷையும் உருமாறிவருகின்றது; முன்பின், பழைய பிரவேசப் பரீக்ஷை (மெட்ரிகுலேஷன்) மாதிரியே ஆகிவிட்டது. சர்வகலா சங்கத்தார், தாம் புகட்டும் மேற்படிப்புக்குரிய வித்தியார்த்திகளைத் தெரிந்தெடுக்க, வேறொரு பிரவேசப் பரீக்ஷையும்; துரைத்தனத்தார், தமக்கு வேண்டிய கீழ்த்தர லிகிதர்களைத் தெரிந்தெடுக்க ஒரு பரீக்ஷையும், வெவ்வேறாக நடத்துவதே லிலாக்கியமாகும். பின்னே கூறிய துரைத்தனச் சேவகப் பிரவேசப் பரீக்ஷை, படிப்பில் பிற்பட்டுள்ள வகுப்பினர்களும் தாராளமாய் ஏராளமாய்த் தேறிவிடும்படி, சுலபமான தாய் இருப்பதே பொருந்தும். சர்வகலா சங்கப் பரீக்ஷை, மாணவரது மூளைத்திறனை நன்கு பரிசோதிப்பதா யிருத்தல் வேண்டும். ஆயினும், மேற்படிப்பிலே, சிலர் இலக்கியம், சிலர் கணிதம், சிலர் பௌதிக ரசாயன சாஸ்திரங்கள், எனப் பல்வேறு கல்வித் துறைகளில் மாணவர் உயர்தரப் பயிற்சியைப் பெற விரும்புவாராதலின், அவரவர்க் கேற்றபடி, பிரவேசப் பரீக்ஷையில் பல்வேறு பாடங்களை ஏற்படுத்தி, ஒவ்வொரு மாணவனும், தாய் மொழி, இந்திய சரித்திரம், சுகாதாரம், வீட்டுக் கணக்குவைத்தற்கு இன்றியமையாத கணிதம் போன்ற சில கட்டாயப் பாடங்களிலும், தான் விசேஷமாய்ப் பயில விரும்பும் இரண்டொரு குறிப்பான பாடங்களிலுமே பரீக்ஷிக்கப்படவேண்டும். இவையாவும், ஆண் பெண் இரு பாலார்க்கும் பொதுவாயிருத்தல் வேண்டும்; அவரவருக்கு விசேஷமான வேறு பாடங்கள், கற்பிக்கப்படலாம்.

2. தமிழ்ச் சர்வகலா சாலை:—ஒன்று ஏற்படுத்த, திருச்சிராப்பள்ளியிலே மும்முரமாய் வேலை நடந்துவருகின்றது; விநாயகராய் முடியுமோ, அநுமாராய் முடியுமோ, அல்லது ஆரம்ப சூரத்தனத்தோடு அவிந்து போகுமோ, ஒன்றும் நிச்சயமாயின்னும் சொல்ல ஒண்ணாது. நாட்டுப் பிரமுகர்கள் முன்வந்து ஏராளமாய்ப் பணம் உதவினாலன்றி, துரைத்தனத்தார் உதவியினால் மாத்திரம், காரியம் கைகூடாது என்பது மட்டும் உறுதி.

III. சொற் பொழிவுகள்

(1) பத்திராசிரியரின் கடமை:— "ஹிந்து" பத்திரிகாலயத்திலே, ஸ்ரீமான் எஸ். கஸ்தூரிரங்கையங்காரின் படத்தைத் திறந்து வைத்த பொழுது, மகாத்மாகாந்தி, பொது ஜனங்களின் மனசை

யறிந்து, அவர்கள் அபிப்பிராயத்தைத் தெளிவாய்ப் பயமின்றி வெளியிடுவது தான், உத்தம பத்திரிகாசிரியரின் முக்கிய கடமை; தன் சொந்த அபிப்பிராயத்தை வற்புறுத்துவதில்லை' என்று கூறினர். கூட்டத்தின் தலைமை வகித்த மகாகனம் ஸ்ரீமான் V. S. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், அதை மறுத்து, மகாத்மாவைப் போன்ற ஓர் உத்தம ஜன நாயகருக்கும் உத்தம பத்திரிகாசிரியருக்கும் ஒரே விதமான கடமை தான்; ஜனங்கள் தப்பெண்ணம் கொண்டு, சரியான வழியைவிட்டு விலகியபோது, இருவருமே, அவர்களைக் கண்டித்து, தமது விவேகம் ஒப்பிய அபிப்பிராயத்தை அஞ்சாது வெளியிட்டு, ஜனங்களைத் திருப்பக் கடமைப்பட்டவர்களே" என்று பேசினர். பத்திராசிரியர்கள் பொது ஜனங்களின் கிராமபோன் போன்று ஒழுகினால், அவர்களால் நாட்டுக்கு அதிக நன்மை விளையாதென்பது நிச்சயம். தன் கொள்கையைக் கைவிடாமல், ஜனங்கள் தவறினால் ஒத்துப் பாடாமல், ஆனால் முரட்டுத்தனமாய் அநாவசியமாய் ஜனங்களின் அப்பிரியத்தை அடையாமல், தன் மனமறிந்த உண்மையை ஒளியாமல் எடுத்தோதி, ஜனங்களைத் தன் வழிக்கு, நயமாய், அவர்கள் அறியாமலே, திருப்பவல்லவனே, உத்தம பத்திராசிரியனாவான் என்பதில், சந்தேகமில்லை. பொது ஜனப்பிரியத்தையே விரும்பி நாடி, தன் மனம் ஒப்பாதபடி ஒழுகும் பத்திராசிரியன், தன் உயர் தொழிலையும் தன் இயற்கைக் குணத்தையும் இழிவாக்கிக் கெடுத்து, பொது ஜனங்களுக்கு நன்மையும் செய்யாது, அவர்கள் பிரியத்தையுமே முடிவில் இழப்பது திண்ணம்.

(2) ஹிந்துப் பெண்மக்களின் குறைகள்—கல்கத்தாவில் கூடிய ஹிந்து மகாசபையில், ஸ்ரீ. லாலா லஜபதிராய், ஹிந்து ஸ்திரீகள், சுயநலமின்மை, பதிபக்தி, பரிசுத்தம், கற்பு முதலிய குணங்களில் ஒப்புயர்வற்றவர் என்று பாராட்டிப் புகழ்ந்த பிறகு; அவர்களின் தற்கால நிலைமையானது, கோஷா வழக்கம்; கல்விப் பயிற்சிக் குறைவு; ஹிந்து சமூகத்தின் ஜீவ சக்தியை அரித்துக் கெடுப்பதும், ஹிந்துக்களின் பலஹீனத்துக்குக் காரணமாவதுமான பால்ய விவாகம்; மனைவியரை யிழந்த புருஷர்கள் மறு விவாகஞ் செய்யலாம், விதவைகள் மட்டும் புனர் விவாகஞ் செய்யலாகாதென்ற கட்டுப்பாடு; சுகாதார மருத்துவ சௌகரியங்கள் இல்லாமையால், பிரசவங்களில் நேரும் அகால மரணங்கள்; தேகப்பயிற்சிக்கு வேண்டிய வசதிகளின்மை முதலிய கேடுகளால் கஷ்டப்படுகின்றனர் என்றும், அவற்றை நிவர்த்திக்கும் வழிகளை நாடி உழைக்க வேண்டுமென்றும் கூறினர்.

(3) ஆங்கிலேயரின் வாழ்க்கை முறை—"மயிலை வெள்ளி"ச் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழா அன்று, வெம்ப்ளிக் கண்காட்சிக் கமிஷனராக நெடுங்காலம் இங்கிலாந்தில் தங்கியிருந்து திரும்பி வந்

துள்ள திவான் பகதூர் T. விஜயராகவாசாரியார், தமது ஆங்கில அநுபவங்களைப்பற்றிப் பேசினார். அவர் பேச்சில் முக்கியமானவை நான்கு:—(1) ஜெர்மன் யுத்தத்தின் பலனாக, இங்கிலாந்திலே ஆண்களைவிடப் பெண்கள் 40 லக்ஷம் அதிகமிருக்கின்றனர். இதனால், பெண்களில் பலர், மணம் புரிந்து, கணவனால் காப்பாற்றப்படாமல், தாமே சம்பாதித்துப் பிழைக்கின்றனர். இங்கிலாந்திலே பெண் கல்வி செழித்துப் பரவியிருக்கிறது. இந்தியாவிலே பி. ஏ பட்டம் பெற்ற புருஷர் செய்யும் பல வேலைகளை, அங்கே பெண்கள் செய்கின்றனர்; அவர்கள் தாராளமாய்ப் புருஷர்களுடன் அளவளாவிப் பழகுவது மன்றி, வேண்டிய இடங்களுக்குத் துணையின்றித் தனியே செல்கின்றனர். இந்தியாவிலிருந்து புதிதாய் இங்கிலாந்து போகும் இந்தியர், முதலில் இதைக் கண்டு திகைத்துத் தத்தளிக்கின்றனர். ஓர் இந்தியனுக்கு, டைப்ரைட்டிங் வேலை செய்யும் பெண், அவனிருக்கும் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து, கதவைச் சாத்தினால், அவன் சமுசயங்கொண்டு விழிக்கிறான். சில நாட்களுக்குப் பின்பே அந்த நாட்டு வழக்கங்கள் பிடிபடுகின்றன. இப்படிப் புருஷருடன் பழகுவதால், ஆங்கிலப் பெண்கள் மானமழிந்து கெடுகின்றனரென்று கூற இடமேயில்லை என்றனர். ஆங்கிலச் சீமாட்டிகளில் பலர், பாராளுமன்றத்திலும் சமூக சேவையிலும் உழைக்க விரும்பி, அதற்கு வேண்டியபடி வெவ்வேறு துறைகளிற் பயின்று வருகின்றனராம். (2) செல்வர் தரித்திரர், பெரியவர் சிறியவர், பிரபுக்கள் சாமானியர், என்ற ஏற்றத் தாழ்வுகள் முனைத்துக் காணாமல், ஆங்கிலேயர் வாழ்க்கையில் சகோதர சமத்துவம் வியாபித்து விளங்குகிறதாம். இந் நாட்டிலே ராஜாக்களுக்குச் சமானரான பெருஞ் செல்வமும் அதிகாரமும் படைத்த அந் நாட்டுப் பிரபுக்கள், பிரமுகர்கள், சாதாரண ஜனங்களோடு, எவ்வித கர்வமும் டம்பமுமின்றிக் கலந்து பழகுவதும்; ரெயிலில் மூன்றாவது வகுப்பு வண்டி, பஸ் வண்டிகளிற் பிரயாணஞ் செய்வதும், அங்கே வழக்கமாம். மனிதனுடைய யோக்கியதையை மதிப்பதன்றி, நிலையிலாச் செல்வத்தையும் அதிகாரத்தையும் உயர்குலப் பிறவியையும் மதிப்பதில்லை. இங்கிலாந்து சுயாதீனமும் தன்மரியாதையும் உள்ள நாடு என்பது, அந் நாட்டார் நடவடிக்கைகளில் துலங்கும். (3) தம் நாட்டுக்கு வந்துள்ள அந்நியர்க்கு உபசாரஞ் செய்வதிலும், உதவி புரிவதிலும் ஆங்கிலேயர், தமது சிரமத்தைப் பாராட்டாது உழைக்கும் பெருந்தன்மை மிக்கவர். வழியிலோ, ரெயில் ஸ்டேஷனிலோ, ஓர் இந்தியன் திகைத்து நின்றால், உடனே பலர் ஓடி வந்து, "என்ன வேண்டும்?" எங்கே போகவேண்டும்?" என்று பரிவுடன் விசாரித்து, வேண்டியபடி உதவி செய்வர். (4) தமது நாட்டைத்தவிர

மற்ற நாடுகளைப்பற்றி, அவற்றிலும் இந்தியாவைப்பற்றி, ஆங்கிலேயருக்கு ஒன்றும் தெரியாது; இங்கிருந்து போய் வாழும் இந்தியர்களின் குணகுணங்களையும் நடத்தையையுங்கொண்டே, இந்தியர் எல்லோரையும் மதித்துவிடுகின்றனர்; ஆதலால், இங்கிருந்து செல்லும் இந்தியர், தம் தாய் நாட்டுக்குப் பங்கம் வராதவாறு, விழிப்புடன், மேன்மையுடன், ஒழுகுதல் அவசியம்.

IV. சில்லறைக் கலம்பகம்.

1. ஸிநீமாவின் பிரயோசனம்—ஐரோப்பிய நாடுகளிலே பல வகைகளில் இந்தியாவை ஒத்திருப்பது ருஷியா தேசம். இதன் அரசாட்சி குடி யாட்சியாய் மாறி நடந்துவருகிறது. இந்தக் குடியாட்சி அதிகாரிகளில் பிரஸித்தரான ட்ராட்ஸ்கி என்பவர், ஸிநீமா என்னும் படக்கூத்தைத் துரைத்தனத்தாரே கைக்கொண்டு நடத்தி, அதன் மூலமாகப் பாமர ஜனங்களின் மதுபானம் முதலிய கெட்ட வழக்கங்களை மாற்றி, அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதுடன், தக்க வருமானமும் சம்பாதிக்கலாமென்று எழுதியிருக்கிறார். கூலி வேலை செய்வோரும், மற்றச் சாதாரண ஜனங்களும், தங்கள் ஓழிவு நேரங்களைக் கள்ளுக்கடை சாராயக்கடைகளில் கழியாமல், ஸிநீமாக் கூத்துக்கள் கண்டு களிக்கும்படி ஏற்பாடு செய்து, இக் கூத்துக்களின் மூலமாய் அவர்களுக்குக் குடியினால் விளையும் தீங்குகளை எடுத்துக் காட்டி, நல்லறிவைப் புகட்டலாமென்றும்; ஸிநீமாவைப் பார்த்து மகிழுவதற்கு எழுதப் படிக்கத் தெரிந்திருப்பது அவசியமில்லையாதலால், பாமர ஜனங்களை நல்வழிப் படுத்த இதுவே சிறந்த யுக்தியென்றும்; இந்த முயற்சியைத் துரைத்தனத்தில் ஒரு டிபார்டுமெண்டாக்கி நடத்தி வருதல் நலமென்றும், கூறுகிறார். இந்த யுக்தி, நம் நாட்டுக்கும் நன்கு பொருந்தும்; ஆயினும், அந்நிய அரசாட்சியார் அவ்வளவு சிரமமெடுத்துப் பொது நன்மைக்காகப் பாடுபடுவரென்று எண்ணுதற் கிடமில்லை.

2. யுத்தத்தின் கேடுகள்—ஐரோப்பிய மகா யுத்தம் முடிந்து, உலகம் சமாதானமாயிருப்பதாக மனப்பால் குடிக்கும் இக்காலில், சில தேசங்களின் சைநியத் தொகையை ஓர்த்தில் காணலாம்.

பிரான்ஸ்	...	356,000
இத்தலி	...	250,000
ருஷியா	...	660,000
போலந்து	...	250,000
ருமேனியா	...	211,000
ஜப்பான்	...	235,000
பிரித்தன்	....	216,000
ஐக்கியமாகாணங்கள்		131,000

லக்ஷக்கணக்கான இப் படை வீரர்கள் எல்லோரும், உபயோகமுள்ள வேலை யொன்றும் தாம் செய்யாததுமன்றி, பிறர் வேலைப் பயனைத் தாம் அநுபவித்து, தண்டச்சோறு தின்று வருகின்றனர் எனின், யுத்தத்தின் பெருங்கேடு ஒருவாறு விளங்கும்.

3. பழைய காலத்து வைத்தியசாலைகள் :— ஆங்கிலேயர் ஆட்சிக்குமுன் இந்தியாவிலே ஆசுபத்திரிகளே இருந்ததில்லையென்று எண்ணுவது தவறு. 'மருத்துவசாலைகளை எப்படிக் கட்டவேண்டும், அவைகளில் என்ன என்ன சௌகரியங்களும் வசதிகளும் இருக்கவேண்டும்' என்று, சாரக சூத்திரங்கள் விவரமாய் எடுத்துக் கூறுவதால், முன்னாள்களிலும் ஆசுபத்திரிகளிருந்தன என்பது நிச்சயம். மதுராந்தகம் தாலூகாவைச் சேர்ந்த திருமுக்கூடல் என்னும் கிராமத்து வேங்கடேசப் பெருமாள் கோயில் உட்சுவரிலே காணும் கல்வெட்டு, வீர சோழ மகாராஜன் என்ற சோழன், கி. பி. 1067 ஷித்திலே ஸ்தாபித்த ஓர் ஆசுபத்திரியைப்பற்றிக் கூறுகின்றது. குண்டூர் ஜில்லா மலகாபுரம் கிராமத்திலுள்ள வேறொரு சாசனம், பதினோராவது நூற்றாண்டிலே, பிரசவ ஆசுபத்திரியொன்று கட்டுவதற்காக, இருபது ஏக்ரா நிலம் தானஞ் செய்ததைக் குறிப்பிடுகின்றது. ஆகையால், புராதன காலத்திலும் மத்திய காலங்களிலும், இந்தியாவிலே பெரிய வைத்தியசாலைகளிருந்தன என்பது தெளிவு.

4. கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்தி :— பின்வரும் கணக்கு விவரங்கள், இந்தியாவிலே இந்த இயக்கம் (Co-operative movement) வேரூன்றி விருத்தியாகி வருவதை விளக்கும் :

வருஷம்	கூட்டுறவு நிதிகள்	மெம்பர்கள்	முதல் ரூ.	இலாபம் ரூ.
1922-23	514 ;	163,675 ;	1717 லக்ஷம்	29,29,732
1923-24	530 ;	166,585 ;	1533 லக்ஷம்	31,89 396

இந்த நிதி (Banks) களுடன் விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் முதலியவற்றையும் சேர்த்துக் கணக்கிட்டால், இந்தியாவிலே, 1923-24-ம் வருஷத்திலே, மொத்தம் 2,306,874 மெம்பர்களையும், 2286 லக்ஷம் ரூ. மூலதனத்தையும் உடைய கூட்டுறவு சங்கங்கள், ரூ. 83,26 016 இலாபத்தைச் சம்பாதித்தன என்றாகிறது.

5. கூட்டுறவு முறையில் ஆசுபத்திரி :— ஹூப்ளியில் கூட்டுறவு ஆசுபத்திரியொன்று ஏற்படுத்தி வருகின்றனர். சாதி மத பேதமின்றி எல்லோருக்கும் அதில் வைத்தியஞ் செய்யப்படும், இந்தியாவிலே இப்படிப்பட்ட வைத்தியசாலை, இதுவே முதலாவதாகும். ஸர்க்காரில் இதற்கு வேண்டிய பூமியை உதவுகின்றனர்; இதன் மற்ற விவரங்கள் விளங்கவில்லை

6 விசுவ விமானம் :— மேல் நோக்கியும், பக்கங்களிலும். மணிக்கு 200 மைல் வேகத்தில் பறக்கக் கூடியதும், தற்கால 'ஹோட்டல்'களிலுள்ள சகல சுக சௌகரியங்களும் தன்னிடத்தில் பொருந்தியதுமான ஒரு பெரிய ஆகாசக் கப்பல், இங்கிலாந்திலே உண்டாக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொன்றும் 600 குதிரை சக்தி

யுள்ள 'எஞ்சின்'களால், அது ஓடும். அது செய்து முடிந்த பிறகு, லண்டனில பிற்பகல் சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டவன், மறுநாட் காலை போஜனத்துக்கு ந்யூயார்க்கு (அமெரிக்கா) சேரலாம். அதன் நீளம் 720 அடி; குறுக்களவு, 130 அடி; ஆகாயத்தில் மிதக்கச் செய்யும் வாயுப் பை,மாடுகளின் மெல்லிய உள் தோலால் ஆனது; அந்தப் பையைச் செய்ய, (பாவம்!) பத்து லக்ஷம் மாடுகள் கொலையுண்டனவாம். மனிதனது "ஆசைக் கோர் அள வில்லை" என்று தாயுமானவர் கூறியது, மேலையர்க்கே நன்கு பொருந்தும்.

7. நரமாம்ச விக்கிரயம் :— காத்திபவார் ஸம்ஸ்தானம் ராஜகோட்டை நகரத்திலே, ஒரு தகப்பன், தன் சிறு பெண்ணை, ஒரு கிழ (விதவைப்) புருஷனுக்கு விற்கத் துணிந்துவிட்டதை, அவன் மனைவி — பெண்ணைப் பெற்ற தாய் — தடுத்துப் பார்த்தும் முடியாமையால், அந்தக் கண்ணாவியைக் காணச் சகியாமல், தன் சேலையில் மண்ணெண்ணெயை ஊற்றித் தானே தீ வைத்து, தாய் உயிரைத் துறந்தாள். சிநேகலதை என்ற வங்காளப் பெண்மணி, தன்னைப் பெற்றவர் தனக்குப் பரிசம் கொடுக்குமாறு படும் கஷ்டத்தைப் பார்க்கச் சகியாமல், இவ்வண்ணம் தற்கொலை செய்துகொண்டது, ஞாபகத்துக்கு வருகின்றது. இந்தக் காத்திபவார்த் தந்தை பாடும் கஷ்டம் தான்: ஏனெனில், தன் மகளை விற்றுப் பெற்ற பணத்தை இவன் அநுபவிக்க முடியாமல், அதைப் பரிசம் கொடுத்து, இறந்த மனைவிக்குப் பதிலாக, வேறு ஒரு சிறு கன்னிகையை இவனும் விவாகஞ்செய்ய வேண்டியதாய் விட்டதே! பெண்களுக்குத்தான் என்ன சாகசம்! புருஷர் நியாயமே நியாயம்!

8. இலங்கையில் முத்துச்சலாபம்—இந்த வருஷம் 36 நாள் நடந்தது. நாள் தோறும் 1000 முதல் 1800 பேர்வரை முத்துக் குளித்தனர்; சராசரி 1200 பேருக்குக் குறைவில்லை. மொத்தம் 180 லக்ஷம் சிப்பிகள் எடுக்கப்பட்டன. கீழக்கரைக் குளிக்காரர் முதலில் வராமையால் வேலை தவக்கப்பட்டு, அப்பால், அவர்களை அழைத்து வந்த பிறகே, நன்கு நிறைவேறிற்றும். அவ்வூர்க் குளிக்காரர் மட்டும் 1000 பேர். சிப்பிகள், சராசரி, ஆயிரத்துக்கு ரூ. 45 வீதம் விலையாயின. துரைத்தனத்தார் பங்கு வருமானமட்டும், ரூ 5,20,000 கிடைத்தது; செலவுகள் போக, தக்க லாபம் ஏற்படும் என்றெண்ணினர். அராபியக் குளிக்காரர்தாம், இந்தத்தொழிலில் அதிசமர்த்தர்; அவர்களுக்கு அடுத்தபடி, கீழக்கரையார். சிப்பிகள் களவுபோகாமலும், குளிக்காரர் வழியில் திறந்து பாராமலும், இந்த வருஷம், சிப்பிகளை எடுத்தவுடன் கோணிச் சாக்குக்களில் போட்டு, பைகளை முத்திரையிட்டுவிட்டார்கள். அடுத்த ஆண்டிலும் சலாபம் நடத்தக்கூடுமோ, கூடாதோ, இப்பொழுது சொல்ல முடியாதாம்; "கடவுள் கிருபை யிருந்தால்" துரைத்தனத்தார் அடுத்த ஆண்டிலும் இலாபம அடைவார்களாம்.

கம்ப ராமாயண இன்கவித் திரட்டு

(I. 1028-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. வே. பு. சுப்பிரமணிய முதலியார், G. B. V., C. வெள்ளக்கால்

20. அஞ்சு வணத்தின் ஆடை உடுத்தாள்; அரவெல்லாம்
அஞ்சு வணத்தின் வேகம் மிகுத்தாள் ; அருள் இல்லாள்
அஞ்சு வணத்தின் உத்தரி யத்தாள், அலை ஆரும்
அஞ்சு வணத்தின் முத்தொளிர் ஆரத் தணிகொண்டாள்.

இ-ள். அஞ்சு வ(ண்)ணத்தின் ஆடை உடுத்தாள்---பஞ்சவருணச் சேலை கட்டியவள்; அரவு எல்லாம் அஞ்சு உவணத்தின் வேகம் மிகுத்தாள்-பாம்புகளெல்லாம் பயப்படும். கருடன்போல வேகம் மிகுந்தவள்; அருள், இல்லாள்-இரக்கம் இல்லாதவள்; அம் சுவணத்தின் உத்தரியத்தாள்-அழகிய பொன்னின் (இழைகளாலான) மேலாடை (-தாவணி) உடையவள்; அலை ஆரும் அம் சுவண் ணத்தின் முத்து ஒளிர் ஆரத்து அணி கொண்டாள் -- கடலில் தங்கிய நீரில் (உள்ள) அழகிய நல்ல பெரிய சங்கின் முத்து ஒளி செய்கின்ற மாலையாகிய ஆபரணத்தை அணிந்து கொண்டவள்.

இப் பாட்டு ஓர் அடியின் முதலில் வந்த சொற்களே மற்ற அடிகளின் முதலிலும் வரப்பெற்ற 'யமகம்' என்னும் சொல்லணி திகழப் பெற்றது. இது பெரும்பான்மையான யமகச் செய்யுட்கள் போலாது, சிறிதும் கருகுதலின்றிச் சொல்லும் பொருளும் ஓசையும் ஒருங்கே இனியனவாய் அமைந்திருத்தல் பாராட்டற்பாலது.

[அவள், கண்ணை இமைகாத்தல்போல, இலங்கையைக் காப்பவள். அநுமானை 'நில் நில்' என்று அதட்டிக்கொண்டு எதிர் வந்தாள். இவ்வாறு எதிர் பாராவண்ணம் திடீரென எதிர்ந்தவளை அவன் சிறிதும் திகைப்பேனும் அச்சமேனுங் கொள்ளாமல் அமைதியாக "வருக" என்றான். "அஞ்சாமல் அசட்டுத் துணிவுடன் ஆகாத காரியம் செய்யப் புகுந்தாய்! அறிவில்லாய! போய் விடு!" என்றாள். "இவ்வூர் காணும் ஆசையால் உள்ளே போகின்றேன். இந்த ஏழை போவதனால் உனக்கு யாது நட்டம்?" என்றான். "திரிபுரம் எரித்த சிவன்போன்ற தீரரும் செல்லுதற்கு அஞ்சும் இவ் வூர்க்குள்ளே செல்லத்தக்கவன் நீயேயோ! சீ. சீ! போ!" என்று இகழ்ந்து சிரித்தாள். சிரித்தவளை மாறி இகழ்ந்து சிரித்தான். 'நகைக்கின்ற நீ ஆர்? உன்னைக் கொன்றுவிடுவேன்: உயிரை இழந்து நீ அடையும் பயன் யாது? ஓடிப் போகாமல் நிற்கின்றாயே!" என்றாள். "இவ் ஆரூட் புகுந்து பார்த்துவிட்டுத் தான் போவேன்" என்றான்.

‘இவன் வஞ்சகன், வானரமல்லன், இயமனும் அஞ்சும் என்னைப் பரிகசிக்கிறான் இவனைக் கொல்லாதுவிட்டால் இவ்வூருக்குத் தீங்கு விளையும்’ என்று எண்ணிச் சூலாயுதத்தை யெறிந்தாள். அதைப் பாம்பைக் கடித்துத் துண்டுபடுத்தும் கருடன் போலக் கடித்து ஒடித்து அவளுடைய மற்ற ஆயுதங்களையும் பறித்து எறிந்தான். எறியவே, கையாலடிக்க முயன்றாள். அவள் கைகளை ஒரு கையாற் பற்றிக்கொண்டு, பெண் கொலை பிழையென்று அவள் வலியை ஒடுக்க மற்றொரு கையால் ஓர் அறை அறைந்தான். கீழே விழுந்தாள். பின்பு எழுந்து கூறுவாளானாள் :—

“என் பேர் இலங்கா தேவி. யான் பிரமன் கட்டளைப்படி இவ்வூர் காப்பவள். அவனை நான் எவ்வளவு காலம் இவ்வூரைக் காவல் செய்ய வேண்டுமென்று கேட்டபோது, ஒரு குரங்கு உன்னைக் கையால் தாக்கியபோது என்பால் மீண்டு வருவாயாக’ என்றான். அவ்வாறே முடிந்தது. அறம் வெல்லும்; பாவம் தோற்கும்; உன் விருப்பம் அனைத்தும் நிறைவேறும். நகர்க்குள் ஏகுவாயாக” என்று வணங்கிச் சென்றாள்.

சிற்றுருக்கொண்டிருந்த அநுமான், மதிலைத் தாவிப் பெரிய பாற்கடலில் சிறிய மோர்த்துளி சிந்தினது போல்*, இலங்கைமாநகருட் குதித்தான். அங்கே இரத்தினங்கள் இழைத்த பொன் மாளிகைகள் அளவிறந்த ஒளி சிறந்த விளக்குக்களோடு எங்கும் பகல் (போல ஒளி) செய்ய, அவன், தான் இரவிலே ஒருவருமறியாமல் சீதையைத் தேடிக் கண்டுபிடிக்க எண்ணியிருந்த எண்ணத்துக்கு எதிராகச் சூரியோதயமாய் விட்டதே யென்று திடுக்கிட்டான். பின்பு தெளிந்து, இந்நகர் இரவில் இவ்வளவு ஒளியுடையதா யிருத்தலினன்றே, இங்கு வாழும் இராக்கதர் நிசிசரர் (—இரவிற் சஞ்சரிப்பவர்) ஆயினரென் றெண்ணினான்.

அவன், ‘நாம் தெரு நடுவே சென்றால், பிறர் கண்டுபிடித்தற்கேதுவாய் நாம் கருதியுள்ள காரியத்துக்கு இடையூறாம்’ என்று எண்ணி, முன்னமே சுருக்கி யிருந்த உடலை இன்னமும் சிறிதாகச் சுருக்கிக்கொண்டு, வீடுகளின் நிழல் சாய்ந்த பக்கத்து ஓரமாகச் செல்வானாய், எந்தப் பூவிலே தேன் உள்ளதென்று தேடித்திரியும் வண்டுபோல, எங்கே சீதை உள்ளாளென்று நாடி, அரக்கர்

* பால் எத்தனை பேரளவினதாயிருந்தாலும் அதிற் றெறித்த ஒரு சிறு மோர்த்திவலை அப்பால் முழுவதினும் பரவி அதன் இனிமையை மாற்றிப் புளிப்பாய்ச் செய்துவிடல்போலப், பெரிய இலங்கை நகரிற் சேர்ந்த சிற்றுருக்கொண்ட அநுமான் அப்பெரு நகர் முழுதும் படர்ந்து (—பரந்து, சென்று) சுட்டு அதன் அலங்காரத்தைக் கெடுத்து அலங்கோலப் படுத்தப் போவதை முன்னதாகக் குறிப்பிப்பாராய்க் கம்பர் “சீரிய பாலின் வேலை சிறுபிரை தெறித்ததன்னான்” என்ற கவித்திறம் கண்டு களிக்கத்தக்கது.

மாளிகைகள் ஆனைக்கூடங்கள் குதிரைப் பந்திகள் தேர் நிலையங்கள் வணிகர் கடைகள் முதலிய இடங்களெல்லாவற்றிலும் தேடிப் பார்த்துக்கொண்டு சென்றான்.

பெரிய நாள் ஒளிகொள் நான விதமணிப் பித்திப் பத்தி
சொரியு மா நிழல்கள் ஆங்குச் சுற்றலால், காலின் தோன்றல்,
கரியனைப் வெளியனாகிச் செய்யனைக் காட்டும் ; காண்டற்
கரியனை எளிய னைத்தன் அகத்துறை அழக னேபோல்.

இ-ள். (பல வருண) நட்சத்திரங்களின் ஒளிகள் படைத்த பலவகையான பருமையான இரத்தினங்களால் அமைக்கப்பெற்ற சுவர் வரிசைகள் சொரியும் ஒளிகள் சூழ்தலினால், வாயுகுமாரன் (ஆன அநுமான்),—(அன்பரல்லார்) காணுதற் கரியவனைப் (அன்பர் காண) எளியவனைத் தனது மனத்தின் கண் வாழும் சுந்தர மூர்த்தி (யாகிய சுவாமி பலவாறு தோன்றுதல் போல, ஓரிடத்தில்) கறுத்தவனாகியும் (மற்றோரிடத்தில்) வெளுத்தவனாகியும் (வேறோரிடத்தில்) சிவந்தவனாகியும் தோன்றுவானானான்.

நாள்—நட்சத்திரம். பித்தி—சுவர். பத்தி—வரிசை. நிழல்—ஒளி. கால்—வாயு. தோன்றல்—மகன். காட்டும்—தோன்றுவான். பெரிய மணிப்பித்தியெனக் கூட்டுக.

[அநுமான் அவ்வாறு செல்லும்போது குல முதலியவற்றிற் சிறந்த தேவ மாதர் சேடியராய் நீர்க்குடங்களை வருந்திச் சுமந்து கொண்டு வந்து ஸ்நானம் செய்விக்க, அரக்க மாதர் சுகமாக நீராடுதலைக் கண்டான்.]

(தொடரும்)

நாகரிக சமூக வாழ்க்கைக் குறிப்புக்கள்

1. கொல்லாமை—கொல்லாமையே சிறந்த தருமம். 'தன் உயிர் போவதாயினும், தான் ஒன்றைக் கொல்லல் ஆகாது' என்பது திருக்குறள் நீதி. திருவள்ளுவர், இதைத் துறவறவியலில் வைத்து, சந்நியாசிகளுக்கே விசேஷமாகக் கூறினார். நமக்குள், தேள், விஷப் பாம்பு முதலிய கொடிய பிராணிகளையும் கொல்லாதவர் இருக்கின்றனர். வட இந்தியாவிலே, ஒரு ஜைனக் கோயிலில், மூட்டைப் பூச்சிகள் செறிந்து நிறைந்த ஒரு மெத்தை யிருக்கிறதென்றும் ; அந்தக் கோயிலுக்குப் போகும் பக்தர்கள் சிலர், கோயிலதிகாரிகளின் அநுமதி பெற்று, அந்த மெத்தையில் படுத்துறங்கித் தம்து

ரத்தத்தினால் மூட்டைப்பூச்சிகளைப் போஷித்துப் "புண்ணியம்" பெறுகின்றனர் என்றும், கேள்வி. இந்தக் காலத்திலே, மாமிசம் தின்பவன் ஒருவனை, தின்னாதவன் கண்டித்துப் பேசினால், 'நீ தின்னும் காய்கறிகளுக்கும் உயிருண்டென்று போஸ் கூறுகிறாரே; நீயும் கொலைகாரன்தான்' என்று பதில் ஏசுவதைக் கேட்கலாம். இதையெண்ணியே, தவசிகள், பழுத்துதிர்ந்த பழங்களையும் சருகு கிழங்குகளையும் புசித்துவந்தனர் என்பர். "தண்ணீரிலே கண்ணுக்குப் புலப்படாத பல சிறிய கிருமிகள் இருப்பதால், நீரை எப்பொழுதும் கொதிக்கவைத்தே குடிக்கவேண்டும்" என்றவனுக்குப் பதிலாக, "என் வயிறு, ஒரு சுடுகாடாயிருப்பதைவிட, ஜலஜந்துக் காட்சிச் சாலையாயிருப்பதே எனக்குப் பிரியம்" என்று, ஒரு சீமாட்டி சொன்னாள். இந்த நீதிகள் எவ்வாறாயினும், தற்காலத்திலே, சாதாரண மனிதர் இவற்றின்படி நடப்பது, சாத்தியமில்லை. உயிர்களுக்குள் ஒரு விதமான வருணாசிரம தருமத்தை ஏற்படுத்தி, உயர்ந்த ஜாதிப் பிராணிகளின் க்ஷேமத்துக்காகத் தாழ்ந்தவகுப்புப் பிராணிகளைக் கொல்லலாம் என்று வைத்துக் கொண்டே, நடக்க வேண்டியிருக்கிறது. இந்தியாவிலே, ஆண்டுதோறும், பத்துலக்ஷம் ஜனங்களுக்குமேல், 'மலேரியா' என்னும் விஷஜுரத்தினால் மாளுகின்றனர்! சாகாமல், பலம் குன்றி, நோயுற்று க்ஷீணித்து, நடைபிணம் போல் திரிந்து வருந்துவோர் தொகையோ, கணக்கில்லை. ஒரு மனிதன் செத்தால், ரூபா நூறுதான் தேசத்துக்கு நஷ்டம் என்று கொண்டாலுமே, வருஷந்தோறும் பத்துக்கோடி ரூபா இதனால் மட்டும் நஷ்டமாகிறது. லக்ஷக்கணக்கான ஜனங்கள், 'ப்ளேக்' என்னும் கொள்ளை நோயினாலும், 'காலரா' முதலிய நோய்களாலும் சாகின்றனர். அந்த வியாதிகள் பாவுவது, எலி கொசு ஈ முதலிய ஜந்துக்களால்தான் என்பது, சாஸ்திர சித்தாந்தம். ஆகவே, இந்த ஜந்துக்கள் மூலத்தோடு நாசமாகும்படி கொல்வது, மனித வாழ்க்கைக்கு அவசியமாகின்றது. உலகமெங்கும் தொற்றுயிர் (parasites) நோய்களால் உண்டாகும் நஷ்டத்தையும், ஜெர்மன் யுத்தத்தால் உண்டான மகா நஷ்டத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால், ஆனையும் பூனையும் போலாம் என்று, கூறுவது பொருந்தும். மனிதருக்கு நேரும் சேதம் ஒரு புறமிருக்க, புழு பூச்சிகளால் பயிர்களுக்கும் விளைவுகளுக்கும் உண்டாகும் சேதம், ஒருவருஷத்திலே, இந்தியாவில் மாத்திரம், 200 கோடி ரூபாவுக்கு மேலாகுமென்பது, ஸர்க்கார் மதிப்பு; இந்த விரோதிகளைச் கொல்வதும் அவசியமாகிறது. கொல்லாமையும் அஹிம்சையுமோ சிறந்த தர்மங்கள்; எனவே, உலகவாழ்க்கையே தர்மசங்கடம் தான்!

2. பிச்சைக்காரர்கள் — "ஐயமிட்டுண்" என்றார் ஔவையார். 'தருமம்' என்ற சொல் 'பிச்சைகொடுப்பது' என்ற பொருளில

வழங்குகிறது; 'ஈகை' யே 'புகழ்' என்பார் பலர்; அன்னதானத்தின் மகிமையை எடுத்தோதும் கதைகள் ஆயிரக் கணக்கினவாம். ஆயினும், "பாத்திரம் அறிந்து பிச்சையிடு; கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு" என்ற பழமொழியும் வழங்குகிறது. மேல் நாட்டார்க்குள், இந்த விஷயத்தைப்பற்றிய அபிப்பிராயங்கள் வேறு. 'நாகரிகமுற்ற ஜனசமூகத்திலே, பிச்சைக்காரனே இல்லாதபடி, செல்வம் சம நிலையாய்ப் பரவி யிருக்க வேண்டும்; தேக சௌக்கியமும் பலமுமுள்ள ஒவ்வொருவரும், யாதாவது ஒரு வேலைசெய்து, அந்த வேலைக்கு, சுக ஜீவனத்துக்குப் போதுமான கூலிபெற வேண்டும்; பல ஹீனரும் நோயாளிகளும் வயோதிகர்களும், துரைத்தனத்தாரால் போஷிக்கப்பட வேண்டும்; ஒருவன் பிச்சை கொடுக்க, மற்றொருவன் வாங்கிப் பிழைப்பதே கூடாது' என்பன, அவர் கொள்கைகள். "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகு இயற்றியான்" என்று, கடவுளையே சபித்துப் பாடினார் நாயனார். சென்னைநகரில் மாத்திரம் 2500 பிச்சைக்காரருக்கு மேல் வாழ்கின்றனர்; இவர்களில் பெரும்பாலார் வேலைசெய்து பிழைக்க வல்ல சோம்பேறிகளே என்று கணக்கிட் டிருக்கின்றனர். இவர்களில் பலர், திருவிழாக் காலங்களிலே, குரூபமான பொய் வேஷங்கள் பூண்டும், சப்பாத்துக் கள்ளிமேல் கிடந்தும், பெண்கள் தமது மானத்தை மறையாத கந்தலுடுத்தித் திரிந்தும், குழந்தைகளைக் கஷ்டப்படுத்திக் காட்டியும், பலவழிகளில் காண்போர் இரக்கத்தைக் கிளப்ப முயன்று, நிர்ப்பந்தம் செய்து பிழைக்கின்றனர். இதை ஒழுங்குபடுத்துவது, முதல் அவசியமாகும்.

3. சரீரப் பாதுகாப்பு:—"உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்பது பழைய வாக்கு; உண்மையில், ஆண்களுக்கும் அழகுதான்; அழகு மாத்திர மில்லை, தேக ஆரோக்கியமும் கூட உண்டு. ஏழைகள் பட்டினியினாலும் அதிக உழைப்பினாலும், மற்றவர் சோம்பலினாலும் பெருந் தீனியினாலும், கெடுகின்றனர், இது நிற்க: பெண்கள் மிதமாய் உண்டு, மிதமாய் உறங்க வேண்டும். நாள்தோறும், 6 அல்லது 7 மணி நேரத்துக்குமேல் தூங்கினால், உடல் ஸ்தூலித்து, அழகு கெட்டுவிடும். போதுமான சரீரப்பயிற்சியும் வேண்டும். இந்திய ஸ்திரீகள் பொதுவாய், சில ஜாதியார்க்குள் விசேஷ அதிகமாய், சிறிது வயதுசென்று, இரண்டொரு குழந்தைகள் பெற்றபின், தங்கள் இயற்கை அழகைப் பேணிக் காப்பாற்ற முயலுகிற தில்லை. 'இனிமேல் எனக்கென்ன வேணும்?' 'இந்தக் கட்டைக்கு இவ்வளவு போதும்' என்ற விரக்திவந்து, பிஞ்சிற் பழுத்து விடுகிறார்கள். இது சரியன்று: தன் மானத்தையும் தன் மரியாதையையும் காப்பாற்றுதல் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு, புருஷனுகட்டும் ஸ்திரீயாகட்டும், தன் தேக ஆரோக்கியத்தையும்

அழகையும் பேணிப் போற்றுவது, ஒவ்வொருவர்க்கும் கடமை யாகும். இதனால், டம்பாசாரியாகவேனும், கிழவனும் கிழவியும் குமரன் குமரியைப் போலவேனும், வேஷம்போட்டுக் கொள்ள வேண்டுமென்பது கருத்தன்று. இயற்கையில் அமைந்த புத்தி யையும் குணங்களையும் பேணித் திருத்தி வளர்ப்பதுபோலவே, சரீர லக்ஷணத்தையும் நடத்துவோரே, சம்பூர்ண வாழ்வை வாழ்வோ ராவர்.

—மா.

தானே தானும் தக்கடி தங்கம்

(I-1040-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

4. "மாமிக்கும் மருமகளுக்கும் சண்டை"

சேத்த வார்த்தில் தக்கடி வரும் பொழுது, துவா தச நாமங்கள், ஆட்டபாட்டங்கள், குழந்தைப் பரிவாரங்களோடு வந்தான். என்னைக் கண்ட வுடன், தான் பாடிக்கொண்டு வந்த பாட்டை நிறுத்திவிட்டு, கேலி மரியாதையாகக் கீழே தரையைத் தொட்டுச் சலாம் செய்து, பின்வரும் பாட்டை விஸ்தாரமாகப் பாடினான் :—

நாட்டிலே பிள்ளைகள் நாலாயிரமுண்டு ; நான் திரியும்
காட்டிலே கீரி அணில் கிளிப் பிள்ளை கணக்கிலவாம் ;
பாட்டிலே பிள்ளைப் பெருமாளுமுண்டு ; பழமறையோர்
வீட்டிலே வாழும்இம் மாப்பிள்ளை போற்பிள்ளை வேறில்லையே.

இதை அவன் பாடி முடிந்தவுடன் : "அதிருக்கட்டும் தக்கடி, நீ வேறு ஏதோ பாடிக்கொண்டு வந்தாயே, அதென்ன" என்று நான் கேட்டேன்.

"வில்லியப்பன் பேர் கேட்டதுண்டா ? அப்பேன் திருமுக விலாசம் படித்ததுண்டா ?"

"நான் கேட்ட தில்லை ; அவன் யார் ?"

தக்கடி—சிவகங்கை தெரியுமா ? செமீன்தார் தெரியுமா ? சமத்தான வித்துவான் தெரியுமா ? அவன்தான் வில்லியப்பன் ; அவன் பாடினதுதான் திருமுகவிலாசம்; 'மாமி மருமகள் சண்டை' தெரியுமா ?

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

நான்—அதற்கென்ன, வீட்டுக்கு வீடுதான், தினந்தோறுந் தான், நடக்கிறது.

தக்கடி—அதுகிடக்கிறது அப்பேன்; தட்டாரச் சிறுக்கிக்கும் அவள் மாமிக்கும் நடந்த சண்டையை வில்லியப்பன் பாடியிருக்கிறான், கேட்கிறாயா?

நான்—ஆகா! சந்தோஷமாய்க் கேட்கிறேன்.

தக்கடி—உஷார். நடுவிலே பேசாதே:—

" ... ... சீறி, ஒரு—வன்புலிபோல் பாய்ந்து, மருமகள், தன் மாமி முன் நின்று,—"என் புகன்றாய்? இன்னம் இயம்பு வாய்—'முன்னம் இரு—நாலு வருடம் சமைந்து நாற்றமெடுத்தாள்' என்றும்;—'மேல் அழகில்லா மூளி வேசை' என்றும்;—'ஞாலம் அதில்—சீந்துவார் அற்றுத் திரிந்தவளைக் கொண்டுவந்து—வாய்ந்த நடுமனை வைத்தேன்' என்றும்;—காந்தனிடம்—சொல்லிப் பரிசழித்த தோஷிக்குராங்கே உன்—பல்லைப் பிடுங்க ஒரு பல் இலையே!—அல்லது,—அடக்கற்ற நெஞ்சைவகிர்ந்து, ஆறு கூறுக்கி,—தொடக்குற்ற நாவைத் துணிப்பேன்;—விடக்கெடுத்த,—வந்து பற்றிப் பேய்நாயே! வாயில் இடும் பாணுயே—சங்கை கெட்டுப் போனாயே தானாயே!—பங்குமுற்ற—வெங்கங் கழுதாய்! விருதா வெறுங்கழுதா—(கழுது-பிசாசு) எங்கெங்கு அழுதாய், இரப்புணியே!—பொங்கும்பால்—ஊட்டி வளர்த்தாலும், உயிர்தீர் விடம் அளிக்கும்—மோட்டு அரவை ஒத்த முழுநீலி!—நாட்டில் உனை—நல்லவன் என்று ஆருரைப்பார்? நாறச் சவமே! உன்—,சில்வாயைப் பேர்த்துத்திருப்பட்டா?—வல் இருளில்—பூசலிடு பேய்க்கணமே! போழ்வாய்க் கிழட்டு ஒரி! பேசுவதைப் பாரப்பா, பெப் பெப்பே!—மாசுபட்ட—வாருகோலால் உடலை வாட்டி எடுப்பேன், உனக்கு இங்கு—ஆர்சலிகை சொல்வாய்? அறையறேன்—பார்" எனவே—காறி உமிழ்ந்தாள்; இவளும் காறி உமிழ்ந்தாள்; மருகி—தூறி இரைந்தாள்; இவளும் தூறினாள்;——மீறி—இடித்தாள் மருமகள் அங்கு; ஈண்டெழுந்து மாமி—கடித்தாள் ஒரு காதில் கவ்வி;—துடித்து, அவளும்—பற்றி மயிரைப் பிடித்தாள்; பாழ்ங் கிழவி, வௌவால் போல்—தொற்றி, மயிரைப் பிடித்துத் தொங்கினாள்;—சிற்றிடையில்—துத்தாரிப் பட்டு மெல்லச் சோர்ந்து நழுவி, அந்த—வித்தாரி, கால்சறுக்கி வீழ்ந்திட்டாள்!—அத்தருணம்—மால் ஏறிக்கொண்ட மருமகளைப் போட்டு அமுக்கி,—மேல் ஏறிக்கொண்டாள், விசைக் கிழவி;—கோலிய மூ—தாட்டி ஆனாலும் தயங்கு சமயத்தில், நல்ல—வேட்டைவந்து வாய்த்தால், விடுவாளோ!"

என்ன, அப்பேன், சொல்லேன்: வில்லியப்பன் முடுக்கைப் பார்த்தாயா?

பிள்ளைகள்—பேஷ்! பேஷ்! தக்கடி பலே பேஷ்; அந்த வாரண்டுக்காரன் சங்கதி கொஞ்சம் பாடு, கேட்போம்.

தக்கடி—ஆத்தாடி! செரிக்க வேண்டாமா? மிட்டாயானால் வாரி வாரித் தின்னிடலாமா? இன்றைக்கு இவ்வளவு போதாதா? தானே தானும் தக்கடி தங்கம்! ஜல்! ஜல்! ஜல்" என்று குதித்தோடி விட்டான்.

பிள்ளைகளும், "உன் பல்லைப் பிடுக்க ஒரு பல்லிலையே!" என்றும்; "பேசுவதைப் பாரப்பா பெப்பெப்பே!" என்றும், ஒருவரை யொருவர் கேலி செய்துகொண்டு வீடு சென்றூர்கள்.

—"கோணக்கோபாலன்"

ஸம்ஸ்கிருத புஸ்தக சாலைகள்

ஸ்ரீ. R. அனந்த கிருஷ்ண சாஸ்திரி,
சாந்திநிகேதனம்.

பூர்வ காலங்களில் ஒவ்வொரு பெரிய வித்துவான்களின் கிராமத்திலும் ஒரு புஸ்தகசாலை யிருந்தது. தர்க்க சாஸ்திரம் பரம்பரையாகப் படித்தவர்கள் வீடாகளிருந்தால், அந்தப் புஸ்தகங்கள் அவர்கள் வீட்டி லிருக்கும்; அப்படியே மற்ற சாஸ்திரங்களும். புஸ்சகங்களை, சகோதரர்கள் பாகஞ் செய்கிற தில்லை. தர்ம சாஸ்திரத்தில் புஸ்தகங்களை பாகஞ் செய்யக்கூடா தென்று தடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அவை பொது பதார்த்தம். அந்தப் பொது ஏடுகளை எவனுவது திருடினுல் கண் குருடாகி விடும் என்று, தர்ம சாஸ்திரங் கூறுகிறது. அந்தந்த ஏடுகளையோ காகிதங்களையோ படிக்குங் காலத்தில், ஏதாவது கொஞ்சம் அந்தப் பத்திரங்களுக்குக்கெடுதல்வந்தால், அதைத் திரும்பி யெழுதிச் சேர்த்துவிடுகிறது வழக்கம். முன் காலத்து நம் ராஜாக்கள், புத்திமான்களும் அபிமானிகளாகவுமிருந்தால், தம் ராஜ்ஜியத்தில் ஒரு புஸ்தகசாலை புதிதாக வைக்கிறது வழக்கம். அதற்காக ஏழை வீடுகளிலிருக்கிற புஸ்தகங்களையும், அகப்படக்கூடாத புஸ்தகங்களை, அகப்படுகிற இடங்களுக்குப் பண்டிதர்களை அனுப்பி நகல் செய்து கொண்டு வருகிறதுமுண்டு. இவ்விதமாகப் பர்தகண்டத்தி லிருக்கிற ராஜாக்கள் அரமனைகளில் லைபிரரிகளிருக்கின்றன. காச்மீர தேசத்திலிருக்கிற ஜம்மூநகரத்தில் ஓர் உயர்ந்த லைபிரரி யிருக்கிறது. அதில் அநேக கிருந்தங்கள் 1850, வருஷத்தில் காசியிலிருந்து எழுதியும் மூலங்களை விலைக்கு வாங்கியும், சேகரிக்கப்பட்டன. நேபாலத்தில் இராஜக்கிரகத்தில் ஒரு லைபிரரி யிருக்கிறது. சில பண்டிதர் வீடுகளி லிருக்கிற புஸ்தகங்களைப்

பார்த்தால், லைபிரரியென்றே சொல்லலாம். லைபிரரி யென்றால் எல்லா விஷயங்களும் அடங்கிய புஸ்தகங்க ளிருக்க வேண்டும். காசியில் இப்பொழுது ஸர்க்கார் லைபிரரி 'சரஸ்வதிபவன்' என்று ஒன்றிருக்கிறது. ஒவ்வொரு பண்டிதர் வீடும் சந்நியாசி மடமும் லைபிரரியாகும். அனேகமாக இவ்விடத்தி லிருந்து வெளியான கிருந்தங்கள்தான் மற்ற லைபிரரிக்கும் இங்கிலீஷ் தேசங்களுக்கும் சுமார் 100 வருஷ காலமாகப் போய்க்கொண்டிருக்கின்றன. ஆதி முதல் காசியி லில்லாத புஸ்தகம் வேறிடத்தில் கிடைத்தால், அவற்றைப் பண்டிதர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். ஆகையால், எந்தத் தேசத்தில் புதிதாக ஒருவர் கிருந்தஞ் செய்தாலும், அதில் ஒரு பிரதியைக் காசிப் பண்டித சபைக்கு அனுப்பித் தீர வேண்டும். 1600 முதல் 1650 வரை, காசியில் கவீந்திராசாரியாரென்று ஒரு மகா வித்துவான் வாசஞ் செய்தார். அப்பொழுது ஷாஜஹான் காலம். அவர் புத்திரன் தாராஷுகோ, மேல் சொன்ன சந்நியாசியாருக்குச் சிஷ்ன் ஆனார். இந்தக் கதைகள் சரித்திரம் படித்தவர்களுக்குச் சுலபமாகத் தெரியவரும். அவர் மடத்தில் ஒரு லைபிரரி யிருந்தது. அந்த லைபிரரி அந்த சந்நியாசியாருக்குப் பிறகு என்னமாயிற்றென்று ஒருவருக்குந் தெரிய வில்லை. அவர் வித்துவானாக இருந்தபடியினால், சாஸ்திரீக புஸ்தகங்கள் சுமார் 2500 புஸ்தகங்கள்வரை யிருந்தன. அவ்வளவிலும் தன் கையினால் தன் பெயரை யெழுதியிருக்கின்றார். அந்தப் புஸ்தகங்கள் அனேக இடங்களிலும் காசியிலும் அகப்படுகின்றன. அந்த லைபிரரி வெகு அபூர்வ கிருந்தங்கள் அடங்கியது. அந்த லைபிரரி லிஸ்டு அகப்பட்டு, பரோடாவில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதை வித்துவான்கள் பார்த்து மகிழுகிறார்கள். அந்த லைபிரரியிலிருந்த அபூர்வ கிருந்தங்கள் சில அகப்படுகிற பக்ஷத்தில், நம் தேச்த்திற்கு வித்தையில் சாஸ்திர கௌரவ முண்டாகும். வித்துவான்கள் முயற்சி செய்கிற பக்ஷத்தில் அகப்படும்; சந்தேக மில்லை. வங்காளத்தில் கல்கத்தா ராஜதானியில் (Asiatic Society of Bengal) லைபிரரி யொன்று, சர்க்கார் ஸம்ஸ்கிருத பாடசாலை லைபிரரி, வங்க தேச ஸாஹித்திய சபை லைபிரரி முதலானவை யிருக்கின்றன. ம்த்திய தேசத்தில் இராஜபுதனத்தில் ஒவ்வொரு ராஜாவின் அரமனையிலும் ஒவ்வொரு லைபிரரி யுண்டு. பிகானேரில் ஓர் உயர்ந்த லைபிரரி யிருக்கிறது. லிஸ்டு அச்சிட்டிருக்கிறது. ஜோட்பூரின் கோட்டைக்குள் ஓர் அறையில் புஸ்தகங்களைத் தள்ளியிருக்கிறார்கள். சிரத்தை யில்லாததினால், ஒருவரும் கவனிக்க வில்லை. புஸ்தகங்கள் கெட்டுப் போகின்றன. ஜயபுரம் அரண்மனையில் லைபிரரி யிருக்கிறது. இவ்விடத்தில் கணித சாஸ்திரத்தில் பெயர்பெற்ற ஜகந்நாத பண்டிதர் வாழ்ந்து, வெகு கிருந்தங்கள்

கணிதத்தில் எழுதினவர். அரபியா முதலான தேசங்கள் யாத்திரை செய்தவர். ஆக்பர் சபையில் கணிதவாதஞ் செய்தவர். கிரீக் தேசத்து தாலமீ புஸ்தகத்தை அரபீ பாஷையிலிருந்து ஸம்ஸ்கிருதப்படுத்தினவர். ஜயபுரத்தில் மானஸிங் ராஜா காலத்தில் நக்ஷத்திர கணிதசாலை (Observatory) கட்டப்பட்டது. அது இப்பொழுதும் பார்க்கிறவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. மானஸிங் ராஜா நாலு நக்ஷத்திர கணித - சாலைகள் கட்டினார். ஒன்று டில்லியில், இரண்டாவது காசியில், மூன்றாவது ஜயபுரத்தில், நான்காவது உஜ்ஜயினியில்.

ஆல்வார் லைபிரரியில் மகாபாரதம் சித்திரங்களுட னிருக்கிறது; புஸ்தக லிஸ்டும் அச்சாகியிருக்கிறது.

பரோடாவில் 13,000 கிருந்தங்களும் சித்திரங்களும் அடங்கிய ஒரு முக்கிய லைபிரரி இருக்கிறது. வெகு அபூர்வ கிருந்தங்கள் அடங்கியது; எட்டு வருஷங்களில் (1915--1922) பரத கண்டம் பூராவும் சுற்றிச் சேகரிக்கப்பட்டது.

ஜகந்நாதத்தில் நம் சங்கர மடத்தில் ஒரு லைபிரரி யிருக்கிறது. மகாராஷ்டிர தேசத்தில் புனவில் சர்க்கார் லைபிரரி யிருக்கிறது. இப்பொழுது அதற்கு பண்டார்கர் ரிஸர்ச்சு இன்ஸிடிட்யூட் (Bhandarkar Research Institute) என்று பெயர். இது ஓர் உத்தம லைபிரரி. பம்பாயில் வல்லப ஸம்பிரதாய மடங்களில் வெகு புஸ்தகங்க ளிருக்கின்றன. உதயபூரியில் நாத துவாரமென்கிற மடத்திலும் வெகு கிருந்தங்க ளிருக்கின்றன. அப்படியே உதயபூர் ராஜ கிருகத்திலும் ஒரு சிறு லைபிரரி யிருக்கிறது.

மைசூர் அரண்மனையிலும், கவர்ன்மெண்டிலும் ஒரு லைபிரரி யிருக்கிறது. அரண்மனை லைபிரரியில், வெகு அபூர்வ கிருந்தங்களும் இருந்தன. அக்கினி பாதையினால் நாசமடைந்து விட்டன. இப்பொழுது இருக்கிற இரண்டு லைபிரரிகளும் புதிதாகும். 1890-முதல் கவர்ன்மெண்டு லைபிரரி ஆரம்பிக்கப்பட்டது.

மதராஸ் கவர்ன்மெண்டு லைபிரரி உத்தமமானது; அப்படியே தியஸாபிகல் ஸொஸைடி அடையார் லைபிரரியும். இவ்விரண்டிலும் வெகு அபூர்வ கிருந்தங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

காஞ்சியில், உபநிஷத் பிர்மேந்திர மடமென்கிற நம் சங்கர மடத்தில், வெகு அபூர்வ அத்வைத கிருந்தங்களிருக்கின்றன.

தஞ்சாவூரில் ஓர் உயர்ந்த லைபிரரி யிருக்கிறது; ஸரஸ்வதி மஹால் என்று பெயர். இப்பொழுது அது சர்க்கார் மூலமாக ஜனங்கள் உபயோகத்திற்காகப் பொதுவாகி விட்டது.

மலையாளத்தில், திருவனந்தபுரத்திலும் கொச்சி ராஜதானியிலும் இருக்கிற லைபிரரிகள் தவிர, அனேக மடங்களிலும் சிறு ராஜர்க்கள் வீடுகளிலும் லைபிரரிகளிருக்கின்றன.

இதுவரை பரதகண்டத்திலிருக்கிற லைபிராரிகள் கூறப்பட்டன. 1800-ம் வருஷ முதல் நம் புஸ்தக விஷய ஞானம் மேனாட்டார்களுக்கு ஏற்பட்டு, அது முதல் நம் தேசத்துப் புஸ்தகங்கள் மேல் நாட்டிற்குப் போகத்தலைப்பட்டு, 1915 வருஷம் வரை, ஒழுங்காகச் சேகரிக்கப்பட்டன. இப்பொழுது இந்த ஜகத்திலிருக்கிற லைபிரரிகளில் மேல் நாட்டு லைபிராரிகள் உத்தமம். நாம் காதாலும் கேளாத புஸ்தகங்கள் எல்லாம் அவ்விடத்தி லிருக்கின்றன. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ருஷியா, அமெரிக்கா, முதலான இடங்களிலும், நம் ஏடுகளும் காகிதப் புஸ்தகங்களு மிருக்கின்றன. நம் ஜனங்கள் அபிமான மில்லாமலும், கேவலம் சாப்பாட்டு ராமன்களாயு மிருக்கிற குணத்தை, மேல் நாட்டுக்காரர்கள் நன்றாக அறிந்துகொண்டு, சுமார் நூறு வருஷகாலமாக, நம் குலதனமான புஸ்தகங்களைத் திருடியும், வஞ்சித்தும், கொஞ்சம் விலை கொடுத்தும், இன்னும் அனேக தந்திரங்களாலும், அபகரித்து விட்டார்கள். நம் ராஜாக்களில் சிலர், தானமாகத் தங்களுடைய புஸ்தகங்களை இனாம் செய்தார்கள். சில வருஷங்களுக்கு முன், நேபால தேசத்து அரசர், சுமார் 6000 புஸ்தகங்களைச் சீமை லைபிராரிக்குத் தானஞ் செய்தார். நமக்கு ராஜ்ஜிய சம்மந்தமான அடிமைத்தனமிருந்தாலும், வித்தையிலும் புஸ்தகங்களிலும் கொஞ்சம் கொர்வமும் மேன்மைத்தனமும் கொண்டாடிக்கொண்டிருந்தோம். அவற்றுக்கும் அடிமைத்தனம் நேரிட்டது.

ஆ! பரதகண்டமே! எப்பொழுது உன் அடிமைத்தனம் போகப் போகிறது? உன் பண்டிதர்கள் மூடர்களும் அபிமான மற்றவர்களும் ஆகிவிட்டார்களே! உனக்கு இனி எப்பொழுதாவது நல்ல காலமும் மேன்மைத்தனமும் வரப்போகின்றதா? ஏதாவது ஒரு அபூர்வ கிரந்தம் அச்சிடவேண்டுமானால், பிரதிக்காக இங்கிலாந்து சீமைக்கு எழுதவேண்டி யிருக்கிறதே; அவர்கள் தயையையும் பொறுத் திருக்கிறதே. அபிமானிகளே! இதைக்கேட்க உங்கள் ரத்தம் கொதிக்கிறதா? ஜாஸ்தியாக, 1860 முதல் 1890 வரை, காசி, காச்மீரம், குஜராத், தக்ஷிணம் முதலான இடங்களிலிருந்து முக்கியமாக, வண்டி வண்டியாகப் புஸ்தகங்களை 30-வருஷ காலமாகக் கொண்டு போனார்கள். நம் துரைத்தனத்தார் இங்கிலீஷ்காரரானபடியால், அவர்களும் இந்தக் கொள்ளைக்கு ஒத்தாசை செய்தார்கள். நம்மவர்கள் இருஷி சாபத்திற்குள்பட்டதினால், அபிமானமற்று, மதப் புஸ்தகங்களை விற்றார்கள்; இப்பொழுதும் காசு கொடுத்தால் புஸ்தகம் விற்கிறார்கள்; ஜகத்தில் நம்ம இந்தியர்கள் மாதிரி மதத்தை விற்கிறவர்கள், ஒருவர்களுங் கிடையாது. ஈசுவரன் தான் கிருபை செய்யவேண்டும்.

பூர்வ ஹிந்துக்களின் சிற்பச் சிறப்பு

ஸ்ரீ. Dr. K.N. ஸீதாராம், M.A., PH.D., D.LITT.,
சென்னை.

ஐரோப்பாவில் இத்தலியைப்போல ஆசியாவில் நமது இந்தியா விளங்குகின்றது. இத்தலி நாடெங்கும் வேதப்பள்ளிகளும் அரமனைகளும் நிறைந்து திகழ்கின்றது; நமது இந்தியா தேசமும், வடக்கே மானஸரஸ் ஏரியிலிருந்து தெற்கே குமரி முனை வரையில், மேற்கே கிருஷ்ண பரமாத்மா எழுந்தருளியிருந்த துவாரகையிலிருந்து கிழக்கே அஸ்ஸாம் அல்லது பிராக்ஜோதிஷம் வரையில், ஆலயங்களும் மசூதிகளும் கூட கோபுரங்களும் மாட மாளிகைகளும், உலகில் வேறெங்கும் இவ்வாறில்லை என்னும்படி, நிறைந்து இலங்குகின்றது. இம்மட்டோ; நமது முன்னோர்கள் கப்பலேறிச் சென்று குடியேறின நாடுகளில், அவர்கள் கட்டுவித்த ஆலயங்களும் அரமனைகளும் எண்ணிலவாம். இவ்வண்ணம் அவர்கள் குடியேறின நாடுகளில் முக்கியமானவை; சிங்களம் (இலங்கை), சாவகநாடு (ஜாவா), பாலித்தீவு, போர்நியோ தீவு, பர்மா, அன்னம், கம்போதியா, சம்பா, லாவாஸ் என்பனவாம். இவற்றில் சிங்களத்தை, சோழ மண்டலத்திலும் பாண்டிய நாட்டிலும் நாகரிகம் மிக்க மாகாணம் என்றே சொல்லலாம். அந்தத் தீவிலே பௌத்தர்கள் அநேகர் இருப்பினும், ஹிந்துக்களும் தமிழரும் அநேகர் உளர். அங்குள்ள கட்டடங்கள், பெரும்பாலும் இந்திய ஸ்தபதி (கட்டடக் கலைஞர்)களாலும், வார்த்திகர் (கொத்த மேஸ்திரி)களாலும், தச்சர்களாலும் நிருமிக்கப்பட்டன. மகாபலிபுரம், காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, கொற்கை, அவந்தி, சாஞ்சி, தாம்ரலிப்தகம், பாடலீபுரம் முதலிய இந்திய நகரங்களிலிருந்து சிற்பிகளும் ஓவியர்களும் அவ்விடம்போய், பௌத்த விஹாரங்களையும் ஸ்தூபங்களையும் பள்ளிகளையும் அலங்கரித்ததாக, நமக்குச் சரித்திர மூலமாய்த் தெரியவருகிறது. இவ்வுண்மையைப் புஸ்தகங்கள் எடுத்துரைப்பது மாத்திரமன்றி, அநேகம்

சிற்ப வேலைகளிலும் இது செதுக்கிச் சித்திரிக்கப்பட்டு ருசுவாகின்றது

காளிதாஸ கவியின் மேகஸந்தேசத்தைப் படித்துள்ளோர்க்கு விதிசா நகரத்தின் வருணனை நினைவிருக்கும். பௌத்த சங்கத்தினருக் கெல்லாம் மெய்ஞ்ஞான ஒளிபோல் இலங்கிய சாஞ்சி என்னும் பெரிய நகரம், விதிசாவின் அருகேயிருந்தது. சிங்களத் தீவிலே புத்த ஞாயிற்றின் ஒளி விளக்கை ஏற்றிய மாவிந்தனும் சங்கமித்திரையும், சாஞ்சியிலிருந்துதான் அங்கே சென்றனர். அசோக சக்கரவர்த்தி, தன் ஆட்சியில் நிகழ்ந்த இரண்டாவது சிரமண தரும சங்கம் முடிந்தபின், வெளி நாடுகளுக்குத் தரும தூதர்களை அனுப்ப விரும்பி, தன் மகன் மாவிந்தனையும், தன் மகள் சங்கமித்திரையையும், சிங்களத்தீவுக்கு அனுப்ப நிச்சயித்தார். அப்பால் அவர்களோடும் சதுரங்க சைநியங்களோடும், அவர் புத்தகயாவை அடைந்து, அங்குள்ள ஞான ஜோதியின் பீடமாகிய போதி விருக்ஷத்தைப் பிரார்த்திக்க, அதன் கிளைகளில் ஒன்று தானு முறிந்து, அசோகன் கையிலிருந்த தங்கப் பாத்திரத்தில் வந்து விழுந்தது. அதைத் தன் குழந்தைகளிடம் ஒப்படைத்து, ஆசி கூறி, அவர்களைச் சிங்களம் அனுப்பினர் அசோகர். மாவிந்தனும் சங்கமித்திரையும் நிருமித்தத் தர்மப் பாலத்தின் வழியே, அது முதல் சிங்களத்துக்கு இந்தியர் அநேகர் செல்வாராயினர். புத்தகயைப் போதிமரத்தின் கிளையை, இலங்கையில் அநுராதபுரத்திலே பச்சென்த் தழைத்தோங்கும் அரசமரமாக, இன்னும் காணலாம்.

அசோகர் சிங்களம் அனுப்பிய தர்ம தூது.

புத்தமதமோ, ஆலமரத்தின் கிளைகள் போலும் விழுதுகள் போலும் சிங்கள முழுதும் பரவா நின்றது.

சாவக நாட்டுக்குத் தமிழர்களின் கப்பல்கள் அடிக்கடி போய் வந்தமை, மணிமேகலையால் விளங்குகின்றது. அந்நாள் முதல், இரண்டு தீவுகளும் ஏழு மாகாணங்களும் அடங்கிய சாவகநாட்டில் நம்மவர் குடியேறலாயினர். அந்தணரும் எட்டிகளும் இக் குடியேற்றத்தின் தலைவராயிருந்தனர். அக் காலத்து அந்தணர்கள் இக் காலத்தவரைப்போல் பயங்காளிகள் அல்ல; சிலர் ஏச்சுபடி, "அன்னக்காவடி"களு மல்ல. பாலித்தீவிற் குடியேறிய பின், போர்நியோ சென்று, அதன் கிழக்கு முனையில் ஆண்டு வந்த மூலவர்மன் என்னும் அரசனைக் கைவசப்படுத்திக்கொண்டு அவன் மூலமாய் ஒரு பெரிய சோமயாகம் செய்தனர். அந்தச் சடங்கு முடிந்தவுடன், மூலவர்மன் பிராமணர்களுக்கு அநேகம் நன்கொடைகள் அளித்தான். அவற்றில் ஒன்று, நல்ல ஆடகத்தால் செய்த ஒரு கற்பக விருக்ஷம். இவை யாவும் மூலவர்மராஜன் நிறுத்திய வேள்வித் தூண் (யஜ்ஞ ஸ்தம்பம்) களால் நமக்குத் தெரிய வருகின்றன. இத் தூண்களில் பொறித்திருக்கும் எழுத்துக்கள் தென்னிந்தியாவில் வழங்கும் கிரந்த லிபிகளே. இது நடந்த காலம் கி. பி. சுமார் 400–500 ஆக இருக்கலாம். இவைகளிலிருந்தும், சாவக நாட்டிலுள்ள பெரிய புத்தர் கோவில், பிராம்பணம் சிவன் கோவில், பஞ்ச பாண்டவர் கோயில்கள், ஸ்ரீகண்டேசுவரம், சேவா, மாந்தாதா டியங்கங் மாகாணம் முதலியவற்றி லுள்ள கோவில்களின் சிற்ப வேலைகளி லிருந்தும், நம்மவர் பெரு முயற்சியும் சிற்பத் திறமையும் நன்கு விளங்குகின்றன. பிறகு கி. பி. பதினோராவது நூற்றாண்டிலே, சாவகத்தில் முஸ்லீம் மார்க்கம் வந்து சேர, அவ் விடத்தில் நமது வேலைகள் நின்றுவிட்டன.

இப்பொழுது சுமார் 100 வருடங்களாக, நமது செட்டிமார்கள் அவ்விடம் போய் உண்டியல் கடைகள் நடத்தி வருகிறார்கள். மறுபடியும் நாம் சிரமமெடுத்தால், அத்தீவு நமது மதத்திற்குத் திரும்பலாம். இவ் விஷயத்தில் காஞ்சி காமகோடி பீடத்தில் விளங்கா நிற்கும் மெய்ஞ்ஞான வடிவான ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் எடுத்துவரும் முயற்சி அளப்பரிது.

கி. மு. முதலாவது நூற்றாண்டிலே, கம்போதியா நாட்டிற்கு நம்மவர் செல்லத் தலைப்பட்டனர். அங்கே அவர்கள் செய்திருக்கும் கோயிற் சிற்ப வேலைத் திறமைகளைப் பார்த்தால், ஆச்சரியப்பட்டு மூக்கில் கை வைபாதவர்களும் உளரோ? இராமேசுவரம் இராமநாதஸ்வாமி கோவில் போலும், மதுரை மீனாக்ஷியாலயம் போலும், எத்தனை ஆலயங்கள் அங்கே உள! இவைகளில் முக்கியமானவை, பாண்டை சமாவிலும், யசோதரா புரத்தைச் (Angkor)

சுற்றிலும், ஆகாயத்தை அளாவி இன்னும் நிற்கின்றன. இவற்றிற்
காணும் சித்திர வேலைத் திறமையை என்னென்று சொல்வது
இராமாயணமும் மஹா பாரதமும் புராண கதைகளும் இக் கோயில்
களின் சுவர்களில் பொலிகின்றன. கோயிற் பிராகாரங்களில் வலம்
வர வலம் வர, காண்பன வெல்லாம் நம்ம ஊர்ச் செய்திகளே, நம்ம
ஊர்ச் சிற்பிகளின் கைத்திறமையே. இவையன்றி, இச் சுவர்
களில், பதிசிற்ப (Sunk Sculpture) வேலையில், எவ்வளவு அழகாயும்
விசித்திரமாயும் அற்புதமாயும் நடனமாடும் ஆடற் கணிகைகள்
சித்திரிக்கப்பட் டிருக்கிறார்கள்! அவர்களுக்குச் சுவாசம் மாத்திரம்
இல்லை; அவர்கள் மூக்கும் விழிகளும், அனுமியர் முகச் சாய
லாக, கொஞ்சம் சப்பையாய் இருக்கின்றன. இவற்றை யெல்லாம்
நாம் அறியாம லிருப்பது என்ன பரிதாபம்!

விகட விநோதம்

இராசாவும் கோமாளியும்

இராசா—என் உள்ளங்கைகளில் ஏன் மயிரில்லை?

கோமாளி—வெள்ளியும் தங்கமும் வாரிவாரிக் கொடுத்துக்கொண்டே யிருந்தால், எப்படி மயிர் முளைக்கும்?

இராசா—உன் கைகளிலும் இல்லையே?

கோமாளி—நான் வாங்கிக்கொண்டே யிருக்கிறேன்.

இராசா—மற்றவர் உள்ளங்கைகளிலும் மயிரில்லையே?

கோமாளி—தங்களிடத்தில் தானம் வாங்காதவர் இந்த ராஜ்யத்தில் யாரிருக்கிறார்கள்?

இராசா—அயல் ராஜ்யங்களில் உள்ளவர்களோ?

கோமாளி—'இந்த தானங்களை வாங்கும் பாக்கியம் நமக் கில்லையே' என்று மனம் வருந்தி, அவர்கள் கைகளை உதறிக்கொண்டே யிருக்கிறார்கள்; அதனால் தான், அவர்கள் கைகளில் மயிரில்லை.

இராசா—பேஷ் கோமாளி! அடே பொக்கிஷதார்! கோமாளிக்குச் சன்மானங் கொடுக்க நூறு மோஹரா கொண்டுவா.

2. வீரபாலன் யுக்தி

டில்லி பாட்சா,—தன் சபையோரைப் பார்த்து: 'நேற்று ஏன் பூகம்பம் உண்டாயிற்று'' என்று கேட்டார். அப்போது உலீமா ஒருவர் எழுந்து: "மகாப்ரபோ! இந்தப் பிராமணர் வீரபாலர், தான் வெகுமேதாவி, எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று, எப்பொழுதும் வீம்பு பேசுகிறாரே; அவரையே கேளுங்கள்'' என்றார்.

பாட்சா—நீர் என்ன சொல்கிறீர்?

வீரபாலர்—மகாப்ரபோ! பிராம்மணர்கள் செத்தால் சுட்டுவிடுகிறார்கள்; எங்கள் ஆத்மா புகைவழியே மேலே செல்கிறது; அதனால் ஆகாயத்துச் சங்கதிகளெல்லாம் எங்களுக்குத் தெரியும். முஸ்லீம்கள் செத்தால், பூமிக்குள் புதைக்கிறார்கள்; அதனால், பூகம்ப விஷயம், உலீமாக்களுக்கே தெரிய வரும்.

"பாலகிருஷ்ணன்"

1. புத்தி உள்ள நாய்.

ஒரு காலத்தில் ஒரு நாய் வியாபாரி, தன் சொந்த ஊரைவிட்டு, 27 மைல் தூரத்தில் உள்ள மற்றொரு ஊருக்குப் போனான். அவன் தனக்கு மிகவும் பிரியமான ஒரு சின்ன நாயை மட்டும், தன்னுடன் கூட்டிக்கொண்டு போனான். அவன் போன இடத்தில், வேறு ஒரு பெரிய நாய் இருந்தது. அது, அந்தச் சின்ன நாயை மிகவும் தொந்தரை செய்தது. அன்றை இராத்திரி, அந்தச் சின்ன நாய் ஓடிப்போய் விட்டது. எங்கே தேடினாலும், அது அகப்படவில்லை. ஐந்து நாட்கள் கழித்து, அந்தச் சின்ன நாய், ஒரு பெரிய நாயைக் கூட்டிக்கொண்டு வந்தது. அந்தப் புதுநாய், முன்னால் சின்ன நாயைக் கடித்த நாயின் மேல் பாய்ந்து, அதைக் கடித்து, தொந்தரை செய்தது. பிறகு, புதிதாய் வந்த நாய் போய்விட்டது.

நாய் வியாபாரி, விசாரித்துப் பார்த்ததில், அந்தச் சின்ன நாய், தன்னைத் தொந்திரவு செய்த நாயைக் கடிப்பதற்கு என்றே அந்தப் பெரிய நாயைக் கூட்டிக்கொண்டு வந்தது என்பதைத் தெரிந்துகொண்டான். அந்தப் பெரிய நாய், அவன் வீட்டில் விட்டுவந்த நாய்களில் ஒன்று; சின்ன நாயின் சிநேகிதன்.

2. குதிரை மனிதனுக்கு அடிமையானது

ஒரு குதிரை, ஒரு வயலில் தினம் மேய்ந்து வந்தது. அந்த வயல், தன்னுடைய ராஜ்யம் என்று அது நினைத்தது. ஆனால் ஒரு நாள், ஒரு மான் அங்கே மேய வந்துவிட்டது. அதனால், குதிரை, மானிடத்தில் பொறாமை கொண்டது. மானுக்கு நீளமான கொம்புகள் இருந்ததனால், அதனிடத்தில் சண்டைக்குப் போக முடியவில்லை. பிறகு குதிரை ஒரு மனிதனிடம் போய், மானைக் கொல்லச் சொல்லி கேட்டுக்கொண்டது.

அந்த மனிதன்: "மான் வேகமாக ஓடுமே; என்னால் ஓட முடியாதே; நீ தூக்கிக்கொண்டு ஓடினால்தான், நான் மானைக் கொல்ல முடியும்" என்று சொன்னான். குதிரை அதற்குச் சம்மதித்தது.

மனிதன், குதிரை மேல் ஏறி, மானை வேட்டையாடிக் கொன்றான். ஆனால், குதிரை, அன்றுமுதல் மனிதனுடைய அடிமையாகி, அவனைத் தூக்கிச் சுமக்க வேண்டியதாயிற்று.

சுப்பிரமணிய பாரதியார் கவிதை

சிவி. மா. அனந்த நாராயணன், சென்னை.

கிரேக்க கவிவாணரான ஹோமர் இறந்த பின், அவர் பிறப்பிடத்தைப் பற்றி, ஏழு நகரங்கள் தம்முள் போராடின என்றும்; உயிருடன் இருந்தபோதோ, அவர் பிச்சை வாங்கித்தான் பிழைக்கவேண்டிய தாயிற்று என்றும், ஒரு வசனமுண்டு. பொருமையினாலோ, மாமி மருமகள் என்னும் இயற்கை விரோதம் பற்றியோ, வாணி கடாக்ஷத்தை அடைந்தவரைத் திருமகள் ஆதரிப்ப தில்லை என்பது, பெரும்பாலும் உண்மைதான். ஆயினும், புலவரின் அடங்கா நாவுக் கஞ்சியும், அவர் கவித்திறனை வியந்தும், தமிழ் நாட்டு மன்னர்கள், முன் காலத்தில் பெயர்போன பாவலர்களுக்கு வள்ளல் களா யிருந்தனர். அப்படிப்பட்ட நாட்டிலே, தேசியப் புலவரான ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார், உயிருள்ள மட்டும், பலர் உபேக்ஷைக்கும் சிலர் வெறுப்புக்குமே ஆளாயினர் என்பதைக் கவனித்தால், இது கலியின் கொடுமை என்றே தோன்றும். அவர் காலஞ்சென்ற பிறகாவது, பொதுவாய் மதிக்கப்படுவதைக் கண்டு தான், நாம் ஒருவகையான ஆறுதல் கொள்ளவேண்டும்.

அவர் பாடிய சுதேச கீதங்கள், பாமர ஜனங்களின் நாவில், எக் காலத்திலும் நிலை நிற்கும்; மற்ற மத சம்பந்தமான செய்யுட் களின் அருமை, பக்தி மிகுந்தவர்க்குப் புலப்படலாம்; இவ்விரு தலைப்பினும் அடங்காத பாக்கள், வாசிப்போர் மனப்போக்கின்படி மதிக்கப்படும்; எல்லாவற்றையும் ஒருங்கே சீர்தூக்கிப் பார்க்க முயன்றால், அபிப்பிராய பேதங்கள் விளைகின்றன.

> "குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
> மிகை நாடிமிக்க கொளல்"

என்ற விதி, எல்லா இலக்கிய மதிப்புக்கும் பொருத்தமானது. ஆனால், ஒரு சாரார், 'குற்றம் என்பதைப் பாரதியார் கவிதை யில் காணமுடியாது; அவர் தெய்விகப் புலவர், கம்பருக்கும் சங்கப் புலவர்களுக்கும் ஒப்பானவர்' என்று, வழக்காடுகின்றனர். பாரதியார் கவி வல்லமையையும், அது 'மன உற்சாகத்தினால்

பிறந்ததே யன்றி, வெறும் பாண்டித்தியத்தினுல் பிறந்த தில்லை என்பதையும், ஒருவரும் மறுக்க வில்லை; எனினும், அவர் கவிதை பலதிறப்பட்டது என்பதை மறந்துவிடக்கூடாது. அவர் கவிகள், சில வேளைகளில், வெகு அழகாயிருக்கும்; சில வேளைகளில், அதிசாதாரணமாய் இருக்கும்; இதனுல், பாரதியார், தனக்குள்ள அரியபெரிய இயற்கை வன்மையை, முயற்சியினுல் ஏற்றவாறு விருத்தி செய்ய வில்லை என்றெண்ணவும் இடம் இருக்கிறது. கவித்திறன், கால்வாசி பிறப்பில் அமைவது, முக்கால்வாசி, இடைவிடாத உழைப்பினுல் பெறப்படுவது. உற்சாகம் அளிப்போர் ஒருவரும் இல்லாமற்போனதே பாரதியாரின் முயற்சிக் குறைவுக்குக் காரணமா யிருக்கலாம். மேற் கூறியவற்றுல், அவர் கவிகளில் "குற்றம் நாடும்" அவசியம் ஏற்பட்டிருப்பது விளங்கும்; அவற்றைப் படித்து அநுபவித்தவர்களுக்கு, 'எந்தத் தன்மை மிகுந்தது' என்று கூறவேண்டிய தில்லை.

பாராதியார் கவிதையின் முதற் "குணம்" யாதெனில், புதுமை என்னலாம். தமிழ் இலக்கியத்திலே, அவர் நடை புதிது; நோக்கம் புதிது; ஆனுல், காலத்திற் கேற்ற நடையும் நோக்கமுமே. ஐம்பது வருஷங்களுக்குமுன் பாரதியார் வாழ்ந்திருந்தால், இவ்வாறு பாடி யிருக்கமாட்டார் என்பது நிச்சயம். ஏனெனில், அப்பொழுது, நம்மவர் சுதந்தர தாகத்தால் வருந்த வில்லை ; ஆங்கிலக் கல்வியினுல் உண்டான விரிந்த மனசும் அடிமை நிலை வெறுப்பும் தலை கிளம்பி யோங்க வில்லை. பாரதியார், காலத்தைச் சிருஷ்டிக்க வில்லை; காலம் தான் அவர் மனப்போக்கைச் சிருஷ்டித்தது.

கம்பராமாயணத்தின் ஒரு சிறு வரியினின்றும், இந்திற்கு மேற்பட்ட பொருள்களைப் பிழிந்துகொள்ள முயலும் புலவர்கள் மலிந்த நாட்களிலே, 'இலக்கண நடை' என்றும், 'செய்யுள் நடை' என்றும் எண்ணி, உருமறைந்து அகராதியில் மட்டும் காணும் சொற்களைப் பேச்சிலும் கவிகளிலும் புகுத்தும் பலர் பொலிந்த நாட்களிலே—

"பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே – வெள்ளைப்
பரங்கியைத் துரை என்ற காலமும் போச்சே"

என்று பாடத் துணிந்தவர், புது நடையைக் கையாண்டார் என்று சொல்லவும் வேண்டுமோ? பாரதியார் சகஜீவி எனலாகும் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையின் ஆயிரக்கணக்கான பாட்டுக்களின் நடையையும், பாரதியார் செய்யுள் நடையையும், ஒத்து நோக்கினுல் ஏற்படும் வேற்றுமையை, எவருமே கவனியாமலிருக்க முடியாது.

தமிழ் இலக்கிய வளர்ச்சியின் பிற் பாகத்தில்தான், இயற்கை அழகுகளையும் உண்மைகளையும் அமைக்காமல், அதி சாதுரிய

மான இல்பொருள் உவமைகளையும், அதிசயோக்திகளையும், எதுகை மோனைகளையும், சித்திரகவிகளையும் பெருக்கி, உயிரற்ற நூல்களைத் தமிழ்ப் புலவர் பாடிக் குவித்தார்கள். சிலப்பதிகாரத்துக் கானல்வரிப் பாட்டுக்களையும் நைடதச் செய்யுள்களையும் ஒன்றின்பின் ஒன்றாய் வாசித்துப் பார்த்தால், இதன் உண்மை, கையகத்து நெல்லிக் கனிபோல் விளங்கும். எல்லாவகையிலும் சிறந்த முந்திய பழைய நடையை மீண்டும் கையாளும் கிளர்ச்சி உண்டாகுமாயின், பாரதியாரே அதன் வழிகாட்டியாயும் தீர்க்கதரிசியாயும் கருதப்படுவர்.

பாரதியார் ஒரு தமிழ்ப் பண்டிதர். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற சூத்திரத்தைப் பல்முறை படித்தும், அதன் உண்மையை பண்டிதர்கள் சாதாரணமாய் ஒத்துக்கொள்வதில்லை. பாரதியாரோ, புதிய நோக்கங்களைத் தழுவியே பாடினார். இதற்கு உதாரணம் தேடுவது மிக எளிது. ஆங்கிலத்தில் அதி பாண்டித்தியம் பெற்றுள்ள எத்தனை இந்தியர், பெண்களின் உரிமைகளைப் பற்றி மனுவின் அபிப்பிராயத்தை மறுக்கின்றினர்? பாரதியாரோ :—

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம் ;
பூணும் நல்லறத் தோடிங்கு பெண் உருப்
போந்து நிற்பது தாய் சிவ சக்தியாம்;
நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் ;
ஞானம், நல்லறம், வீர சுதந்தரம்,
பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம் ;
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டிரோ!"

என்று கூறுகிறார். "புதிய ஆத்திசூடி"யில், "சோதிடம் தனை இகழ்" என்றும்; "ஊண் மிக விரும்பு" என்றும்; வேறு,

"கடமை புரிவார் இன்புறுவார்
என்னும் பண்டைக் கதை பேணோம் ;
கடமை யறியோம் ; தொழிலறியோம் ,
கட்டென்பதனை வெட்டென்போம் ;
மடமை, சிறுமை, துன்பம், பொய்,
வருத்தம், நோவு, மற்றிவை போல்
கடமை நினைவும் தொலைத்திங்கு
களியுற் றென்றும் வாழ்குவமே." என்றும் பாடியிருக்கிறார்.

இந்தக் கருத்துக்கள் தமிழ் இலக்கியத்திற்கு முற்றிலும் நூதனமானவை.

"வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம்" என்று, இக சுகத்தை வெறுத்துப் பாடிய கவிகள், தமிழில் கணக்கில்லாமல்

இருக்கின்றன; ஆனால், பாரதியார், தன் குல தெய்வத்திடம் மன்றாடி இரந்த வரங்களைக் கேளுங்கள் :—

“ காணி நிலம் வேண்டும்—பராசக்தி, காணி நிலம் வேண்டும்—அங்கு,
தூணில் அழகியதாய்—நன் மாடங்கள்—தூய்ய நிறத்தினதாய்—அந்தக்,
காணி நிலத்திடையே—ஓர் மாளிகை—கட்டித்தர வேணும்—அங்கு,
கேணி யருகினிலே—தென்னைமரக்—கீற்றும் இளநீரும்,
பத்து பன்னிரண்டு—தென்னைமரம்—பக்கத்திலே வேணும்—நல்ல
முத்துச் சுடர்போலே—நிலா வொளி—முன்புவர வேணும்—அங்கே
கத்துங் குயிலோசை—சற்றே வந்து—காதிற் படவேணும்—என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே—நன்றாயிளம்—தென்றல் வரவேணும்
பாட்டுக் கலந்திடவே—அங்கே ஒரு—பத்தினிப் பெண் வேணும்—எங்கள்
கூட்டுக் களியினிலே—கவிதைகள் கொண்டு தரவேணும்—அந்தக்
காட்டு வெளியினிலே—அம்மா! நின்றன்—காவலுறவேணும்—என்றன்
பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்—பாலித்திடவேணும்.”

நமது நாட்டில், வேறெந்த அம்சத்தில் குறைவிருந்த போதிலும், மூட நம்பிக்கைகளுக்குக் குறை வில்லை. நம் ஏழை ஜனங்கள் ‘சூன்யம்’, ‘பேய்’, ‘ஆவேசம்’, ‘மாரியம்மன்’ முதலிய நம்பிக்கைகளால் மிகத் துயரப்பட்டு, ‘காலரா’ போன்ற கொடிய தொற்று வியாதிகள் நேரிட்டால், அவைக் கேற்ற சுகாதார விதிகளை அநுசரிக்காமல், ‘மாரியம்மனுக்கு’ப் பூசை புரிந்து, ஆயிரக் கணக்காய் மடிகின்றனர். செவ்வையாய்க் கல்வி பயின்றவரும், ஆங்கிலப் பட்டங்கள் பெற்றவரும் கூட, எப்படியாவது தம் மூட நம்பிக்கைகளைப் பௌதிக ரஸாயன சாஸ்திர விதிகளின் படி சமரஸப்படுத்தி நிரூபிக்க முயல்கின்றனர். இவ்வித முயற்சிகள், நகைப்புக்கே இடமாகின்றன வென்பதை, நாம் சொல்லவேண்டாம். நமது தேசியக் கவியோ, மூட நம்பிக்கைகளைப் பரிதபிக்கத் தக்க விஷயங்களாகவே எண்ணினார். தமிழ்ப் புலவருள், இவற்றைக் கண்டித்தவர், இவர் ஒருவர்தான் எனக லாம். உதாரணங்களாக, “பாரத ஜனங்களின் தற்கால நிலைமை” என்ற சிந்தில்,

“ வஞ்சனைப் பேய்கள் என்பார்—இந்த
மரத்தில் என்பார்; அந்தக் குளத்தில் என்பார்;
அஞ்சுவது முகட்டில் என்பார்—மிகத்
துயர்ப்படுவார், எண்ணிப் பயப்படுவார்” என்றும்;
“ மந்திரவாதி யென்பார்—சொன்ன
மாத்திரத்திலே மனக்கிலி பிடிப்பார்,
யந்திர சூனியங்கள் இன்னும்
எத்தனை ஆயிரம் இவர் துயர்கள்!”

என்றும், இவர் பாடியிருப்பதைப் பாருங்கள். தான் பிராமண குலத்தில் பிறந்தும், தீண்டாச் சாதியாரின் மீது, இவர், மெய் யுன் புடையவரா யிருந்தார். அச் சாதியாரின் நிலைமை மற்ற

ஹிந்துக்களுக் கொரு தொலையாப் பாவ மென்றும், தெய்வத்துக் குப் பழி யென்றும், இவர் உணர்ந்தவர். பறையர், குறவர், மறவர் முதலியோர்மீது அநுதாபப்பட்டுப் பாடிய தமிழ்ப் புலவர், இவர் ஒருவர்தான். இவர்க்கு முன், வேறெவ்விதச் சிறப்புமில்லாத ஒரு 'தேசிகர்' மாத்திரம் :—"பறைச்சியாவ தேதடா? பணத்தியாவ தேதடா? இறைச்சி, தோல், எலும்பினுள் இலக்கமிட் டிருக்குதோ?" என்று பாடி யிருக்கிறார். பாரதியார் :—

"பறையருக்கும், இங்கு தீயர், புலையருக்கும் விடுதலை!
பறவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை!" என்றும்;
"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்;
விழலுக்கு நீர் பாய்ச்சி மாயமாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓயமாட்டோம்" என்றும்;

"மறவன் பாட்டில்"

"போரசைக்காரனடா பார்ப்பான்—ஆனால்
பெரியதுரை என்னில் உடல் வேர்ப்பான்"......
"பிள்ளைக்குப் பூணூலாம் என்பான்—நம்மைப்
பிச்சுப் பணங்கொடெனத் தின்பான்"......
"நாயும் பிழைக்கு மிந்தப்பிழைப்பு
நாளெல்லாம் மற்றிதிலே உழைப்பு,
பாயும் கடிநாய்ப் போலீசுக்—காரப்
பார்ப்பானுக் குண்டிதிலே பீசு" என்றும்,

பாடியுள்ளார். ஆகையால், இந்தக் 'குணமும்' அவர் கவிதை யில் ஒரு 'புதுமை' யாகும்.

எல்லாத் தெய்வங்களையும் வேற்றுமை யின்றி வழிபடுதல் தமிழ்ப் புல்வர்களுக்குள் அசாதாரண மல்ல. பல நூல்களில் ஏக தெய்வ வாதமாகும் செய்யுட்களைக் காணலாம். ஆனால், ஒரே மூச்சில் விநாயகரையும், கிருஷ்ணனையும், முருகனையும், காளியை யும், அல்லாவையும், யேசுவையும் துதித்த தமிழ்ப் புலவர், பாரதி யார் ஒருவர்தான் என்று, சந்தேகமில்லாமல் சொல்லலாம்.

(தொடரும்)

பத்திராதிபர் தபாற் பெட்டி

இராயப்பேட்டை
26—4—25.

"பஞ்சாமிர்தம்" பத்திராதிபர்வர்களுக்கு.

ஐயா,

ஸ்ரீமாந் சோமசுந்தர தேசிகரவர்கள் 'அறுபத்துமூவர்களின் காலம்' என்பதிலுள்ள சில பிழைகளை எடுத்துக்காட்டி எழுதின கடிதத்தை எனக்கு அனுப்பியதற்கு உங்களுக்கு என் வந்தனங்களைச் செலுத்துகின்றேன்.

தேசிகர், அக்கடிதத்தில் மூன்று தப்புக்களை எடுத்துக்காட்டுகிறார் (1) சேக்கிழார் கால ஆராய்ச்சியைப் பற்றி, குமரன் பத்திரிகையில் தேசிகர் எழுதியிருக்கிறதை நான் படிக்கவில்லை இதைப்போலுள்ள விஷயங்களில், தீர்மானமாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை(2) திருமுறை கண்ட கதையைப்பற்றி யோசித்தால், பல கேள்விகள் எற்படும் என்றேன். அக்கேள்விகளுக்கு நேராகவிடைகள் கொடுக்காமற் போனாலும், என் அபிப்பிராயங்கள், நான் எழுதியிருக்கிறதை வாசிப்பவர்களுக்கு, புலப்படும். திருமுறை கண்ட கதையையும், தேவாரம் எழுதி வைக்ரப்பட்டிருந்ததென்றும், நானே எழுதியிருக்கிறேனே. சம்பந்தர் தன்னிடத்தில் இருந்த தேவாரத் தொகுதிச் சுவடியினின்று திருநள்ளாற்றுப்பதிகத்தை எடுத்துத் தீயிலிட்டார் என்றதை தெரியாதோ? சுந்தரர் காலத்திற்கு முன்னிருந்த, தமிழ்க் கல்வெட்டுக்களில்லையா? (3) கலிக்காமன், விறன்மிண்டன் கதைகளை விஸ்தரிக்க, அது இடமன்றென்று விட்டுவிட்டேன். எனக்கு முக்கியமானது, சுந்தரரும் இவ்விருவர்களும் ஒரே காலத்தவர்கள் என்பதே. இம்மூவர்களின் பரஸ்பரசம்பந்தத்தை இரண்டு சிறுவாக்கியங்களில் சொல்லுமளவில், இப்பிழை நேர்ந்தது. இந்தக் கடிதத்தைப் பார்ப்பதற்கு முந்தி, இப்பிழையை நானே கவனித்தேன்.

தங்கள்,

கே. ஆர். சுப்ரமணியன்.

மொழிபெயர்ப்புப் பகுதி

பின்வரும் ஆங்கில மொழிகளுக்குச் சரியான தமிழ்ச் சொற்கள், அல்லது, தமிழருக்கு எளிதில் பொருள் விளங்கவல்ல ஸம்ஸ்கிருத பதங்களை, எழுதியனுப்பி உதவிபுரிய, வாசகர்களை வேண்டுகிறேன். ஒவ்வொரு காசிலும் ஒரு சிறு பாகம் இதற்காக விடப்படும்:—

Act, Adventure, Bill, Constitution, Department, Denominational, Energy, Federation, Freedom, Hope, Humour, Ideals, Idealism, Imperialism, Institution, Liberty, Monism, Nationalism, Political, Politician, Potentiality, Problem, Pantheism, Ritualism, Socialism, Spirituality, Statesman, System, Sexual, Symbolism, Utilitarianism, Wit.

பரிசுகள்

I. பொதுப் பரிசு—ரூ. 5-8-0 விலையுள்ள பஞ்சாமிர்தம் முதன் மாலை-கில்டு பைண்டிங் செய்தது-1076-பக்கங்களும் 130-படங்களும் அடங்கிய நவரசக் களஞ்சியம்-ஒரு பிரதி-விஷயம்—"தமிழ் நாட்டிலே சாதிப் பகைமையை நீக்கி ஒற்றுமையை வளர்க்கும் வழிகள்."-அளவு—அச்சடித்தால், பத்திரிகையில் 4-பக்கத்துக்குக் குறையாமல், 6-பக்கத்துக்கு மேற்படாம லிருக்க வேண்டும். காலவறுதி—10-6-1925க்குள் பத்திராதிபர் கைக்கு வரவேண்டும்.

II. சந்தாதார்க்கு மட்டும் விசேஷப் பரிசு—ரூ. 2 விலையுள்ள தமிழ்ப் புஸ்தகங்கள். விஷயம்—சிறுவர் பகுதிக் கேற்ற ஒரு சிறு கதையும், அதற்குப் பொருந்திய படமும்; படம் இந்தியன் இங்கில் வரையப்படவேண்டும். அளவு—இரண்டு பக்கத்துக்குள். காலவறுதி—28-5-1925க்குள் பத்திராதிபரை எட்டவேண்டும்.

புதிய வருஷ விளம்பரம்

இந்தக் காசு முதல், பத்திரிகையின் அளவு பெருகியது மன்றி, (1) சிறுவர் பக்கம், (2) மாதர் பகுதி, (3) 'பத்திராசிரியர் தபால் பெட்டி' முதலிய பகுதிகள் புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 'தபாற் பெட்டி'க்கு எழுதுவோர், சுருக்கமாய்த் தெளிவாய் எழுதுக; ஏற்ற வினாக்களுக்கு, எனக்குத் தெரிந்தவரை, விடையளிக்க முயலுவேன். கைம்மாறு கருதாத தமிழறிவாளரின் விசுவாசத்தை வேண்டுகிறேன். கட்டுரைகளும் கடிதங்களும், காகிதத்தின் ஒரே புறத்தில் மையினால் எழுதப்படவேண்டும்; ஏற்றுக்கொள்ளப் படாதவற்றைத் திரும்பப் பெற விரும்புவோர், அதற்கு வேண்டிய தபால் முத்திரைகளும் அனுப்புக.

பத்திராதிபர், "பஞ்சாமிர்தம்"

மாதர் பகுதி

ஹிந்து ஸ்திரீகள்

(ஓர் இந்திய ஸ்திரீ எழுதியது.)

முன் கால ஸ்திரீகளைப் பற்றிப் படித்துத் தேர்ந்த பெரியோர்கள் சிலர், நான் சின்னவளா யிருக்கும் பொழுது சொன்னதிலிருந்தும், கதைகளிலிருந்தும், அந்தக் காலத்தில் தாயார் தகப்பனார்கள் குழந்தைகளை எப்படி வளர்த்துப் படிப்பித்தார்கள் என்பதை அறிந்தேன். இந்தக் காலத்துப் பெண்களைப்போல் எனக்கு நன்றாய்ப் படிக்கவும் எழுதவும் தெரியாது. நான், எழுதும் வன்மையும் பேசுஞ் சாமர்த்தியமும், இல்லாதவள். ஆயினும், இந்தக் காலத்துப் பெண்களைப் படிப்பிக்கும் 'விதத்தையும், குடித்தனம் பண்ணப் பழக்கும் விதத்தையும் 'பற்றி, அப்படிப் படிப்பிக்க வேணும், இப்படிப் பழக்க வேணும்' என்றும்; 'இப்பொழுது பெண்களின் படிப்புக் கெட்டுப் போயிருப்பதினால், அப்படி நடக்கிறார்கள், இப்படிப் படிக்கிறார்கள்' என்றும் சொல்வாரையும், வியாசங்கள் எழுதுவாரையும் பார்த்தபின், எனக்குத் தெரிந்ததைச் சொல்ல எனக்கும் சுதந்திரம் உண்டு என்று தோன்றுவதினால், இதை எழுதுகிறேன்.

முன் காலத்தில் தங்கள் குழந்தைகளைத் தாய் தகப்பன்மார்கள் எப்படி வளர்த்தார்கள் என்றால்:—புருஷக் குழந்தைகள், ஐந்து வயதுமட்டும் ஆடி ஓடி விளையாடுவார்களாம்; ஐந்து வயது ஆனபிறகு, தெருத்திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அரிச்சுவடி எண்சுவடி இவைகளைக் கற்பார்கள்; பத்துப் பன்னிரண்டு வயதானபின், சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்த நல்ல குருவினிடம் படிக்க அனுப்பப்படுவார்கள்; அவர் குருவாகவும் தான் சிஷ்யனாகவுமிருந்து, அவர் சொல் தட்டாமல், பயபக்தியுடன், சாஸ்திரங்களும் சன்மார்க்க வழிகளும், பெரியவர்களை ஆதரிக்கும் முறைகளும், நல்ல நடத்தையும், கிரகஸ்தனாயிருக்க வேண்டிய முறைகளும், எல்லாவற்றையும் இருபத்தைந்து வயதுவரையில் கற்பார்கள். குருவாகப் பார்த்து, "இவன் படித்தது போதும், நன்றாய்ப் படித்து, அதன்படி நடக்கிறான்; இதுவரையில் பிரமசரியம் சரி

யாய் அனுஷ்டித்திருக்கிறான். கிரகஸ்தனாக யோக்கியதை உள்ளவனாயுமிருக்கிறான்" என்று சொல்லி அனுப்புவர். பிறகு, அவன் தாய் தகப்பன்மார், தங்களுக்கும், தங்கள் குலத்துக்கும் தகுந்த பெண்ணைப் பார்த்துக் கலியாணம் பண்ணிவைப்பார்கள். பெண்களாய்ப் பிறந்தால், விளையாடும் குழந்தையா யிருக்கும்பொழுது விளையாடி, ஆறு ஏழு வயதான பின், வீட்டிலேயே படிப்பது, கோலம் போடுவது, வீட்டில் பெரியவர்கள் சொன்னபடி கேட்பது, சின்னச் சின்ன பூஜை பாத்திரந் தேய்த்துப் பூஜைக்கு எடுத்துவைப்பது, சின்னக் குழந்தைகளை தெருவில் எடுத்துப் போய் விளையாட்டுக் காட்டி வைத்துக்கொள்வது, தனக்குத் தகுந்த தோழிகளுடன் சோகி, அம்மானை, பாண்டி முதலிய விளையாட்டுக்களை விளையாடுவது, பாட்டுக் கற்றுக்கொள்வது, கும்மி, கோலாட்டம் அடிப்பது, இந்தவிதமாக, பத்துப் பன்னிரண்டு வயது மட்டும் வளருவார்கள். பிறகு, பெற்றோர்கள் கலியாணம் பண்ணிக் கொடுப்பார்கள். அதன்பின், தினந்தோறும் வீட்டில் பெரியவர்களிடத்தில் படித்துக்கொண்டிருந்து, பதின்மூன்று பதினான்கு வயதாகையில், அத்தை பாட்டியிடமோ, தாயாரிடமோ வீட்டுவேலைகளைச் சிறுகச் சிறுகக் கற்றுக்கொள்வதும், ஜலமெடுத்துச் சமையல் செய்வதும், பழகி வருவார்களாம். அந்த நாளிலே, இந்தக் காலத்தில்போல், பத்துப் பன்னிரண்டு வயதிலேயே பெண்கள் பெரியவர்களாகிவிட மாட்டார்களாம். பதினைந்து பதினாறு வயதில்தான் பெரியவர்களாவார்களாம். இதற்குள் பெண், தைரியமுள்ளவளாயும், படிப்பும் வீட்டு வேலைகளும் தெரிந்தவளாயும், குடித்தனத்துக்குச் சரியாய் எல்லாம் அறிந்தவளாயு மிருப்பாள். பெண்கள் வயது வந்து புக்ககத்துக்குப் போகும்பொழுது, வீட்டிலுள்ள பெரியவர்கள், இத்தனை நாளும் வசனங்களாகவும், கதைகளாகவும் வேண்டியமட்டும், தினந் தினம், நல்லவர்களைப் பற்றிச் சொல்லி அப்படி யிருக்கவேணும் என்றும், கெட்டவர்களைப் பற்றிச் சொல்லி இப்படியிருக்கக் கூடாது என்றும், வளர்த்துவந்தது போதாமல், "அம்மா, நீ நல்லவள் என்று பேரெடுக்க வேணும்; பொறுமையுடனிருக்க வேணும்; உன் வீட்டிலுள்ள பெரியவர்கள் சொல்கேட்டு, அமரிக்கையும் மரியாதையு முள்ள பெண் என்றும், புத்திசாலி யென்றும் சொல்லும்படி இருக்கவேணும். 'தான் அடங்கத் தன் குலம் அடங்கும்.' அதனால், நீ நல்லவளாய், மாமியார் சொற்படி நடந்து, மரியாதையோ டிருந்தால், நம்ம குலத்துக்கு நல்ல பேருண்டு" என்றும், பூமியில், தாயார் தகப்பனார் மாமியார் மாமனார் பர்த்தா குரு, இவ்வளவு பேரும் தெய்வத்துக்குச் சமானமாவர்" என்றும், எத்தனையோ நல்ல போதனைகளைச் சொல்லி அனுப்புவார்களாம். புருஷன், முதலிலேயே நல்ல

குருவினிடம் தன் வயது வருமட்டும் நல்ல போதனைகளைக் கேட்டும், நன்னடத்தையோடு நன்றாய்ப் படித்தும், குடித்தனம் பண்ண வருவதும்; பெண் இவ்வளவு நன்றாய் வளர்ந்து, நல்ல போதனைகளுடன் வந்து சேரவே, இவர்கள், வாழ்க்கையில், இரண்டு உடலும் ஓர் உயிரும் போலாகி, சந்தோஷமாய் மனம் ஒத்து, பெரியவர்கள் சொல் கேட்டு, அவர்களை ஆதரித்து, விருந்தினரை உபசரித்து, நல்ல காரியங்களைச் செய்து, தர்மப்படி நடந்து, குழந்தைகளைப் பெற்று, அவர்களை நன்றாய்ப் பழக்கி வளர்த்துப் படிப்பிப்பது, பரம்பரையாய் வந்துகொண்டிருந்ததாம். வீட்டிலுள்ள பெரியவர்கள், தங்கள் குழந்தைகள் சரியான வயது வந்து குடித்தனம் பண்ணுங் காலத்தில், சிலர் வானப்பிரஸ்தாச்சிரமத்திலும், சிலர் வீட்டிலேயே யிருந்து ஜெபம், தெய்வ பூஜை இவைகளைச் செய்தும், முக்தி மார்க்கத்தைத் தேடி, தெய்வ சிந்தனையிலிருப்பார்களாம். ஆனால், எல்லா மனிதர்களும் ஒன்றுபோல் நல்லவர்களா யில்லை என்றாலும், இந்தக் காலத்தைப்போல், நூற்றுக்கு எண்பது புருஷர்களும், நூற்றுக்கு இருபது பெண்டிர்களும் கெட்டவர்களா யிராமல், அந்த நாளிலே, நூற்றுக்குப் பத்துப் புருஷர்களும், நூற்றுக்கு இரண்டு பெண்களும் கெட்டவர்களா யிருப்பார்களாம். அப்படிப்பட்ட கெட்டவர்களை, இந்த நாளில் போல், "யார் எப்படிப் போனாலென்ன? யார் யாரைப் பார்த்துக் கேட்கிறது?" என்று இராமல், ஊரிலுள்ள பெரியவர்கள் நல்லவர்கள் அதிகாரிகள் எல்லாருஞ் சேர்ந்து, அவர்களைக் கூப்பிட்டு, நல்ல புத்தி சொல்லி, "இப்படி யிருக்கக்கூடாது" என்று, நல்லதனமாயும், அதட்டியும், சொல்வார்களாம். அதற்குக் கேளாமல் இரண்டொருத்தர் இருந்தால், அவர்களைத் தங்கள் கூடச் சேர்த்துக்கொள்ளாமல், அவமதித்து விடுவார்களாம். "இவர்கள் சொல்வது நல்லதுதான்; நாம் இப்படிக் கெட்ட நடத்தையி லிருக்கக் கூடாது" என்று தங்களுக்கே தெரிந்து திருந்தாவிட்டாலும், ஊரில் எல்லாரும் அவமதிக்கிறார்கள் என்ற எண்ணத்திற்காகவாவது, "நான் அப்படித்தான் இருப்பேன்: என் இஷ்டம்" என்று சொல்லாமல், உள்ளுக்குள் நேரா யிராவிட்டாலும், வெளிப் பார்வைக்கு நேராய் நடப்பார்களாம். பிறவியிலுள்ள கெட்டதனம் போகாவிட்டாலும், நல்லவர்கள் சேர்க்கையினாலும் நல்ல போதனையினாலும், அநேகம் பேர்கள், அந்த நாளில், நல்லவர்களாகவே இருந்தார்களாம்.

(தொடரும்)

சட்ட விஷயம்

1. பாலிய விவாகத்தின் பலன்—அலிபாக் ஸெஷன்ஸ் கோர்டில், ஏப்ரில் மாதத்தில் விசாரிக்கப்பட்ட ஒரு கேஸின் விவரம்:— மாகத் தாலூகா அம்போலி கிராமத்தில் பலராமன் என்ற தச்சன் பார்வதி என்ற ஒரு சிறு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டான். அவனுக்கு வயது 35; பெரிய தடியன்; பெண், 14 வயதுக்குட்பட்ட சிறுமி. அவளுடன் கூடி வாழ விரும்பி அவன் செய்த இம்சையைப் பொறுக்கமாட்டாமல், அதைக் காட்டிலும் சாவதே சுகமெனக் கருதி, பார்வதி, வீட்டிலே தீயைக் கொளுத்திவிட்டாள். வீடு வெந்து குட்டிச்சுவராயிற்று; நல்ல வேளை, ஒருவரும் சாகவில்லை. வீட்டில் நெருப்பிட்டதற்காக, பார்வதி, இந்தியன் பீனல் கோர்ட்டின்படி குற்றவாளியானாள். ஆயினும், அவள் குற்றத்தின் காரணத்தையும், அவள் பட்ட இம்சையையும் கவனித்து நியாயாதிபதி, எவ்விதத் தண்டனையும் அவளுக்கு விதிக்காமல், இனிமேல் அவள் நல்ல நடக்கையுள்ளவளாயிருக்க ஒரு ஜாமீன் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு, அவளுடைய அண்ணனிடம் அவளை ஒப்படைத்து விட்டார். அதே நியாய சபையிலே, இதே மாதிரியான மற்றொரு கேஸ், பெப்ரவரி மாதத்தில் நடந்து, இப்படியே முடிந்ததாம்.

மதிப்புரைகள்

குறள் நானூறு *

சென்னை, திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் தலைமையாசிரியர் ஸ்ரீ P. A. சுப்பிரமணிய ஐயரவர்கள், B.A. L.T., எழுதியது.

ஸ்ரீமான் மாதவையரவர்கள் இப்புத்தகத்தைப் பதிப்பித்ததற்கு தமிழுலகத்தார் யாவரும் அவரிடம் நன்றியறிவு பாராட்டுதல் வேண்டும். அறம் பொருள், இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களை நாடித் தமக்கும் பிறர்க்கும் பயன் படுமாறு தம் ஜீவியத்தை நடாத்த விரும்புவோர் யாவருக்கும் எக்காலத்தும் துணை நின்றுதவும் அனுபவஞானம் செறிந்துள்ள இந்நூல்

*பஞ்சாமிர்தம் ஆபீஸ், மயிலாப்பூர்—விலை 0–4–0; டச்லேன்—உயர்ந்த காகிதம் – 0–6–0

யாவராலும் தமிழ்வேத மெனப் போற்றப் பெற்றுள்ள தாயினும், வெகு சிலராலேயே தற்காலம் ஓதப்படுகின்றது. அதற்குக் காரணங்கள் பலவுள. தமிழ்ப் பாஷையைப் பயிலுவதில் ஊக்கம் மிகுந்து, அது காரணமாக திரவிய லாபம் உண்டேனும் இலதேனும் மதியாது அதில் தேர்ச்சி பெறுவோர், வரவரக்குறைவு என்பது யாவருக்கும் அனுபவசித்தம். அன்றியும் அத்தகையோர் வெகுபேர் இருப்பினும் அவர்களுக்குப் பாடம் சொல்லத் திறமையும் அவாவும் உள்ள படிப்பாளிகளும் முன்போல இலர். இதன்றியும், கலாசாலைகளில் இந்நூலைக்கற்பதும் அரிதாய்விட்டது. பூர்வம் எப். ஏ., பி. ஏ., பரீட்சைகளுக்கும் தமிழ் (அல்லது வேறு சுதேசபாஷை) கட்டாயபாடமாக ஏற்பட்டிருந்தபோது, பி. ஏ. பரீட்சைக்குத் திருக்குறளில் சில அதிகாரங்களைப் பாடமாக வைப்பதுண்டு. அது காரணமாகப் பிரதி வருஷமும் சுமார் ஆயிரம் மாணாக்கர்கள் இக்கிரந்தத்தின் சில பாகங்களைப் படித்து வந்தனர். அத்தகைய ஸௌகரியமும் இப்பொழுதில்லை. ஆதலின் இந்நூலின் சிறப்பை அறிய விரும்புவோர் தாமே பிரயாசைப்பட்டு ஒழிவு நேரங்களில் படித்தாலல்லது அவ்விருப்பத்தைப் பூர்த்திசெய்துகொள்ளல் இயலாது.

அத்தகையோர்க்கு இப்புத்தகம் மிக்க நன்மை தரும். அந்நன்மை இருதன்மை யுடையது. குறள் நூலிலுள்ள ஆயிரத்து முன்னூற்று முப்பது பக்களும் அரிய பெரிய விஷயங்களையே உணர்த்துபவை யாயினும், அவைகளுட் பல ஒரே அபிப்பிராயத்தையே வற்புறுத்துவனவாயும், தற்கால ஜன சமூகவாழ்வுக்கு ஒவ்வாமலோ அல்லது அவசியமில்லாமலோ இருக்கின்றன. உதாரணமாக, ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப்பாக்கள் உளவாயினும், ஊன்றிப் பார்க்கின் ஒவ்வொரு குறளும் அவ்வதிகார விஷயத்தைத் தழுவின ஒவ்வோர் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதாயினும், அவ்வதிகாரத்து முக்கிய விஷயத்தை யடக்கியவையென இரண்டொரு பாக்களைக் குறிப்பாய்ப் பொறுக்கி யெடுத்தல் சாத்தியமாகும். அன்றியும், பொருட்பால் அங்கவியலிற் சில அதிகாரங்களும், காமத்துப்பாலிற் சில அதிகாரங்களும், தற்கால வாழ்வினர்க்கு வேண்டாதவையெனச் சொல்லல் பொருந்தும். இத்தகைய கருத்தைக் கொண்டே ஸ்ரீமான் ஐயரவர்கள் அநேக பாக்களைக் களைந்து, முக்கியமான நானூறு பாக்களை இப்புத்தகத்துள் தொகுத்துள்ளனர்.

ஒழிவு நேரத்தில் இந்நூலைக் கற்க விரும்புவோர் பரிமேலழகருரையைக் கொண்டு பாக்களின் கருத்தை உணர முயல்வது எளிதல்ல. நான் பி.ஏ. வகுப்பில் வாசித்த காலத்தில், குறள் வெண்பாக்களை விடப் பரிமேலழகரது உரையே கடினமாகத் தோன்றியது, எனக்கும் இன்னும் ஞாபகமிருக்கிறது. அவ்விதமே என்போல சாமானியப் பயிற்சியுள்ளவரனைவர்க்கும் அனுபவம் இருக்கு மென்பது திண்ணம். இதனை யுணர்ந்து, ஐயரவர்கள் எளிய நடையில், தமிழிலும் ஆங்கிலத்திலும் பாக்களுக்கு உரையெழுதியுள்ளது மிகவும் பாராட்டத்தக்கது.

மேற் கூறியவாறு ஒழிவு நேரத்திற் படிப்பவர்க்கு, மாத்திரமன்றி ஹைஸ்கூல்களில் படிக்கும் மாணவர்களுக்கும் இந்நூல் பயன்படு மென்பது எனது துணிபு. நான்காவது ஐந்தாவது பாரத்தில் தமிழை A-group ப்பாடமாகப்பயிலும் சிறுவர்களுக்கு, இப்புத்தகத்தை உபாத்தியாயர்கள் ஓர் பாடமாக அமைத்துக் கற்பித்தால், அவர்களுக்குத் தமிழ்ப் பாஷையில் அபிமானம் மிகுமென்று நான் உறுதியாய் நம்புகிறேன்.

இத்தகைய நன்மை பயக்கத்தக்க புத்தகத்தில் குற்றம் கண்டுபிடிக்கப் புகுவது பொருந்தாத காரியமாகும். ஆயினும்,

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.

என்ற குறளும், அது போன்ற வேறு சில பாக்களும் ஏன் இதில் காணப் படவில்லை யென்றும், 317-வது இலக்க முள்ள குறள் ஏன் சேர்க்கப் பட்டுள்ள தென்றும் சிலர் யோசிப்பர். மேலும், சிற்சில இடங்களில் ஆங் கில மொழிபெயர்ப்புத் தமிழ் மொழிபெயர்ப்பை யொத்து அர்த்தபுஷ்டி யுள்ளதாய்க் காணப்பட வில்லையெனச் சிலர்க்குத் தோன்றலும் கூடும்.

2. ஜுபைதா, அல்லது பழிக்குப்பழி :—['தாருல் இஸ்லாம், பத்தி ராதிபர் ஸ்ரீ பா. தாவுத்ஷா சாஹிப், பி. ஏ. எழுதியது — விலை 0–4–0 ; தபாற் பெட்டி நெ. 15, சென்னை] முஸ்லீம்கள் வாழ்க்கையைப்பற்றிய ஒரு சிறு கதைப் புஸ்தகம். எளியநடையிலிருக்கிறது.

3. பாாலுயிர் ரஹ்மானி என்னும் முஹம்மதிய லா :—[மௌல்வி மு. அப்துர் ரஹ்மான் சாஹிப் தொகுத்தது. விலை 0-4-0. தபாற் பெட்டி நெ. 15, சென்னை] முஸ்லீம்களைப்பற்றிய சட்டதிட்டங்களை அறிய விரும்பு வோர்க்கு உபயோகமானது. தெளிவான நடையில் எழுதி, செவ்வையாய் அச்சிட்டுப் பைண்டு செய்யப்பட்டிருக்கிறது—

4. தமிழ்ச்சுவடிகளின் விவரமான ஜாபிதா:—

[பண்டிதர் L. உலகநாதபிள்ளை தொகுத்தது. முதல் தொகுதி - 531 பக்கங்கள் - தஞ்சாவூர் ஸ்ரஸ்வதி மஹால் லைபிரரி கமிற்றியின் கௌரவ காரியதரிசியிடம் கிடைக்கும்: விலை ரூ. 2-0-0 ; தபால் கூலி 0-7-0] 'உலகத்திலுள்ள புஸ்தகசாலைகளி லெல்லாம் மிகப்பெரிதும் முக்கியமான தும் இதுவே போலும்' என்று, டாக்டர் பர்னல் புகழ்ந்து கூறிய, தஞ்சா வூர் ஸரஸ்வதி மஹாலிலுள்ள தமிழ்ச் சுவடிகள் லிகிதப் பிரதிகளின் விவா மான ஜாபிதா முதல் தொகுதி கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு சுவடியின் பொருளடக்கமும், நிலைமையும், அதில் அடங்கிய செய்யுள்களில் முதல் கடைகளும், நூலாசிரியரைப்பற்றிய விவரமும் குறிக்கப்பட் டிருக்கின்றன. அச்சேறியன, இன்னும் அச்சிடப்படாதன, இருவகையையும் இதிற் காண லாம். இவ்வண்ணம் இந்தத் தொகுதியில் 659 சுவடிகளின் விவரங்கள் அட ங்கியுள; தமிழ் அபிமானிகள் பலரும் வாங்கிப் போற்றுதற்குரியது. இந்த லைபிரரி அரசாங்கத்தாராலும் சென்னைச் சர்வகலாசங்கத்தாராலும் தக்கபடி பேணி ஆதரிக்கப்பட வில்லை; பல பாஷைகளிலே இதிலுள்ள சுவடிகளெல் லாவற்றையும் ஆராய்ந்து ஜாபிதா செய்து, அவற்றில் முக்கியமானவற் றை அச்சேற்றுவித்தல், இவர்களின் கடமையாகும். —மா.

பத்திராதிபர் குறிப்புக்கள்

1. தமிழ்க் குருகுலம்.—சில மாதங்களாகத் தமிழ்ப் பத்திரிகைகள் பலவற்றிலும் இதுவே முழக்கம்; இப்பொழுதோ, பிரசங்க மேடை யேறி, மடிபிடி அடிதடி மகிமையும் பெற்று, நியாய சபையும் புகுந்துவிட்டது. இதைப் பற்றி என் பத்திரிகைக்கும் இரண்டொரு கட்டுரைகள் கிடைத்தன; ஆனால் இது வரை நான் இடங்கொடுக்க வில்லை. இவ்வளவு மிதமிஞ்சிப் பெருகி, நாட்டைச் சீர்குலைத்துக் குழப்பிக் கொண்டிருக்கும் விஷயத்தைப் பற்றி, இன்னும் மௌனஞ் சாதித்தல் தகாதென நினைந்து, சில கூறத் துணிகிறேன். தமது தாய்தந்தையர் மேற்பார்வையில் குழந்தைகள் கல்வி பயிலுவதைவிட, குருகுலவாசக் கல்விப்பயிற்சி சிறந்ததென்று, நான் மதிக்க வில்லை; திருஷ்டி தோஷத்திலும், நமக்குள் நடைபெறும் சாதி யாசாரங்கள் பலவற்றிலும், எனக்கு நம்பிக்கை யில்லை; நான் அவற்றை அனுஷ்டிப்பது மில்லை; இந்த விவாதத்தின் மூல புருஷர்கள் இருவரையும் நான் நேரில் அறியேன்; நாட்டில் நடைபெறும் பல கட்சிகளில் ஒன்றையும் நான் சேர்ந்தவ னில்லை; நமது அருமைத்தாய் நாடு தலை நிமிர்ந்து, அடிமையும் மிடிமையும் அறியாமையும் அறவொழிந்து, வணங்கா முடித் தனி அரசியாகி, பண்டைப் புகழிலும் பதின் மடங்கு புகழ் அடைந்து வாழவேண்டும் என்னும் பேரவாவிலே, எவருக்குமே நான் பின்னிடுபவ னில்லை; இந்தக் காரணங்களினால், ஒருதலைப்படாத என் வெள்ளுரைகளையும் இருகட்சியாரும் தள்ளாது கொண்டு சிந்திப்பரென நம்பி, இதை எழுதலானேன்: டாக்டர் நாயுடு, ஸ்ரீமான் ஐயர், இருவருமே, சாதிபேதம் சமயபேதம் பாராட்டும் சிறுமை நீங்கிய பெரியோர் என்பதை, யாவரும் அறிவர்: பஞ்சமரோடு பந்தி போஜனம் செய்வதை ஐயர் இழிவாகக் கருதமாட்டார்; பார்ப்பாரோடு பந்திபோஜனம் செய்வதைப் பெருமையாகவேனும், பஞ்சமரோடுண்பதைச் சிறுமையாகவேனும், நாயுடுவும் கருதமாட்டார். எனவே, இந்த வழக்கில், இவர்களுக்குத் தனித்தனியே ஆகவேண்டிய காரியம் எதுவு மில்லை. நாட்டிலே தமது பொதுஸ்தானத்தையும், அதற் குரியவனவாகத் தாம் கருதும் கடமைகளையும் எண்ணியே, இவர்கள் வழக்காடுகின்றனர். சேரன்மாதேவிக் குருகுலம் தொடங்கி இரண்டு வருஷங்களுக்குமேலாயின; இந்தச் சொற்போர் தொடங்கியோ, சிலமாதங்களே

ஆகின்றன. ஆரம்ப முதல் இதுகாறும் இல்லாதது, இந்த வாதத்துக்கு அடிப்படையாகும்படி, சில மாதங்களுக்கு முன் என்ன நேர்ந்திருக்கிறதென்பது விளங்கவில்லை. அப்படி யொன்றும் புதிதாய் நிகழவில்லை என்றால், 'இந்த வழக்கின் உண்மைக் காரணம் வெளிப்படையாய்க் கூறும் காரணம் அன்று, மற்றொன்றும், அவலை நினைத்துக் கொண்டு உரலை யிடிக்கும் செயலே இது' என்று தான், நடுநிலை நோக்கத்துக்குத் தோன்றும். குருகுலத்துக்குப் பொருள் சேர்க்கும் காலத்தில், 'பந்தி போஜனத்தில் எவ்வித வித்தியாசமும் இராது; பிராமணர் தான் சமையல் என்ற நிபந்தனையுமில்லை' என்று கூறி, அதன் பலனாகப் பணத்தைப் பெற்றிருப்பின், அந்தப்பணத்தை யெல்லாம் வட்டியுடன் திருப்பிக்கொடுக்க, ஐயர் கடமைப்பட்டவராவர். அப்படிக்கின்றி, 'என் மனத்தில் நான் அப்படி எண்ணிக் கொடுத்தேன், இப்படி எண்ணிக்கொடுத்தேன்' என்று இப்பொழுது சொல்வோர் பணத்தைக் கேட்குதல், நியாயமாகத் தோற்றவில்லை. பொதுப் பணத்தைக்கொண்டு ஸ்தாபித்த பொதுக் காரியமானதால், நாட்டின் முன்னேற்றத்துக்கும் இக்காலத்துக்கும் பொருந்த, குருகுல வழக்கங்களை இப்போது மாற்றவேண்டும் என்றால், அது வேறு விஷயமாகும்; 'இஷ்ட முள்ள மாணவர் இருக்கட்டும்; மற்றவர் வெளியேறட்டும்' என்று, பணமுதவியோரின் வோட்டுபபடி அதை நடத்தலாம். தக்ஷிணத்திலே, அதிலும் திருநெல்வேலி ஜில்லாவிலே, திடீரென இப்புது வழக்கத்தைத் தானாக ஏற்படுத்தவில்லை என்று ஐயரைப் பழித்தல், நியாயமாகாது.

இது நிற்க: மேல் நாட்டு வெள்ளையர்களிற் சிலர் கீழ்நாட்டாரிடத்துக் காட்டும் (இரத்தத்தில் ஊறியுறைத்துள்ள) உதாசினத்துக்கும் கர்வத்துக்கும் ஓர் உவமானமாக, தென்னிந்திய பிராமணரிற் சிலர் பிராமணரல்லாத தமது சகோதரரிடம் தாமறியாமலே காட்டும் உதாசினமும் கர்வமும்தான் பொருந்தும் என்பதை, நான் அனுபவத்தில் அறிந்திருக்கிறேன்; அதுபோலவே, மகா யுத்தகாலத்திலே ஜெர்மானியர்கள் சிலர் ஆங்கிலேயர் மீது கொண்டிருந்த பகைமைக்கும் பொறாமைக்கும் வெறுப்புக்கும் செல்லாச்சினத்துக்கும் இணையாக, தமிழ் நாட்டிலே பிராமணரல்லாதார் சிலர், தமது பிராமண சகோதரர் மீது கொண்டுள்ள உணர்ச்சிதான் இசையும் என்பதைச் சில நாள்களுக்கு முன்பே நான் தெளிவாய் அறிந்து, மனம் நொந்தேன். பரஸ்பரமான இந்த உணர்ச்சிகள், நமக்குள் பெரும்பாலாரிடத்து அதிகம் காணப்படாமல், சிலரிடத்தில் மாத்திரமே அவ்வளவு முறுகிக் காணுவதை நினைந்து, சந்தோஷப் படுவோம். ஆயின், ஹிந்துக்கள் முஸ்லீம்கள் கிறைஸ்தவர்கள் முதலிய பலர் கூடி நிருமிக்க வேண்டிய சுயராஜ்ய மாளிகை, தமிழ்மக்களுக்குள் சிலரே இவ்வண்ணம் மாறுபட்டுப் பிணங்குவாராயின், எப்படி, என்று, கட்டி முடியும்? 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக் கெளிது' என்

பதின் உண்மையை, நம் நாட்டிலே நாள்தோறும் கண்கூடாக் காண்கின்றோம். இப்படிக் கண்டும், அதன் கொடும் பயனை அனுபவித்தும், நமக்குப் புத்தி வரவில்லையே! அந்தோ! ஒரு நாட்டின் தாலியே போன்ற சுவாதீனத்தோடு, மற்றெல்லா நற்குணங்களையும், இயற்கை அறிவையுமே, நாம் இழந்துவிட்டோம் போலும். என்ன அறியாமை! என்ன பரிதாபம்! அறிவிலும் படிப்பிலும் முதிர்ந்தோர் இருவர், சுயநலங் கருதாத தூய தொண்டர்கள், நாட்டின் நன்மையை நாடிப் பலமுறை சிறைக்குஞ் சென்றவர், இவர்களே தம்முள் ஒத்துழைக்க முடியவில்லையாயின், நமக்கும் சுயராஜ்யத்துக்கும் ஸ்நானப் பிராப்தியு மில்லை என்பது திண்ணம். சித்திரைப் "பாலபாரதி"யில் இவ் விஷயத்தைப் பற்றி ஐயரவர்கள் எழுதி யிருப்பது, அவர் கட்சி நியாயத்தை எடுத்துக் கூறுவதன்றி, அவர் சாந்தத்தையும் சாத்துவிக குணத்தையும் நன்கு விளக்குகின்றது. ஐயரவர்கள் குருகுலத் தலைமையை ராஜிநாமாக் கொடுத்து விட்டதால், இவ்விஷயத்தை இனிது நிறைவேற்றுதல் நாயுடு காருவைப் பொறுத்ததாகும். போர் முனையிலே வீரமும அஞ்சாமையும் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு, போர் முடிந்த சமாதானச் சமயத்திலே, நிதான புத்தியும் மனவிசாலமும் தீர்க்க திருஷ்டியும் இன்றியமையாதன என்பதை, ஐரோப்பாவின் தத்தளிப்பே நிரூபிக்கும். கல்வி பயிலுவதில் மனச்சாக்ஷி சம்மந்த மில்லை; அதனால், கல்வியைக் கட்டாயமாக்கிப் புகட்டலாம்; மத விஷயத்திலும், மதச் சார்பென மதிக்கப்படும் ஆசார அநுஷ்டான விஷயத்திலும், கட்டாயம் ஏற்ற உபாய மன்று; போதனையினால் மனத்தைத் திருப்பிய பின்பே, கட்டாயத்தின் உதவியை நாடுதல் தகும். துரும்பைத் தூணாக்கிவிட்ட இந்தக் குருகுல விஷயம் பெரிதன்று; பிராமணரும் அப்பிராமணரும் ஒத்துப் பிழைக்கும் வழியை நாடி, இருவருக்கும் பொதுவான தடைகளைத் தாண்ட முயலுவதே முக்கியம்.

பின்னுரை—மேற் கண்டபடி எழுதி அச்சேற்றிய பிறகு, குருகுல ஆரம்பத்தில் சமபந்தி போஜனம் நடந்து வந்ததென்றும், பிற்பாடே சாதிபேதம் ஏற்பட்டதென்றும், தெரியவருகிறது. இது மெய்யாயின், அத்வைத வேதாந்தி ஒருவன் அநுமார் கோயில் பூசாரியாக மாறினது போலவேயாகும். "எண்ணித் துணிக கருமம்" என்பதை மறந்து, முன் வைத்த காலைப் பின் வைத்தது, தவறென்பதிற் சந்தேக மில்லை. ஆயினும், பிராமணரையும் சாதி பேதங்களையும் இகழ்வோர், இரண்டு பிராமணச் சிறுவர்களின் சாப்பாட்டு விஷயம், தமிழ் நாடு முழுவதையும் கலக்கி விட்டதைக் கவனிக்கக் கடவர். நாம் சுயராஜ்ய பதவிக்கு அருகரில்லை என்று, இனி எவரே கூறத் துணிவர்!

2. திருவாங்கூர் திவான்—வாட்ஸ் என்னும் ஐரோப்பியர் (சிலர், ஆங்கில—இந்தியர் என்பர்; சிலர் அது

வு மில்லை என்பர்) திவானாக நிய மிக்கப் பட்டிருக்கிறார் என்பது வதந்தி. மகா ராணி ரீஜண்டு அவர்கள் விருப்பத்தின் படியே இது நிகழ்ந்த தென்பர்; அங்ஙனமாயின், மகாராணியாரின் மனோ விசாலமும் தைரியமும் மெய்ச்சத் தக்கன; இந்தியா கவர்ன்மெண்டின் பிற்பலமும் இருச்கு மென்பதில் ஐய மில்லை. இவ்வளவு விரிந்த நோக்கமுள்ளவர், சத்திபாக்கிரக விஷயத்தில்மாத்திரம்,ஏன் இக்குணத்தைக் காட்டிலர் என்பது விளங்க வில்லை. இந்த மனத்தாராளத்தையும் தீரத்தையுங்கொண்டு, சாதிமதபேதங்களைக் கவனியாது, மற்றெல்லா விதத்திலும் பொருந்திய ஓர் இந்தியனைத் திவானாகத் தெரிந்தெடுத்திருப்பின், எவ்வளவோ சிலாக்கியமா யிருந்திருக்கும், சிறிய சில்லாக்களை மட்டுமன்றிப் பெரிய மாகாணங்களையும் ஆள வல்ல இந்தியர்கள் மலிந்து காணும் இந்நாளிலே, திருவாங்கூர் திவான் பதவிக்கு இந்தியன் எவனுமே யில்லை என்று கூறுதல் இயலாது.

3. ஜப்பானில் ஜனநாயக மேலீடு—படித்தவன், படியாதவன், ஏழை, தனவான், என்னும் பேதமேயின்றி, ஜப்பானிலே ஜனங்களுக்கெல்லாம் ஆளுக்கு ஒரு 'வோட்' என்றாகிவிட்டதாம். மேலையர் போர் முறைகளைப் போல் அரசியல் முறைகளையும் கைக்கொண்டு பயின்று முன்னேற்றம் அடைவதில், இந் நாட்டினர் அதிசூரர்களாய்க் காண்கின்றனர்.

4. விசாரணைக் கமிற்றிகள்—வரி விசாரணைக் கமிற்றியின் நாடகம் ஆடி முடிந்து, அதைச் சேர்ந்தவர்கள், கோடை காலத்துக்குச் சௌகரியமாய், பங்களூரிலோ உதக மண்டத்திலோ ஆறு மாதம் தங்கி, தங்கள் ரிப்போர்ட்டை எழுதப் போகிறார்கள்; அதற்குள், பொருளாதார விசாரணைக் கமிற்றி வந்து விட்டது. இவ்விதக் கமிற்றிகளில் பல, வேறு வேலையற்ற பெரிய மனுஷர்களுக்கு வேண்டிய பண சௌகரியமும் பிரயாண சௌகரியமும் சரீர ஆரோக்கியமும் கௌரவமும் தாராளமாய் உதவுவதன்றி, தேசத்துக்கும் ஏழைகளுக்கும் எவ்வித நன்மையும் செய்வ தில்லை; வேறு விதமாய் உபயோகப்படக் கூடிய பணத்தையும் பாழாக்குகின்றன. பதினாயிரக் கணக்காய், லக்ஷக் கணக்காய்ப் பொருளைச் செலவழித்து, இந்தக் கமிஷன்களும் கமிற்றிகளும் தமாஷாகத் திரிந்து, தங்கள் சிபார்சுகளை அறிக்கை செய்வதும்; அப்பால், அவற்றின்படி செய்யப் போதுமான பண மில்லை என்றேனும்; அல்லது அதற்குள் வேறொரு பெரிய கமிற்றியோ கமிஷனோ ஏற்பட்டு விடுவதனாலேனும், இந்த ரிப்போர்ட்டுக்கள், எலிகளுக்கும் கறையான்களுக்கும் இரையாக, ஒரு மூலையில் எறிந்து விடப்படுகின்றன. இந்தக் கமிற்றி கமிஷன்கள, தற்கால ராஜாங்க முறையில், ஒரு கொள்ளை நோய் போல், அடிக்கடி தலை கிளம்பி, ஏழை நாட்டின் சொற்பப் பணத்தையும் பாழாக்கி வருகின்றன.

6. இலங்கை முத்துச் சலாபம்—இதைப்பற்றி மற்றோரிடத்தில்

(57-ம் பக்கம்) காணலாம். "கடவுள் கிருபை இருந்தால்" துரைத்தனத்தார் அடுத்த ஆண்டிலும் இலாபம் பெறுவார்களாம்.

"கடவுள் - கிருபை" யாருக்கிருந்தால்? முத்துச் சிப்பிகள், ஜீவ ஜந்துக்கள்; முத்துக்களோ, கேவலம், அலங்கார ஆபரண வஸ்துக்கள்; முத்துக்கள் இல்லாவிடில், மனிதர்கள் துன்பமுறுவர், நோயுறுவர் என்று, எவரும் சொல்லவே முடியாது அப்படியிருக்க, மனிதருடைய அலங்காரப் பிரிய நிமித்தம், முத்துக்களுக்கு ஒரு போலி மதிப்பை ஏற்படுத்தி வைத்துக்கொண்டு; பிறகு, அவற்றை அடையும் பொருட்டுக் கோடிக்கணக்கான சிவசந்துக்களை, மனிதன் கண்ணிலும் தென்படாமல், அவனுக்கு எவ்வித இமிசையும் செய்யாமல் கடலுக்குள் ஆழ்ந்து கிடக்கும் உயிர்ப் பிராணிகளை, வதைத்துக் கொல்லுதல், எவ்வளவு பாவமாகும்! 'பர்'களையும் இறகுகளையும் ஐரோப்பிய சீமாட்டிகள் அணிய வேண்டி, எத்தனையோ லக்ஷம் மிருகங்களும் பக்ஷிகளும் கொல்லப்படுகின்றன. பட்டுடைகளையும் முத்து மாலைகளையும் அணிய விரும்புவதால், எத்தனை கோடி பட்டுப்பூச்சிகளும் முத்துச் சிப்பி நத்தைகளும் உயிரை இழக்கின்றன! மனிதர் காட்டுத்தன மாறி, நாகரிகம் அடைந்து விட்டார் என்று, இன்னும் எப்படிச் சொல்வது?

ஸர். பி. தியாகராஜ செட்டியார்— இவர், ஏப்ரில் 28உ இரவு, 74-வது வயதில் காலஞ் சென்றார். தேவாங்க குலத்தைச் சேர்ந்த இக்கனவான், ஸர்க்கார் உத்தியோகத்திலே ஆங்கிலப் படிப்புக்குப் பெருமதிப்புள்ள காலத்திலே, 52 ஆண்டுகளுக்கு முன்பே, பி. ஏ.

பரீக்ஷையில் தேறிப் பட்டம் பெற்றாராயினும், சேவகத்தை விரும்பாது, தன் குல விருத்தியையும் வியாபாரத்தையுமே கைக்கொண்டார். சென்னை நகர பரிபாலன சபை, பச்சையப்ப முதலியார் தரும ஸ்தாபன நிருவாகக் கமிற்றி முதலிய பொது நல வேலைகளில், ஒரு நல்ல முறைக்குமேல் சுயநயம் கருதாது உழைத்துப் புகழ் பெற்றவர். ஆதி முதல் வருணாசிரம தருமத்தில் நம்பிக்கையும் சிரத்தையுமுள்ளவராயினும், தனக்கு நேர் எதிரிடையான டாக்டர் மாதவநாயருடன் சேர்ந்து, அப்பிராமணர் இயக்கத்தைத் தொடங்

கியது முதல், இவர் கொள்கைகளும் செயல்களும் வரவர மாறி, காரமும் கடுமையு மிகுந்த பிராமணத்துவேஷி • யாகிவிட்டார். நாயர் இறந்தபின், இவர், அப்பிராமணர் கட்சியின் தலைவராயினர். அரசியல் திருத்தச் சட்டசபையில் அப்பிராமணர் கட்சி பலக்கவே, அக்கட்சியின் தலைவரான இவரை, மந்திரத் திரிமூர்த்திகளை அமைக்கும்படி கவர்னர் வேண்டினர். அது முதல், இவர், துரைத்தனத்தாரின் நன்மதிப்பையும், திவான் பகதூர், . ஸர், என்ற பட்டங்களையும் பெற்று, தன் கட்சியின் கொள்கொம்பாய் விளங்கி வந்தார்: எப்பொழுதும் தூய வெள்ளை உடுத்து, மனத்தில் மிக்குள்ளதை, முகத்துச் சிரிப்போ கடுப்போ கள்ளம் கரவின்றிக் காட்ட, சென்ற இட மெல்லாம் சிறப்பும் கவுரவுமுமாக வாழ்ந்து வந்த இப்பெரியோரை, சென்னை மாநகரம் எளிதில் மறந்துவிடாது. ஆடம்பர மில்லாத இவர் வாழ்க்கையும் நடை யுடை பாவனைகளும், யாவராலும் பாராட்டற்பான. இவர் ஆன்மா அமைதியைப் பெறுக,

அ. மாதவையர்

அறிக்கை

பழைய சந்தா நேயர்களுக்கு:—

முதன் மாலை 12 காசுகளையும் சேமித்து வைத்திருப்பவர்கள், அவைகளைச் சேர்த்துப் புஸ்தகமாக பைண்டிங் செய்யும்படி, இந்தக் காசுடன் முதல் வருஷத்து அட்டவணையை அனுப்பியிருக்கிறேன். அதை முகப்பில் வைத்துப் புஸ்தகத்தைக் கட்டடஞ் செய்பலாம். 12 காசுகளும் ஒழுங்கா யில்லாமல், நடுவில், ஏதாவது தவறியிருந்தால், அப்படித் தவறிய காசு ஒவ்வொன்றுக்கு ஆறணு வீதம் பணமோ, ஸ்டாம்போ, அனுப்பினுல், கூடியவரை பழைய காசுப் பிரதிகள் அனுப்பப்படும். 3-வது (ஜூன்—ஆனி) காசு மாத்திரம் பிரதிகள் கையிருப்பில்லை. இப்படிப் புஸ்தகமாகக் கட்டடம் செய்து கொள்ளச் சௌகரிய மில்லாதவர், அட்டவணையுடன் பைண்டிங் செய்தமுதல் மாலை, பிரதி யொன்றுக்கு ரூ. 5 வீதம், வி. பி. யில் பெற்றுக் கொள்ளலாம்; தபாற் கூலி வேறு. பழைய சந்தாதார் இல்லாதவர்க்கு, இந்தப் புஸ்தகப் விலை ரூ. 5-8-0 ஆகும்.

மானேஜர், "பஞ்சாமிர்தம்"

பிழை-திருத்தம் (9-ம் பக்கம்.)

படம் தலைகீழாக மாறி விழுந்திருப்பதை

திருத்தமாகக் காட்டுவது

CXXV

ஆல்ப்ஸ் மலையில் புயற்காற்று

கராச்சி பட்டுச் சேலைகள்

விலை சரசமாகக் கிடைக்குமிடம்

இதுவே !

தென் இந்தியா ஸ்டோர்ஸ்

கேதாரகட்டம், காசி.

இந்தச் சேலைகள் தினந்தோறும் துவைத்துக் கட்டக் கூடியது. விளிம்பில் ஜரிகை களாவர் கரை, ருத்திராக்ஷக்கரை போடப்பட்டது. ஊதா, ரோஸ், ஸ்நப் (Snuff,) Pink, பச்சை, கருப்பு மேக வர்ணம் முதலிய கலர்களில் கிடைக்கும், :—

12 மு. 2½ அகலம் சேலை 1-க்கு ரூ. 28 முதல் 35 வரை.

16 × 2½ அகலம் சேலை 1-க்கு ரூ. 35 முதல் 50 வரை.

18 × 2½ அகலம் சேலை 1-க்கு ரூ. 40 முதல் 50 வரை.

விலாசம் தெரிவிப்போர்களுக்கு கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

Address:—

MANAGER,
South India Stores,
KEDARGHAT,
Benares City, U. P.

சுதேசமித்திரன் புஸ்தகசாலை

ஸ்ரீமத் பகவத்கீதை:—

சி. ஆர். ஸ்ரீநிவாஸையங்கார் இயற்றியது

காலிகோ பயிண்டு ... 3—0—0

ஆழ்வார்கள் திவ்ய சரித்திரம்:—ஷையார்

இயற்றியது ... 1—8—0

தீர்க்க தரிசிகள்.—சங்கரர், இராமானுஜர்,

மத்வர், புத்தர், குருநானக், முகம்மது

நபி, மகா வீரர் முதலிய எழுவரடங்

கிய சரித்திரக் கொத்து—காலிகோ

பயிண்டு - தனித்தனி அணு 5. ... 2—8—0

வஸந்தோத்தியானம்:—அல்லது நான்கு

பக்கிரிகள் கதை - பண்டிட் நடேச

சாஸ்திரிகள் இயற்றியது

2 பாகங்கள் ... 3—0—0

இரத்தினமாளிகை ... 0—12—0

பாமாலை ... 0—4—0

P. O. Box 126, MADRAS.

SRINIVASA VARADACHARI & Co.,

PRINTERS & BOOKSELLERS,

MOUNT ROAD, MADRAS.

தமிழ்ப் பிரசுரங்கள்

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. V. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M. A. விலை அணா 10.

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

3. ராஜராஜசோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியா ரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

4. இட்டார்க்கு இட்டபலன்.—ஆசிரியர் மிஸ்டர் J. பொன்னுஸாமி ராவ். விலை அணா 10.

5. திலகவதி.—ஸகோதரி V. பாலம்மாள் எழுதியது. ராவ் ஸாஹெப், S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1-4-0.

6. தமிழ் வசன லக்ஷணம்.—G. தாமோதர முதலியார், B. A. எழுதியது. விலை அணா 12.

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1-6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்—(7-12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

9. சுகாதார போதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.